224

224

சித்ரபாநு - பங்குனி }
ஸுபாநு - சித்திரை }

{ ஸம்புடம் - 2
{ ஸஞ்சிகை - 4

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 MAY 1943
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

ராமஸ்வாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

வ
ரூபா

{ April, 1943
{ Vol. 2, No. 4

JL
இ22ணை11, ரிய
N43·2·4,
210712

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	ஸ்ரீ. உப. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமி	114
2.	செய்திகள்	162
3.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	164

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் அச்சுப் பதிப்பிக்கும்படியாக வ்யாஸங்களைச் சுருக்கி எழுத வேண்டுமென்றும், நல்ல காகிதத்தில் தெளிவாக ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

2. ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்பட்டிருக்கும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 2	சித்ரபாநு ௵ பங்குனி - சித்திரை ௴	ஸஞ்சிகை 4

“அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥”

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாதேவ்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ. உப. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமி

---

(1)

[புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான்]

ஸ்ரீ. உப. வே. ஸௌம்ய நாராயணுசார்ய ஸ்வாமி, "கலௌ ஸம்பவிஷ்யந்தி நாராயணபராயணா: | க்வசித்க்வசித் மஹாபாக த்ராவிடேஷு ச பூரிச:" என்கிற மஹர்ஷி வசநத்தின்படியே இக்கலியுகத்தில் நாராயண பராயணர்கள் பெரும்பாலும் அவதரிக்கும் தேசமென்று சொல்லப்படும் தமிழ்த் தேசத்தில், அதிலும் ஸ்ரீ கோஷ்டீநாதனுடைய நித்ய ஸாந்நித்யத்தினுலே "யோகாத்ர ஸமவாநத்வாத் நித்யம் ஸந்நிஹிதோ ஹரி:" என்கிறபடியே ஸ்ரீமானுன நாராயணனுடைய நித்யவாஸ க்ஷேத்ரமாயும், முத்திதரும் நகரேழில் முக்கியமாய் விளங்குமதான வடமதுரையாகவே விஷ்ணுசித்தரால் பாவிக்கப்பட்டதாய், "நாவகாரியம் சொல்லிலாதவர் நாடோறும்விருந் தோம்புவார், தேவகாரியம் செய்து வேதம் பயின்றுவாழ் திருக்கோட்டியூர்" என்றும், "குற்றமின்றிக் குணம்பெருக்கிக் குருக்களுக் கனுகூலராய்ச், செற்ற மொன்றுமிலாதவண்கையி ஞர்கள்வாழ்திருக் கோட்டியூர்" என்றும், "காசின் வாய்க்கரம் விற்கிலும்கர வாதுமாற்றிலி சோறிட்டு, தேசவார்த்தை படைக்கும் வண்கையி ஞர்கள்வாழ் திருக்கோட்டியூர்" என்றும், அருளிச்செய்கிறபடியே ஜ்ஞாநாநுஷ்டாந பகவத் பக்திகளாகிற பயிர்களுக்கு விளைநிலமாய், நற்பால் அயோத்தியைப்போல நாராயண பக்தி பூர்ணங்களான திர்யக் ஸ்தாவரங்களை யுடைய திருக்கோட்டியூர் என்கிற திவ்ய க்ஷேத்ரத்தில், அதிலும் "ஜநிஷ்வாத்ர ஸம்வம்சே ஜாயதே ஜாயதே த்யாதயச்சவாத்" என்கிறப்போலே உபயகுல சக்தியாலும் ஜ்ஞாநாநுஷ்டாந பக்திகளாலும் ப்ரஸித்தர்களாய், "ஏழாட்காலும் பழிப்பிலோம்" என்கிறபடி, ஸப்தபூருஷ வைஷ்ணவர்களாக இருக்கும் வம்சத்தில் அவதரித்து, அதி பால்ய வயதிலேயே ந்யாய மீமாம்ஸாதி ஸாமாந்ய சாஸ்த்ரங்களை ஸம்பூர்ணமாக அதிகரித்த பிறகு, "செந்தமிழும் வடகலையும் திகழ்ந்தநாவர் திசைமுகனை யனைவர்கள் செம்மை மிக்க" என்கிறபடி, ஜ்ஞாநாநுஷ்டாநாதி குணங்களினுல் பிதாமஹ ஸமாநரான தமது பிதாமஹருடைய அநுக்ரஹத்தினுலே ஸம்ப்ராப்தோபயவேதாந்த விஜ்ஞாநராய், "க்ரஹணம் தாரணஞ்சைவ ஸ்மரணம் ப்ரதிபாதநம் | ஊஹாபோஹோऽர்த்தவிஜ்ஞாநம் தத்வஜ்ஞாநஞ்ச தீகுணா:" என்கிற ஸகல யுக்திகுண பூர்ணராய், "சொல்லார்தமி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 MAY 1943
MADRAS

கோஷ்டபுரம் ஸ்ரீ தேசிக தர்ஶந விஜயத்வஜ
மஹா வித்வான்
ஸ்ரீ. உப. ஸௌம்ய நாராயணார்ய மஹா தேசிகன்

210112

ழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா வறநெறி யாவும் தெரிந்தவர்" என்று சொல்லலாம்படி எழுந்தருளி யிருந்ததோடு, "ஶீலவ்ரு த்தவயம் ஶ்ருதழு" என்கிறபடியே அப்படிப்பட்ட ஆத்மஜ்ஞாந மஹிமாநுகுணங்களான ஸர்வபூத தயாதி கல்யாண குணங்களினுலும், நியதமாக அநுஷ்டிக்கவேண்டியவைகளான தமது வர்ணாஶ்ரம தர்மாநுஷ்டாநங்களாலும் தர்ம அதிஷ்டாந தேவதாவதார மென்று கொண்டாடலாம்படி எழுந்தருளியிருந்தார்.

இப்படி "வஹாஹ்ஸ்ரு ஃஹஷீஹ்ஸ்ரு ஶாஸ்த்ரஹ்ய ஃதிஃநா:| ஸவ்ப்தஸ்ரீராஃதசஹ்ரக வாஷ்ஹ் ஐவஷடீவச:" என்கிறபடியே, ஶ்ரமப்பட்டு ஸம்பாதித்த சாஸ்த்ர ஜ்ஞாநங்களை லோகோபகாரமாகப் பண்ணுது, ஸ்வாத்மோபகார மாத்ரமே ப்ரயோஜநமாகச் செய்வதால், "ப்ராயேண தேவ ஃநய: ஸ்விஃதிகாஃ ஃளநம் ஹஜதி விஜநே ந வராயப்நிஷ்டா:" என்று தயாநிதிகளால் தூஷிக்கப்படும் முப்தர்கள் போலன்றிக்கே; "வதாவஜ்நஸாஹ்ம் தேஹிநாஃஹ தேஹிஷு| ப்ராணைரர்தைர்தியா வாசா ஶ்ரேய ஆசரணம் ஸதா" என்கிற பகவத் வாக்யத்தின்படியே பரோபகாரமே தமது பிறவிக்கு ப்ரயோஜநமென்று தீர்மானித்து, கடிய வெங்கானிடைக் காலடி நோவ நடந்து ஸர்வ லோகோஜ்ஜீவநம் செய்தருளின பெரும்பூதூர் தூப்புல் வள்ளல்களான பூர்வாசார்யர்களைப்போல, இந்த ஸ்வாமியும் தமது தேஹ ஶ்ரமத்தைக் கவனியாதே திவ்ய தேசங்களெல்லாம் ஸஞ்சரித்து, ஆங்காங்கு வஸிக்கும் வானவர்தம் பிரான் பாதமாமலர் சூடும் பத்தியிலாத மானிடர்களையும் தமது புத்ரர்களாகப் பாவித்து, அன்றீன்ற கன்றுக் கிரங்கிச் சுரக்கும் தேனுவைப்போலத் தமது திருவருளால் பெருகிய ஸரஸ ஸரள ம்ருதுள மநோஹரங்களான ஸூக்தி ப்ரவாஹ மஹிமையினுல் பகவத் பக்தி பூர்ணர்களாகச் செய்து, ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த பஞ்சப்ரகார கைங்கர்யங்களில் அவரவர்களுடைய அதிகாராநுகுணமாக நிஷ்டையுடையவர்களாய் உஜ்ஜீவிக்கும்படி செய்தருளினர்.

இவ்வுலகத்தில் பூர்ண சந்த்ரன் தனது ஸௌந்தர்யாதிஶயத்தினுலும் அம்ருத மயங்களான கிரணங்களுடைய குணங்களாலும் ஸகல ஜநங்களையும் ஸந்தோஷப்படுத்துவதுபோல, முன்பொரு காலத்தில் பகவதவதார பூதனை ப்ரது என்கிற சக்ரவர்த்தி "ஃநாவாஃதிப் ஹிஸ்ஸரஹ்ம ப்வணஸ்ம்ரஜயநு ப்ரஜா:| ராஜேத்யாநாஃயம் ஸோஃராஜ ஐவாவர:" என்கிறபடியே ஸௌம்யங்களான தனது மநோ வாக் காயங்களினுல் ஸகல ஜநங்களையும் ரஞ்ஜிப்பித்ததினுலே ராஜாவென்று கொண்டாடப்பட்டிருந்தார். இந்த ஸ்வாமியும், 'திரியும் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து, பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருக'வேணு மென்கிற ஆஸ்தையினுல் ஸர்வ காலத்திலும் "ஸ்வஸ்த்யஸ்து விஶ்வஸ்ய" என்று நினைத்திருக்கிற அதி

ஸௌம்யமான மனத்தினுலும், ஸகல ஸந்தாபஹாரி ஸுதாரஸ ஸத்ருசமாய்ச் செவிக்கினிய செஞ்சொல்லாக இருக்கையாலே அதி ஸௌம்யங்களான ஹிதோபதேசங்களினுலும், “ஹ்ருதி வஸதி ஸந்ததந்ந பரவஸ்து ஹவதி வசோபி ஜநதோஷஸ்ய ஸௌஹ்ருதேவ:” என்கிறபடியே நிரஹங்கார நிர்யாத நாராயண ஸூசகமான ஸ்வீய ஸௌம்ய ரூபத்தினுலும், ஸகல ஸாது ஜநாஹ்லாத ஜநகராயிருந்ததினாலே ஸகலஜ்ஞமுநி என்றும் வைதிக ஸார்வ பௌமரென்றும் கொண்டாடப்பட்டிருந்தார்.

தவிர: காலத்தினுலும் குணங்களினுலும் பெரியோர்களாய், சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத பல ஆழ்வார்க ளிருக்க, பக்தி ப்ரவாஹத்தி லழுந்தி மோஹித்துப் பல்லாண்டு பாடின பெரியாழ்வார் மாத்ரமே பெரியாழ்வார் என்றும் விஷ்ணு சித்தர் என்றும் கொண்டாடப்பட்டுவந்தார். அதுபோல, இந்த ஸ்வாமியும் நித்ய நிர்த்தோஷராய்க்கல்யாண குணுகரரா யிருக்கையாலே “ஸாக்ஷாந்நாராயணோ தேவ:” என்கிறப்படியே ஸாதுபரித்ராணார்த்தம் அவதரித்த ஸௌம்ய நாராயணன் என்றே உபபத்தி பூமாவினுல் உத்ப்ரேக்ஷிக்கப்பட்டுக் கொண்டாடப்பட்டுவந்தார். இங்கு ஸௌம்யசப்தமானது ‘ஏகைகசோ நிஹதா:” என்கிறபடியே பற்பல ப்ராணிகளை ஹிம்ஸித்து, சில ஸாது ப்ராணிகளை ரக்ஷிக்கும் ஸ்வபாவர்களான ராம க்ருஷ்ணுதிகள் போலன்றிக்கே, “வத: ப்ரஸீத தாரு” என்கிறபடியே துஷ்டர்களையும் ஸாதுக்களாக்கி ரக்ஷிக்க நினைக்கிற பாகவத ஸ்வபாவத்தை ஸூசிப்பிக்கிறது. இப்படி: பக்திமான்களுக்குத் தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதுமாகித் தித்தித்திருக்கும் அப்பெரியோருடைய கல்யாண குணங்களில், அறிவினுல் சிறியனுன அடியேன் பருகிக் களித்தவாறு சிறிது குணங்களை இங்கு ஸங்க்ரஹித்தேன்.

உக்ஷம் வாச ஸ்ரவம்ஸோ ந ஸ்ரீநிவாஸாய ப்ரஸாதிநா ।
ஸௌம்யநாராயணாயார்யாணாம் சரணா: கேவலம் வயம் ஸ்திதா: ॥

---

(2)

[ஸ்ரீ உப. ஐயா க்ருஷ்ணஸ்வாமி தாதாசார்ய ஸ்வாமி நியமநப்படி வித்வான் ஸ்ரீ நரஸிம்ஹ தாதாசார்யர், பெருமாள் கோயில்]

ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸ்வாமி, பால்யத்திலே திருக்கோட்டியூரிலே பித்ரு பிதாமஹர்கள் ஸந்நிதிகளில் ஸாஹித்யம், தர்க்க சாஸ்த்ரம், வ்யாகரணம் முதலானவற்றை வாசித்தும், அத்யயநம் செய்தும், ஸம்ஸார தாபத்ரயத்தைப் பராமர்சியாது வித்யாப்யாஸம் செய்து வந்தார். பிதாமஹனுர் தன்னடிச்சோதிக் கெழுந்தருளினதும் மீமாம்ஸா சாஸ்த்ரம் அறியவேண்டியவராய், ஸம்ப்ரதாய க்ரமத்திலே பூர்வோத்தர மீமாம்ஸைகள் ஒரே சாஸ்த்ரம் என்று நம் ஸித்தாந்த மாகையாலே அதை க்ரமப்

படி அதிகரிக்கத் திருவுள்ளம்பற்றி, ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமி ஸம்பந்தத்திலே அதிகரிக்கக் கோலி, பெருமாள் கோயிலுக்குத் தம்பியும் தாமுமாக எழுந்தருளினர். அப்போது அஸ்மத் ஆசார்யரான ஸ்ரீமத் உ. வே. அய்யா க்ருஷ்ணஸ்வாமி தாதாசாரியரும், இவர்கள் இருவரும், ஆக மூவருமாகச் சேர்ந்து, ஸ்ரீ பட்டப்பா என்கிற தண்ட்ரி ஸ்ரீநிவாஸ தாதாசாரியரிடம் மீமாம்ஸா சாஸ்த்ரத்தை ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமி அருளிச்செய்த பாட்டஸாரத்துடன் ஸேவித்தார்கள். பிறகு பாட்டதீபிகை முதலானவற்றையும் அதிகரித்து, காலக்ரமத்திலே பூர்ண பண்டிதராக விளங்கினர்.

இந்த ஸ்வாமியினுடைய அநுஷ்டாநம் எப்படிப்பட்டதென்றால்: க்ருஹஸ்தாஶ்ரமத்தில் எப்படிப்பட்ட க்ருச்ர தசையிலும் 'இருமுப் பொழுதேத்தி' என்கிற ரீதியிலே பஞ்சகால பராயணரா யிருந்து ஔபாஸந வைஶ்வதேவங்களை இடைவிடாது செய்து, கர்மடாக்ரேஸரர் என்று பேர் பெற்றிருந்தார்.

இந்த ஸ்வாமியின் முன்னோர்கள் தங்களுக்குள்ள த்ரவ்யத்தைப் பகவத் பாகவத விஷயங்களிலே உபயோகப்படுத்தினதால் ஆகிஞ்சந்யம் அதிகமாகி, அதனாலேயே திருக்கோட்டியூரிலே வஸிக்க ஸாத்யமில்லாமல், இந்த ஸ்வாமி வாஸயோக்யமான ஸ்தலத்தைத் தேடி எழுந்தருள நேரிட்டது. அந்த ஸந்தர்ப்பத்திலே இவருடைய பிதாமஹரிடம் ஆஶ்ரயித்திருந்த ஸ்ரீமத் உ. வே. ஆழ்வார் ராமாநுஜாசார்ய ஸ்வாமி, இவரை ஸ்ரீ மதுராந்தகத்திற்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போய்த் தம் குமாரத்தியை இவர் குமாரருக்குக் கந்யகாதாநம் பண்ணிக் கொடுத்ததோடு நில்லாமல் ஸர்வஸ்வதாநம் பண்ணினர். அப்படி இருக்கச்செய்தேயும், அதைத் திருவுள்ளம் பற்றாமல் **अश्वस्तनिकवृत्तिक**ராய் இருந்து, ஆங்காங்கு ஸம்ப்ரதாய ப்ரவசநம் பண்ணியும், அங்கங்கே ஆஸ்திகர்கள் ஸமர்ப்பிக்கும் த்ரவ்யத்தை அஹரஹஹநி பகவத் பாகவதர்கள் விஷயத்திலும் உபயோகித்தும் வந்தார். இவர் லோஹரூபமான த்ரவ்யத்தை உபேக்ஷித்துப் பிதாமஹார்ஜிதமான வஸ்து (**पैतामहं धनम्** என்று நம் தூப்புலாசிரியர் அருளிச்செய்த கணக்கிலே) வித்யாஸம்பத்து என்பதையே கைப்பற்றிப் பகவத் பாகவதாராதநம் செய்துவந்தார். '**मातेव रक्षति**' என்கிற ஶ்லோகத்தில் '**किं किं न साधयति कल्पलतेव विद्या**' என்பதானது இந்த ஸ்வாமி விஷயத்தில் எல்லாருக்கும் ப்ரத்யக்ஷ த்ருஷ்டம்.

இந்த ஸ்வாமியை ஸ்ரீ மன்னார்கோயில் அழகிய சிங்கர், தமக்குப் பின் அந்த ஆஸ்தாநத்தைத் தந்தருள அழைப்பித்த காலத்தில், தாம் அதை நிராகரித்து, க்ருஹஸ்தாஶ்ரமத்திலே தானே எழுந்தருளியிருந்தார். '**आचार्यकुलाद्वेदमधीत्य**' என்று துடங்கி '**कुटुम्बे शुचौ देशे**' என்று குடும்பத்திலேயே புத்ர பௌத்ர களத்ர துஹிதா தௌஹித்ரு ப்ரப்ருதிக

ளோடே ஸர்வதா கூட இருந்து பகவத் பாகவதாராதநம் பண்ணி, 'க்ருஹஸ்தாஶ்ரமமே ஸர்வோத்க்ருஷ்டமான ஆஶ்ரமம்' என்று லோகத்தார்க்கு எடுத்துக் காட்டின மஹாநுபாவர்களில் இவரும் ஒருவராவர்.

அறிவிலா மனிசரை 'ஒண்தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்குமுணர்வு' என்று உணர்த்தியவர் இவர். 'செஞ்சொற் கவிகாள்' என்று நம்மாழ்வார் அருளிச்செய்த விளிச்சொல் இவருக்கும் ஒக்கும். அது எங்ஙனேயென்னில்: பகவத் விஷய காலக்ஷேபங்களில் ஸ்ரீமத் ராமாயண ஶ்லோகங்களை எடுத்து உபபாதிப்பது ஸர்வ ஸம்ப்ரதிபந்நம். இவர் ஸ்ரீமத் ராமாயண காலக்ஷேபத்தில், ஆழ்வார் அருளிச்செயலை அதற்கு ஸம்வாதமாக எடுத்துக்காட்டி உபந்யஸிப்பதைக் கேட்டு ஆசார் வானவர் என்னும்படியா யிருக்கும்.

பகவத் விஷய காலக்ஷேபங்களில் திருவாறுயிரப்படியிலேதானே ஸகலார்த்தங்களையும் ஏறிட்டுச் செய்யும் உபந்யாஸங்கள் சொல்ல நிலமன்று. அபிநயமும் குணநுபவமும் ஒக்க அருளிச்செய்வது இங்கு நோக்கத்தக்கது. ரஹஸ்ய காலக்ஷேபங்களில் தென்னுசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் நமக்கும் உள்ள சுணுக்குகளை எடுத்துக் காட்டுவதில் அதிஸமர்த்தராவர். ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபங்களில் மஹா பூர்வபக்ஷ மஹா ஸித்தாந்த விஷயங்கள் வருகிற இடங்களில், கேட்கும் அதிகாரிகளுக்குத் தக்கவாறு ஶ்ருதப்ரகாஶிகா பாவப்ரகாஶிகா விஷயங்களை எடுத்துச் சொல்வது **'तनयाविशेषं'** என்று ஸ்ரீ தேசிகன் விஷயத்தில் அருளிச்செய்த கணக்கிலே, புத்ரர்களுக்குச் சொல்லும் கணக்கிலே, சிஷ்யர்களுக்கும் புன்முறுவலுடன் அருளிச்செய்யும்படியா யிருப்பதோடு, பெண்ணுக்கும் பேதைக்கும் எளிதாம்படியாயிருக்கும்.

'அலையற்ற வாரமுதக் கடல் அக்கடலுண்ட முகில்' என்று சந்தமிகு தமிழ் மறையோன் வேதாந்த குரு மொழிந்த பாசுரத்திற்கு இந்த ஸ்வாமி அநேக ப்ரகாரமாக ஸ்வாபதேசார்த்தங்கள் அத்திகிரி அருளாளன் திருவடி வாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அஹோபில மடத்தில் ஒரு காலவிசேஷத்திலே ஸாதித்தருளினர். அதைக் கேட்ட உபந்யாஸகர்கள் பலரும் அவற்றைக் குறிக்கொண்டு, இன்றைக்கும் ஆங்காங்கு அந்த அந்த லக்ஷ்யங்கள் வரும்போது அவைகளை உபந்யஸித்து வீறு பெற்று வருகின்றனர்கள். இதை நாடு நகரமும் நன்கறியும்.

இந்த ஸ்வாமி வெகு காலமாக ஸ்ரீமத் ராமாயண பாரத பாகவதாதிகளிலே போதுபோக்கி, தத்பரீவாஹமாக விபவாவதார காலத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருந்த திவ்யதேசங்களில்,

**"गोवर्धनो गिरिवरो यमुनानदी सा बृन्दावनं च मधुरा च पुरी पुराणी ।
अद्यापि हन्त सुलभाः कृतिनां जनानामेते भवच्चरणचारजुषः प्रदेशाः ॥"**

என்று ஆழ்வான் நியமநப்படிக்கு அந்தத் திவ்யதேசங்களிலேபோய் '**हा जन्म तासु सिकतासु मया न लब्धम्**' என்று மநோரதித்த கணக்கிலே யமுநா

நதி விகதங்களிலே புரளவேணும் என்றும், திருவயோத்தியிலே பெருமாள் எழுந்தருளியிருந்த இடங்களை ஸேவித்தும், பெருமாள் தீர்த்தம் ப்ரஸாதித்த ஸரயுவிலே தாமும் ஸ்ரீ பாததீர்த்தம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், மூலமந்த்ரத்திற்கு முக்ய ஸ்தாநமான வதரியாச்சிரமத்திலே தாம் ஆசார்யர்கள் பக்கல் கேட்ட மூலமந்த்ரார்த்தங்களைப் பதரிகாச்ரம தாபஸரிடத்தில் மூதலிப்பித்துக் கொள்ளவேணும் என்று மநோரதித்தும், ப்யாயண ஸங்கத்தராய்ப் புறப்பட்டு எழுந்தருள இருக்கும் போது, இன்புறுமிவ் விளையாட்டுடையா னவன் ‘ஸ்ரீ ஆளவந்தாரும் நம் மிராமாநுசனும் ஒன்றுசேர்ந்தால் லீலாவிபூதி பாழ்படும்’ என்று ஆளவந்தாரைக்கொண்டுபோனாப்போலே, ‘வடநாட்டுக்கு எழுந்தருளினால் தென்னாடொக்க வடநாட்டி லுள்ளாரையும் வழிபடச் செய்துவிட்டாராகில் தம் லீலாவிபூதி பாழ்படும்’ என்று தௌராத்ம்யம் கொண்டு இவரை அங்குப் போகவொட்டாமல் தன்னடிச் சோதிக்குக் கொண்டுபோனான் போலும். “ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால், திருமகள்போல் வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டுபோனான்” என்னும் கணக்கிலே முடிந்ததானது நம் தர்சநத்திற்கு ஏற்பட்டதொரு பெரிய தௌர்ப்பாக்யமே யாகும்.

---

(3)

[ஸ்ரீ. உப. வித்வாந் உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, திருப்பதி]

திருநாமம் அந்வர்த்தமாகும்படி திவ்ய ரூபகுண வ்யாபாரங்களாலே விளங்கின திருக்கோட்டியூர் ஸ்ரீஸௌந்தர ஸௌம்ய நாராயண மஹாதேசிகனுடைய வியோகத்தினால், இவ்வைஷ்ணவ உலகுக்கே அல்லது இப்பரத கண்டத்திற்கே பெருத்த நஷ்டமும் கஷ்டமும் நேர்ந்து விட்டனவென்பது எல்லோரும் உணர்ந்த விஷயம்.

பால்யத்தில் இந்த ஸ்வாமி தம் பிதாமஹரிடத்தில் வித்யாப்யாஸம் செய்யும் தசை முதற்கொண்டு, ஸஹாத்யாயிகளான ஸர்வ வித்யார்த்திகளையும் அதிசயித்த விலக்ஷணமான வித்யையும் நடத்தையும் பெற்று, வ்ருதாவான விஹாராதிகளை வெறுத்து, ஸதா க்ரந்தாவலோகநம் சாஸ்த்ரார்த்தசோதநம் முதலியவற்றிலேயே முழுப்போதும் போக்கின இவரை எல்லோரும் ஒரு விசேஷ வ்யக்தியாகவே நினைத்துவந்தனரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். தர்க்க வேதாந்தாதிகளிலே தலஸ்ப்ருக்காயும், கூலங்கஷமாயும், க்ஷோதக்ஷமமாயு முள்ளதொரு விசத ஜ்ஞாநம் பெற்றிருந்தது மாத்ர மின்றியில், கூடிய ச்ரமம் பெற்றும் க்ரஹிக்க முடியாத அர்த்தங்கள் அனைவற்றையும் அவலீலையாய் விரைவிலே க்ரஹிக்கும்படி விவரித் துரைக்கும் ஸாமர்த்யமும் இவரிடத்திலே அஸாதாரண மென்பதும் அடிக்கடி அநுபவத்திற்கு வந்திருப்பதே. அரிய பெரிய அர்த்தங்களை ஆராய்வதற் கேற்பட்டும் அதிப்ரௌடங்களுமான ஆசார்ய

ஸ்ரீ ஸூக்திகளையும் அநாயாஸேந தெளிந்துகொள்வது மாத்ர மில்லாமல், வெகு காலத்திற்குமுன் ஒருதரம் க்ரஹித்த அர்த்தத்தையும் ஒரு ஸமயமும் மறவாதபடி தாரணம் செய்யும் திறமையும் இவரிடம் அஸாதாரணம். ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளிலே பூர்வாபர ஸந்தர்ப்ப-ப்ரமாணாந்தர ஸ்திதிகளை அநுஸரித்து அவஶ்யம் விசாரிக்கவேண்டியதாகத் தோன்றி எந்த விஷயத்தை இம்மஹானிடம் விஜ்ஞாபித்தாலும், அந்தந்த விஷயத்திலே தாம் ஏற்கெனவே விமர்சித்திருக்கும் ப்ரகாரம் இன்னதென்று தத்க்ஷணமே அருளிச்செய்யும் இப் ப்ராஜ்ஞ சிகாமணியின் ப்ரஜ்ஞாவதியை வரையிட ஒருவராலும் முடியாது.

'யஸ்யா நுக்ரஹவைஶத்யாத் ஜ்ஞாநவைராக்யமேவ ப்ரதிஷ்டிதா' என்கிறபடி எழுந்தருளியிருந்த இம்மஹானிடத்தில், பரமைகாந்திகளுக்குத் தத்வ ஹித புருஷார்த்தங்களிலே யதார்த்தமான நிஷ்டை உண்டாயிருப்பதற்கு அறிகுறியாக ஸ்ரீதேசிகன் ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரத்திற் குறிப்பிட்டவற்றில் ஒன்றுகூடக் குறைவில்லை யென்பது, இம்மஹானின் அநவரத பரிசயம் செய்துள்ள அடியேனைப் போன்றவர்கட்கு ப்ரத்யக்ஷம். பாருஷ்யம், அதிவாதம், பைசுந்யம், வம்புப் பேச்சு என்றிப்படியுள்ள வ்ருதா ஜல்பத்திற்கு அணு மாத்ரமும் அவகாசங் கொடாமல், ஸ்ரீவைஷ்ணவர்களைப் பார்த்தமாத்ரத்திலே சந்தந குஸுமாதிகள் போலவும், நிலவு தென்றல்கள் போலவும், அபிமத விஷயங்கள் போலவும் உகந்து பரபரப்புடன் கிட்டவணுகி, பூர்வபாஷியாய் யதோசிதமாக யோக க்ஷேமங்களை விசாரித்து, அவ்வவஸரங்களுக்குத் தக்கபடி, 'தம் ஶிஷ்ய ஶாஸ்த்ரார்த்த ஹ்ருதயாநிவிஶிஷ்டமேவா ... ' என்கிறபடி அஜ்ஞாத ஜ்ஞாபநார்த்தமாகவும், ஜ்ஞாத ஸ்திரீகரணார்த்த மாகவும், ஸம்சய நிராகரணார்த்தமாகவும், அத்யாத்ம வித்யா விமர்சம் செய்வதே பரமபுருஷார்த்தமாகக் கொண்டிருந்த இம்மஹநீயரிடத்திலேயே 'யோ யோ ஜநஸ்ஸஜ்ஜந:' என்பது யதாவத்தாக அந்விதம்.

இருள் தரு மாஞாலத்தில் இக்கலியிலே பிறந்து திரியும் ப்ராக்ருத ஜநங்கள் எல்லோரும் பரமார்த்தம் தெளிந்து பலன் பெறவேண்டுமென்று பேரவாக் கொண்டு பரமர்ஷிகள் அருளிச்செய்த இதிஹாஸ புராணாதிகளைப் பிறர் மனம் கரையும்படி பல விடங்களிலே ப்ரவசநம் செய்து வந்த இவ்வாசார்யனுடைய தயா வாத்ஸல்யாதி குணங்களுக் கீடு எங்கும் கிடையாது. பரம வைலக்ஷண்யம் பெற்ற பரமர்ஷி யாஜ்ஞவல்க்ய ரிடத்திலே பணிந்து, 'ஸோऽஹம் பகவதே விதேஹாந் ததாமி மாஞ்சாபி ஸஹ தாஸ்யாய' என்று விண்ணப்பம் செய்த ஜநகமஹாராஜனைப்போல, 'ஶரீரமர்த்தம் ப்ராணாம்ஶ்ச ஸத்குருப்யோ நிவேதயேத்' என்கிறபடி ஸர்வஸ்வ ஸமர்ப்பணம் செய்து ஸர்வ பரமார்த்தங்களையும் ஸர்வ ஸாரமான ஸ்ரீபாகவத விசேஷார்த்தங்களையும் விசதமாகத் தெளிந்து விளங்கும் மதுராந்தகம் ஸ்ரீ உ. வே. ஆழ்வார் ராமாநுஜாசார்ய ஸ்வாமி ஒரு

வரே இவருடைய மஹிமைக்குப் போதுமான ஸாக்ஷி. தாம் ஒரு க்ருஷி பண்ணுதபோது, 'நஸஹிவ.தி.தம் யஃபூர்ஃவஹோமம் யத்ஞயா । ஆத்ராவஷே ந வா வெர்நஃநாரம்யெ ஸாஃரவூஹஃ' என்கிற படி அயத்நமாகக் கிடைத்த ஐஸ்வர்யத்தைக் கொண்டு யாவஜ்ஜீவம் பகவதாராதநம் செய்துவருவதே புருஷார்த்தமென்று நினைத்துவிடாமல், பிறர்க்குப் பகவத் ப்ராவண்யம் வரும்படி செய்வதே பெரிய புருஷார்த்தமென்றும் ஸ்வதர்மமென்றும் த்ருடமாகத் திருவுள்ளம்பற்றிப் பற்பல விடங்களிலுள்ள பெரியோர்களின் ப்ரார்த்தனைக் கிணங்கி, ஸர்வஜந ஸங்கரத்திற் கிடமான யாநமார்க்கங்களை விட்டு, ப்ராசீநாசார விரோதமிராதபடி ஆங்காங்கு எழுந்தருளி, திருமேனி ஶ்ரமத்தைப் பாராட்டாமல் அஹோராத்ரம் உபதேச ப்ரதாநமாகவே போது போக்கின பரம பாகவதர் இவர் ஒருவரே. பகவத் பாகவத கதா ஸௌதாஸ்வாதம் பண்ணிவைக்கும்போது, அதிலுள்ள வ்யாமோஹாதிசயத்தாலே உள்ளடங்காத ஆஸ்தா பக்திகளோடு உள்ளடங்காமல் வெளிப் பக்கங்களிலே குவிந்து உள் வெளி வாசியற விசேஷ த்ருப்தி யடைந்துவந்த ஒவ்வொரு தேசமும் இவர் மஹிமையை எப்பொழுதும் சொல்லும்.

இப்படி: காவ்ய சாஸ்த்ர புராணுதிகளிற்போல ஆழ்வார் ஆசார்யர்களின் அருளிச்செயல்கள் முதலிய தமிழ் ப்ரபந்தங்களிலும் அர்த்தாநுஸந்தாநமும் அதிக ஊற்றமும் பெற்று, வடகலை தென்கலை ஸம்ப்ரதாயங்களிலுள்ள ஸர்வ முக்ய க்ரந்தங்களையும் அவலீலையாகக் கையாண்டு, ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயார்த்தத்தை ஆஶ்ரயித்தவர்கட்கு ஆதரத்துடன் உபதேசித்தருளும் இம்மஹாத்மாவினுடைய பகவதநுபவ ஸம்ப்ரதாய ஸாரஸ்யாநுபவங்களின் சிற்சில திவலைகளையே நாம் பிறரிடத்தில் பார்க்கலாம். இவ்வளவு ஜ்ஞாநாநுஷ்டாநங்கள் பெருமையிருந்தால்கூட, தமக்கு ஸமம் கிடையாதென்று ஸ்வோத்கர்ஷ பரகிகர்ஷங்களாகிற படுகுழிகளிலே விழுவது இவ்வுலகில் ஸஹஜமாயிருக்க, அவற்றையும் தப்பி நடந்தருளின இம்மஹானை ஒரு அப்ராக்ருத வ்யக்தியாகவே அனைவரும் தர்க்கிக்கிறார்கள். திருக்கழுத்தில் துளஸீ பத்மாக்ஷ மாலைகளை யணிந்து, பவித்ர ஹஸ்தமாய், சாந்தியே வடிவெடுத்தாற்போலுள்ள ஸ்ரீ ஸ்வாமியின் ஸௌந்தரமான திருமேனியையும், இனிமையுடன் ஆவர்ஜக சக்தியுமுள்ள திருக்குரலோசையையுங் கேட்டுப் பரவசமாய்ப் பணிந்து, 'ஶாணாயிகெஹி விஷயெ ஶாணஸாரஸ்ரவெஷிநஃ । ராஜெ ராஜாநாஜஸெஸ்வ ஊாஸ்ரம் ஶாணக்ருதம் ஹவெஷ' என்கிறபடியே 'க்ஷஹஜஸ்ராவரொ ஹ்ராதா ஶாணெஊபூாஸ்ரஃவாமதஃ' என்று இம்மாதிரி அநுஸந்தியாமலிருக்கும் ப்ராஜ்ஞர் இவ்வுலகி லரிது. உலக தாக்ஷிண்யத்துக்கு உட்பட்டு ஒன்று கிடக்க ஒன்றைச் சொல்வதும் ஸங்கேத ருசியுமிராமல், சாஸ்த்ரங்களையும் பெரியோர்களின் ஆசாரங்களையும் பரிசீலித்துப் பார்த்து, கரணத்ரய ஸாரூப்யத்தாலே மனத்தில் நிஷ்கர்ஷித்தபடி நடந்துவந்த மஹான் இவரே. தேச யாத்ராதி காலங்களிலும்,

பரமாபத்திலும்பஞ்சகால பாராயணராய், பஞ்சமஹா யஜ்ஞாதிகளையும் ஔபாஸநத்தையும் அநுஷ்டித்தருளின இவருடைய தர்மநிஷ்டையே நாட்டார் நடந்துகொள்ளவேண்டும் முறைக்கு ஓர் உபதேசமாகும்.

நடந்த மாசிமீ 23உ திருப்பதியில் ஸ்ரீ தேசிக ஸ்ரீகோஸோத்ஸவம் நடந்தபோது, ஸ்ரீமத்வேத வேதாந்தார்த்த ப்ரதிஷ்டாபநாசார்யராய், பரமஹம்ஸ பரிவ்ராஜகராய், இப்போது திருச்சுகனூரில் எழுந்தருளியிருக்கும் அஸ்மதாசார்யன் (ஸ்ரீ கோழியாலம் ஸ்ரீ ஸ்வாமி) அவரானும் ப்ரார்த்திக்கப்பட்டு இவ்விடம் எழுந்தருளி ஸதஸ்ஸில் இம்மஹநீயர் விஷயமாகத் திருவாய்மலர்ந்தருளினதும் இப்போது அடியேனுக்கு இங்குக் குறிப்பிட ப்ராப்தமானது. அதாவது:—

"ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸ்வாமி ஸமீபத்தில் பரமபதத்துக் கெழுந்தருளி யிருக்க,இச்சமயத்தில் இந்த உத்ஸவத்தை நீங்கள் நடத்துவதும், நம்மை வரச் சொல்வதும், நாம் வருவதும், எல்லாம் அநுசிதமாகவே தோன்றின. ஆயினும் இந்த கோர விபத்தைக் கேட்டதுமுதல் பித்துப் பிடித்த மாதிரியுள்ள என் மனதுக்கு 'வூஜாவெரெவ யாயபூதெ' என்கிறபடி ஸமாந துக்கமுள்ள இப்பரிஷத்திலே ப்ரகாசமாகக் கதறிக் கொஞ்சம் ஆறுதல் பெற வழியுண்டோ வென்று நினைத்தே இப்போது நாம் வந்தது. இம்மஹானுடைய வைபவத்தை எவ்வளவு வர்ணித்தாலும் போதாது. 'ந வமதி நிஜவணபூயபூதொ யஷூதிராதூவ ஹூஜீவகூவகெஷ' என்றிம்மாதிரி ப்ரமாணங்களிலும் ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளிலும் வர்ணித்திருக்கிறபடி ஒரு அதிகாரிகூட இருக்க முடியாதென்று நமக்கு ஸஹஜமாய் ஏற்படும் ப்ரமத்தை நிவர்த்திப்பதற்காக ஶரண்யனும் ஆசார்யர்களும் சேர்ந்து அனுப்பிய ஓர் விலக்ஷண வ்யக்தி இவர். ஒரு ஸமயத்தில் பகலில் வெகுதூரம் வழிநடந்து க்ஷுத்பிபாஸாதிகளாலும்பாதிக்கப்பட்டு,இனி அஸ்தமயத்திற்கு அதிகஅவகாசமில்லையென்று ஓரிடத்தில் சுசிருசியாய் ஔபாஸந வைஸ்வதேவாதிகளை யதாவத்தாக அநுஷ்டிக்கப் புகுந்த இம்மஹான், பக்கத்திலுள்ள பரிஜநங்களின் ஜாக்ரதைக் குறைவால் அசுத்தி யேற்பட, அச்சமயத்தில் திருமுகத்தில் கொஞ்சங்கூட விகாரம் பெறுமல் மீண்டும் ஸ்நாநாதிகளை ஸஹஜமாகச் செய்து, நித்யகர்மாநுஷ்டாநத்திலே நின்றதைப் பார்த்து, இவருடைய சாந்தி, தாந்தி, ஆசாரம் இவற்றிலே ஆச்சரியப்பட்டார்கள் பல மஹான்கள். மற்றொரு ஸமயத்தில் பரமைகாந்தி ஸ்ரீ வைஷ்ணவரொருவரால் நிஷ்காரணமாகத் தூஷிக்கப்பட்டு மனங்கலங்கி நின்ற ஒரு மஹானைப் பார்த்து இந்த ஸ்வாமி, 'அடியார்க் கென்னை ஆட்படுத்த விமலன்', 'உற்றதுமுன் னடியார்க் கடிமை' என்றருளியபடி 'பாகவதர்களுக்கு நாம் இஷ்ட விநியோகார்ஹர்களா யிருக்க, அவர்களுக்கு நம் விஷயத்திலே இவ்வளவு ஸ்வாதந்த்ர்யத்தைக்கூட நாம் ஸஹியாமலிருப்பதெப்படி உசிதமாகும்?' என்றருளிச் செய்தார். இப்படிப்பட்ட ஹ்ருதய பரிபாகத்தை எவ்விடத்திலே நாம் கண்டிருக்கிறோம்? இம்மாதிரி பல

நிதர்சநங்கள் உண்டு. புராணாதி ப்ரவசந மென்பது சாஸ்த்ர மறியாதவர் தொழில் என்று ப்ரமித்து, இவருக்கு அதிலுள்ள ப்ராவீண்யத்தைக் கண்டு இவருக்கு சாஸ்த்ர ஜ்ஞாநம் பூர்ணமாயிராதென்று நினைத்திருந்த கேவல சாஸ்த்ர பண்டிதர்களும் ஸமயங்களிலே இவருடைய தார்க்கிக ஸிம்ஹதையைக் கண்டு களித்து, 'ஸதா வ்யாஸாதிவயோகமொநஸ்து' என்கிறபடி முக்யோபப்ரும்ஹணங்களான இதிஹாஸ புராணங்களிலே அதிக நோக்குள்ள ஸ்ரீ தேசிகனைப் போன்றவர் இவரென்று தெளிந்து, அபசார பாவத்துக் காளாகாமல் தப்பினர். ந்யாய குலிசாதி க்ரந்த சோதந காலங்களிலே இவருடைய ப்ரதிபா சக்தியை வேண்டியமட்டும் அநுபவித்திருக்கிறோம். பகவத் ஸேவா வ்யாஜமாக ஆலயாதிகளிலே ஸமாகம மேற்படும்போது; மற்ற விசிஷ்ட பாகவதர்களைப்போலே பராங்முகமாய் அல்லது வ்ருதா லாப ப்ரவணமா யிருந்துவிடாமல், நேரிட்ட தருணத்திற்குத் தக்கபடி அத்யாத்ம வித்யாநுபந்தியான அநேக விமர்சங்களுக்கு ப்ரஸங்கம் கொடுத்து, பிறர் அபிப்ராயம் அறிந்து ஆமோதித்து, ஆக்ரஹமின்றி, ஸஹ்ருதயமாய், யதார்த்த த்ருஷ்டி யாயிருந்த இம்மஹா ப்ராஜ்ஞரை எந்த க்ஷணத்திலும் நாம் மறக்க முடியாது. இனி சரண்யனே இக்கலியின் பயங்கரமான ஆக்ரமணத்தைப் பரிஹரிக்க வழி தேடவேண்டும்.''

இப்படி, பெரியோர்கள் எல்லோரும் புகழும்படி எழுந்தருளி யிருந்த மஹாநுபாவர் இந்த ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்ரீ ஸௌம்ய நாராயண மஹா தேசிகன் ஒருவரே.

ஜ்ஞாநாநுஷ்டாநவைராக்யசாந்திவாத்ஸல்யவாரிதே: ।
ஸ்ரீமத்ஸௌம்யநாராயணமுநிராஜாய தே நம: ॥

---

(4)

[தோட்டாலம் வித்வான் ஸ்ரீ. உப. வேணுகோபாலாசார்யஸ்வாமி, சென்னை.

சாந்திஸாரஸமுத்ரஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய ஸதாசி
மங்களாகரஸ்ய । ஸௌம்யநாராயணஸ்ய குருதேவஸ்ய
கீர்த்திம் நிஷேவ்ய ஹஜ வாணி விசுத்திமேதி ''

ஸ்ரீ உப. திருக்கோட்டியூர் ஸ்வாமியை அறியாதவர்கள் அநேகமாக நம் நாட்டில் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியில் யாரும் இருக்க மாட்டார்கள்.

ஸ்வாமியின் திருவம்சம்

இந்த ஸ்வாமி வாதூல குலத்தில் அவிச்சிந்நமாக வெகு காலமாக ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துவந்த மஹான்களின் திரு வம்சத்தில் ஜனித்தவர். இவர் பிதாமஹர், திருக்கோட்டியூர் ஸ்ரீ உப. ஸுந்த

ராசார்ய ஸ்வாமி என்று மஹா பரமைகாந்தியாய், பல பேர்களுக்கு ஸ்ரீபாஷ்யம் முதலிய ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துகொண்டு ஏகாந்த சீலராய், ஸ்ரீ கோஷ்டீநாதனுடைய ஸேவையில் ஈடுபட்டுத் திருக்கோட்டியூரில் வஸித்துக்கொண்டு, ஸத் கர்மாநுஷ்டாநபரராய், யதாலாப ஸந்துஷ்டராய், யதோசிதம் அதிதி ஸத்காரம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். அவர் திருவடிகளில் பலப்ரமைகாந்திகள் ஆஸ்ரயித்தார்கள். அவர்களில் சிலர் இப்பொழுதும் இருந்து வருகிறார்கள். இவர் பிதாவான ஸ்ரீ உப. ஸுந்தர கோபாலாசார்ய ஸ்வாமியும் தம் பிதாவைப் போலவே ஸர்வ யோக்யதையும் அமைந்திருந்தும், புராண ப்ரவசநத்திலும் காவ்ய நாடகாதி ப்ரவசநத்திலும் விசேஷ குதூஹல முள்ளவராய், மஹா வாக்மியாய், சாடு ரஸோக்திகளில் மிகச் சதுரராய் எழுந்தருளியிருந்தார். இந்த ஸ்வாமி காலக்ஷேபாதிகள் சொல்லி வைக்க ஸாமர்த்யம் வாய்ந்திருந்தும், தம் திருத் தகப்பனார் ப்ரவசநம் செய்யும் காலத்திலேயே தம் குமாரரும் ப்ரவசநம் செய்துவைக்கத் துடங்கிவிட்டபடியால், இந்த ஸ்வாமிக்கு அவகாசம் நேராமல் போய்விட்டது.

ஸ்வாமியின் அவதார காலதேசங்கள்

நம் ஸ்ரீஸ்வாமி திருக்கோட்டியூரில் பஹுதாந்ய வரு கார்த்திகைமீ ரோஹிணீ நக்ஷத்திரத்தில் அவதரித்தவர். திருத்தகப்பனார் ஸ்ரீ உப. ஸுந்தர கோபாலாசார்யர்; திருத்தாயார் ஸுந்தரவல்லியம்மாள். ஸ்ரீ ஸ்வாமியின் மாதாமஹ வம்சத்தவர் ஸ்ரீ வில்லிபுத்தூரில் எழுந்தருளி யிருந்தவர்கள். பின் ஸ்வாமிக்குச் செய்யவேண்டிய ஜாதகரணம் முதலிய ஸம்ஸ்காரங்கள் எல்லாம் பிதாமஹர் முன்னிலையில் தம் பிதாவால் செய்யப்பட்டு, அந்தத் தேசத்திற்கு ப்ரதாந அதிஷ்டாதாவாக விளங்குகின்ற ஸ்ரீ அழகருடைய திருநாமமும் தம் பிதாமஹருடைய திருநாமமுமான ஸுந்தர என்னும் பதத்தை முன்னால் கோத்து, ஸ்ரீ கோஷ்டீநாதனுடைய அநுக்ரஹத்திற்கு ஸூசகமாக அவர் திருநாமமான ஸௌம்ய நாராயண என்ற பதங்களையும் சேர்த்து ஸுந்தர ஸௌம்ய நாராயண என்று திருநாமம் சாத்தப்பட்டது. இம்மூன்று பதங்களும் நம் ஸ்வாமி விஷயத்தில் அர்த்தத்துடன் கூடியதாகவே இருந்தன என்கிற விஷயம், அந்த ஸ்வாமியை ஒருதரம் எப்போதாவது தற்செயலாக ஸேவித்தவருக்கு மனதில் பதியாமலிராது. இவர் ஸத்குல ப்ரஸூதர் என்பதை, ஆபிஜாத்யத்தைக் காட்டக்கூடிய திருமேனி யழகையும், படபடத்த ஸ்வபாவ மில்லாத புன்சிரிப்புடன் கூடிய பார்வையையும், இவ்விரண்டும் அழகு பெறும்படியான வாக் சாதுர்ய பாண்டித்ய ப்ரகர்ஷங்களையும், முறையே இம்மூன்று பதங்களும் போதிக்கக்கூடியவை யாதலால், இது நம் ஸ்வாமி விஷயத்தில் வெறும் நாம மாத்ரமாக இருந்துவிடாமல், அம்மூவரின் அநுக்ரஹம் பூர்ணமாக ஸ்வாமிக்குப் பொருத்தமான திருநாமமாகவே ஆயிற்று. இந்த ஸ்வாமிக்கு ஒரு ஸஹோதரரும்

மூன்று ஸஹோதரிகளுமுண்டு. இந்த ஸஹோதரர்தான் ஸ்ரீ. உப. ஸ்ரீராம தேசிகாசார்யர் என்ற திருநாமத்துடன், தம் பிதாமஹரிடமே சில க்ரந்தங்களைக் காலக்ஷேபம் செய்தும், மற்ற க்ரந்தங்களை யெல்லாம் தம் திருத்தமையனாரான நம் ஸ்வாமியிடம் ஸேவித்தும், மஹா ப்ரவீணராய் அவருக்கு ஸமாநமாக ப்ரவசந சக்தி வாய்ந்தவராய், ஸ்ரீரங்கத்தில் தத்காலம் ஸித்தாந்த ப்ரவசநம் செய்துகொண்டும், அநேக க்ரந்த நிர்மாணங்கள் செய்துகொண்டும் ஸுகோத்தரராய் எழுந்தருளி யிருக்கிறார்.

வித்யாப்யாஸம்

பிறகு ஸ்வாமி யதாகாலம் சௌளோபநயநாதிகள் செய்விக்கப் பட்டு, அதிபால்யத்திலேயே ஸ்ரீ அஹோபிலமடத்தில் 35-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்க நாத யதீந்த்ர மஹா தேசிகன் ஸந்நிதியில் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்று, பின் ஸ்ரீ ராஜமன்னார் ஸந்நிதியிலிருந்து இதற்கெனவே திருக்கோட்டி யூருக்கு வரவழைத்து ஸகல ஸௌகர்யங்களும் செய்துவைத்து ஆத ரிக்கப்பட்டு வந்த ஒரு ஸ்வாமியிடம் வேதாத்யயநம் செய்து, தம் பிதாவினிடமும் பிதாவின் மாதுலரான ஸ்ரீ உப. வேதாந்தாசார்ய ஸ்வாமியிடமுமாகக் காவ்ய நாடகம் முதலியவற்றைக் கற்று, அந்த வேதாந் தாசார்ய ஸ்வாமியிடமே வ்யாகரண சாஸ்த்ரமும் கற்கலானார். பின் தர்க்க சாஸ்த்ரம் கற்க ஆரம்பித்தபோது, திருக்கோட்டியூருக்கு ஸமீபத்தில் வெள்ளக்குடி என்ற க்ராமத்தில் வஸித்துவந்த ஸ்ரீ உப. ரங்காசார்யர் என்ற ஒரு ஸ்வாமி, ஒரு ஸமயம் ஸ்வாமி திருமாளிகைக்கு எழுந்தருளியபோது, ஸ்வாமியின் ஸாமர்த்யத்தைக் கண்டு வியந்து, 'இவருக்குத் தர்க்க சாஸ்த்ரத்தைத் தாம் பாடம் சொல்லவேண்டு'மென்று மநோரதித்துத் தம் திருமாளிகைக்கு அழைத்துப்போய் வைத்துக் கொண்டு தர்க்க சாஸ்த்ர பாடம் ஸாதித்தார். சிலகாலம் அங்கு வாஸித்துப் பின் அந்த ஸ்வாமிக்கு லௌகிக கார்யங்கள் அதிகமாயிருப்பதால் பாடம் விளம்பிக்கிறதென நினைத்து, நம் ஸ்வாமி ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளி, பரோடா முதலிய விடங்களில் வித்வானாக இருந்து, அப்போது ஸ்ரீரங் கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ உப. எம்பார் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி என்பவரிடம் தர்க்க சாஸ்த்ரம் முழுவதையும் கற்றார். கற்கும் போதே விசேஷ புத்திசாலியா யிருந்தபடியால், மேல் நடக்கவேண்டிய பாடங்களைத் தாம் முன்னடியே பார்த்துக்கொண்டு பாடத்திற்கு எழுந் தருளுவது வழக்கம். பாடம் ஸாதிக்கும் ஸ்வாமிகளும் இவருடைய ஸாமர்த்யம் முதலியவற்றைக் கண்டு, அவச்யம் சோதித்துக் கொடுக்க வேண்டிய பாகங்களை மட்டும் ஸரிப்படுத்திக் கொடுத்து, வெகு சீக்ர மாகப் பாடம் கற்பித்துவந்தார்கள். ஸ்வாமிக்கு அப்போது சுமார் வயது பதினாறுக்கு அதிகமிராது.

வேதாந்த காலக்ஷேபமும் ப்ரவசநமும்

இந்த ஸமயம் ஸ்வாமியின் பிதாமஹரான ஸுந்தராசார்ய ஸ்வாமி, தம் திருமேனியில் வரவர அசக்தி ஏற்படுவதைக் கண்டு, இனி விளம்பிக்காமல் தம் பேரனுக்கு ஸம்ப்ரதாய க்ரந்தங்களைக் கற்றுக் கொடுத்து லோகத்தை உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ள முள்ளவராய், நம் ஸ்வாமியைத் தம்மிடம் வரும்படி நியமிக்க, ஸ்வாமியும் அப்படியே எழுந் தருளி, தம் பிதாமஹரிடம் ஸ்ரீபாஷ்யாதி ஸமஸ்தவேதாந்த நூல்களையும் பகவத் விஷயத்தைத் திருவாறுயிரப்படியுடனும் ஈட்டுடனும், மற்றும் ரஹஸ்ய க்ரந்தங்களையும் ந்யாய ஸித்தாஞ்ஜநம் முதலிய மற்ற வேதாந்த க்ரந்தங்களையும் ஸேவித்து, தம் பிதாமஹராலேயே ந்யாஸ வித்யாநுஷ் டாநமும் செய்விக்கப்பெற்று விளங்கினர்.

இப்படி : அதிபால்யத்திலேயே ஆசார்யத்வம் செய்வதற்கு வேண்டிய ஸகல குணங்களும் ஸம்பூர்ணமாக அமைந்திருப்பதைக் கண்டு ஸ்வாமியின் பிதாமஹரும் தம் மநோரதம் பலித்ததென்று போர உகந்து, ஸ்ரீராமாநுஜ தர்சநம் உலக முழுவதும் பரவவேண்டு மென்று விசேஷ கடாக்ஷம் செய்தருளி, தம் முன்னிலையிலேயே இந்த ஸ்வாமியை இதரர்களுக்குக் காலக்ஷேபம் சொல்லச்செய்து தாம்கேட்டு ஆநந்திப்பதுடன், ஏதாகிலும் குறைகளிருந்தாலும் அவைகளையும் தாமே நிவ்ருத்தி செய்து கொடுக்கத் திருவுள்ளமாய் நியமிக்க, ஸ்வாமியும் மிகவும் அழகாயும், தம் பிதாமஹர் திருவுள்ளத்திற்கு அநுகூலமாயும், அந்த ஸ்வாமி ஸாதிப்பதைவிட மிக லளிதமாயும், லௌகிக த்ருஷ்டாந்தங்கள் நிறைந்து மிருக்கும்படி ஸாதிக்கும்படியா யிருந்தது. இதைக் கண்ட தத் காலத்திய பெரியோர்களும், 'இனி நம்முடைய தர்சநம் வெகுநாள் நன்கு தழைத்திருக்கும்' என ஸந்தோஷித்ததாகக் கேட்டிருக்கிறோம். இப்படி, பிதாமஹரின் முன்னிலையில் காலக்ஷேபம் ஸாதித்ததைத் தவிர, அவரு டைய நியமநத்தின் பேரில் அயலூருக்குஞ் சென்றிருந்து காலக்ஷேபம் ஸாதித்ததுண்டு. அப்பொழுதுதான் ஒரு ஸமயம் ஸ்ரீமதுராந்தகத் திற்கு எழுந்தருளி, ஸ்ரீ ஆழ்வார் ராமாநுஜாசார்யர் என்கிற ஸ்வாமிக்கு, முன் தாதா ஸந்நிதியில் ஸேவித்ததுபோக மற்றப் பாகங்களை அவருக்கு ஸாதித்து முடித்தாயிற்று. பிதாமஹர் திருநாட்டை அலங்கரித்தபின், தாம் ஸ்வதந்த்ரமாகவே காலக்ஷேபம் ஸாதிக்கத் துடங்கி, தம்முடைய கடைசி க்ஷணம் வரையில் ஒரு க்ஷணமேனும் ஓய்வில்லாமல் ஸித்தாந்த ப்ரவசநம் செய்தாயிருக்கிறது.

மீமாம்ஸா சாஸ்த்ர பரிசயம்

இப்படி ஸித்தாந்த ப்ரவசநம் செய்ய ஆரம்பித்த பின்னும், தமக்கு மீமாம்ஸா சாஸ்த்ர பரிசயம் இருக்கவேண்டியது அவஶ்யம் எனத் திருவுள்ளம்பற்றி, இதற்காகப் பெருமாள்கோவிலுக் கெழுந்தருளி, அங்கு ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமி திருவடியாய், மீமாம்ஸா சாஸ்த்ரத்தில்

ப்ரவீணராயிருந்த ஸ்ரீ உப. பட்டப்பா ஸ்வாமியினிடம் பாட்டதீபிகை என்ற க்ரந்தத்தை அதிகரித்து, தாம் அதிகரித்த க்ரந்தம் ஒன்ருயிருந்தாலும், தம் ப்ரதிபா விசேஷத்தாலும் ஆசார்யாநுக்ரஹத்தாலும் அந்த சாஸ்த்ரத்தைச் சேர்ந்த மற்ற க்ரந்தங்களையும் பிற்காலத்தில் பாடம் ஸாதிக்கும்படியான ஸாமர்த்யத்தை ஸம்பாதித்து, சாஸ்த்ர தீபிகையில் சில பாகங்களை ஒரு வித்வானுக்கும் மற்ருெரு ஸமயம் சாபர பாஷ்ய வார்த்திகங்களைத் தம் குமாரருக்கும் பாடம் ஸாதிக்கலா யிருந்ததுண்டு. மற்றும் ஆங்காங்குப் பாடசாலைகளில் வாசித்துவந்த வித்யார்த்திகளில் பலர், அவ்வப்போது விராம காலங்களில் ஸ்வாமி ஸந்நிதிக்குவந்திருந்து, சதுர்த்தச லக்ஷணீ ஸாமாந்யநிருக்தி முதலிய தர்க்க க்ரந்தங்களிலும் பாட்டதீபிகைபோன்ற மீமாம்ஸா க்ரந்தங்களிலும் தங்களுக்கு விச்சிந்நமாய்ப் போன பாகங்களை வாசித்ததுண்டு. இவ்வாறே வ்யாகரணத்தில் வையாகரண பூஷண ஸாரம் மஞ்ஜூஷை முதலிய க்ரந்தங்களையும், முதல் முதலாக தாமே கடாக்ஷித்துச் சிலருக்கு அவற்றைப் பாடம் ஸாதித்ததுண்டு.

ஸ்ரீபாஷ்யாதி காலக்ஷேபங்கள்

ஸ்ரீ பாஷ்யத்தில் விஷயங்கள் எவ்வளவு கடிநமாயினும், க்ரஹிப்பவன் எவ்வளவு மந்தாதிகாரியாயினும், அவனும் லகுவாகத் தெரிந்துகொண்டு ரஸத்தை அநுபவிக்குமாறு செய்யும் ஸாமர்த்யம் அதிவிலக்ஷணம். அதிகரணங்களின் பூர்வோத்தர ஸங்கதிகளை எடுத்துக்காட்டி, ஓரிடத்தில் புநருக்தி முதலிய தோஷம் வாராமலும், மற்ற க்ரந்தங்களுடன் ஸமரஸமாக அமையும்படியும், அதிகரணந்தோறும் அறியவேண்டிய ந்யாய ஸ்வரூபத்தை நன்கு சிக்ஷித்துக் காட்டியும் காலக்ஷேபம் ஸாதித்தாகும். இப்படியே கீதாபாஷ்ய ரஹஸ்யத்ரய ஸாராதிகளிலும். பகவத் விஷயத்திலோ வென்ருல் 'ஆழ்வாரின் அபிப்ராயத்தை நன்கறிந்தவர் இவர் ஒருவரே யாவர்' என்று பெரியோர்கள் வியக்கத்தக்க ரீதியில் தாத்பர்யரத்நாவளி முதலிய தேசிக க்ரந்தங்களுக்கும் திருவாருயிரப்படிக்கும் ஈட்டு க்ரந்தத்திற்கும் உள்ள ஸாமரஸ்யத்தையும் அடிக்கடி எடுத்துக்காட்டி நிர்வாஹம்செய்யும் ரீதியைக் கண்டு ஆச்சர்யப்பட்டவர்கள், எந்த ஸம்ப்ரதாயத்திலும் சுமார் 100 வருஷ காலமாக இத்தகைய மஹான் அவதரித்ததில்லை என்ற வார்த்தை வெகு நாட்களுக்கு முன்பே நம் செவிகளில் விழுந்திருக்கிறது.

தமிழில் ஜ்ஞாநம்

ஸ்வாமிக்குத் தமிழிலும் நல்ல பரிசய முண்டு. ஆழ்வார் ப்ரபந்தங்கள் நாலாயிரத்தையும் ஸ்ரீதேசிகப்ரபந்தத்தையும் தட்டுத்தடையில்லாமல் நன்கு அர்த்தம் ஸாதிப்பது ஸ்வாமி ஒருவருக்கே அஸாதாரணமாகும். ஸ்ரீதேசிக ப்ரபந்தத்தை இதுவரையில் அச்சிட்ட பேர்களும் நம் ஸ்வாமியைக்கொண்டு அதனை நன்கு சோதித்துப் பின்னேதான் அச்

சியற்றியிருக்கிறார்கள். ஆனால் சிற்சில இடங்களைப்பற்றி 'நமக்குத் தமிழ் லக்ஷணம் தெரியவில்லை. இவ்விடங்களைத் தமிழர்களைக் கேட்கவேண்டும்' என்று அடிக்கடி ஸாதிப்பதுண்டு. அது எத்தகைய குறையோ? அக் குறையால் வ்யாக்யாந பாகத்தில் எந்த இடம் குறைபட்டிருந்ததோ நாம் அறியோம். அக்குறையை நீக்கக்கூடிய ஸம்ப்ரதாய ஜ்ஞாநம்வாய்ந்த தமிழர்களையும் இக்காலத்தில் காண்பது அரிதாயிற்று. இவ்வாறு தம்முடைய பத்தொன்பதாம் வயது துடங்கி ஸுமார் 45 வருஷங்களுக்கு அதிகம், பாஷ்யாதி ப்ரவசநத்தையே தமக்கு வகுத்த கைங்கர்யமாகப் பாவித்து நடத்தி, அந்த ஶ்ரமத்தாலேயே திருமேனி ஶ்ராந்தமாய் ஹ்ருதய தௌர்ப்பல்யம் ஏற்பட்டு, அதிசீக்ரமாகவே தம்முடைய 65-வது திருநக்ஷத்ரத்தில் பரமபதமடையும்படியா யிருந்தது.

ஆத்மகுணபூர்த்தி

நம் ஸ்வாமி 'யாதுநாவிவ ஸௌஸெரெகூ ராமபுணாநாகேரோ ஷேஹாநு" என்ற ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனைப்போல் ஸமஸ்த மங்கள குணங்கள் நிறைந்தும் ஒருவிதமான துர்க்குணத்திற்கு இடந் தராமலும் எழுந்தருளியிருந்தார். அவற்றிலும் ஸ்வாமியின் ஸௌலப்யமும் ஸௌசீல்யமும் மற்றைக் குணங்களை விசேஷமாக ப்ரகாசிக்கச் செய்தன. எந்த ஸமயத்திலும் யார் வேண்டுமானாலும் எந்த விஷயத்தையும் திடீரென்று நெருங்கிக் கேட்கலாம். சிறு பிள்ளையாயினும் ஸாமாந்யனாயினும் அவனையும் தமக்கு ஸமமாகத் தன்னுடன் உட்கார வைத்துக்கொண்டு 'தாம் பெரியவர் அவன் தாழ்ந்தவன்' என்ற வித்யாஸம் பாராட்டாமல், இடையர் மத்தியில் இடையனாகவே விளங்கிய ஸ்ரீ கண்ணனைப்போல விளங்கினது ஸ்வாமியின் ஸௌசீல்ய குணம். அதற்கேற்ப ஸதா புன்சிரிப்புடன் கூடிய திருமுக மண்டலமும், ஸ்நேஹத்தைப் பெருக்குகின்ற கடாக்ஷமும், பூர்வ பாஷித்வமும், ப்ரியம்வதத்வமும், சிறியோர் பெரியோர் என்று பாராமல் அவர்களிடம் சென்று அவர்களின் ஸுக துக்கங்களை விசாரித்தலும், தம்முடைய ஸுக துக்கங்களை அவர்களிடம் சொல்லிக்கொள்ளலும், " ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்டால் நிலவு தென்றல் போலவும் சந்தந குஸுமாதிகளைப் போலவும் வர்த்திக்கவேண்டும்" என்று விதித்த த்ருஷ்டாந்தத்தைத் தார்ஷ்டாந்திக மாக்கும்படியான அவ்வளவு ஸம்ப்ரமத்துடன் எழுந்தருளியிருக்கும்படி யிருந்தது. இவ்வளவிற்கும் மேலாக 'உநஸ்யநு்யுவஸ்யநு்ஸ' என்றில்லாமல் மநோ வாக் காயங்கள் மூன்றும் ஒத்திருத்தலும் இவரிடம் குடிகொண்டிருந்தது. இவை ஸ்வாமியின் குணங்கள் என்று பேர்பெறும்படி, ஸ்வாமியின் ஸம்பந்தத்தால் அவை பெருமை பெற்றனவெனச் சொல்லலாம்படி யிருந்தன. மேலும் நம் ஸ்வாமி விஷயத்தில், கௌதம தர்ம ஸூத்ரத்தில் ப்ராஹ்மணன் பெறவேண்டுமென்று கூறப்பட்டுள்ள ஸம்ஸ்காரங்களும் பூர்ணமாயிருந்து, ஆத்ம குணங்களும் பூர்ணமாய்ப் பொருந்தியிருந்தன.

பஞ்சகாலாநுஷ்டாநம்

இவ்வளவு சாஸ்த்ர பாண்டித்யம் பொருந்தியிருந்தும், ஸ்வாமி சாஸ்த்ரங்களைக் கொண்டே பொழுது போக்கிவிடாமல், ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷாதிகளில் நிஷ்கர்ஷித்த பஞ்சகால ப்ரக்ரியையாலே அபிகம நோபாதாந இஜ்யா ஸ்வாத்யாய யோகங்களை நடத்தும்போது, வ்ருத்தி புஷ்கலமாக இல்லாமலிருந்தும், அதற்காக ஒரு கார்யம் செய்வது என்றில்லாமல் தர்மாவிருத்தமான யத்ருச்சா லாப மாத்ரத்தால் ஸந்துஷ்டராய்,

"[illegible] ।
[illegible]"

என்ற நிலையிலிருந்துகொண்டு, விசேஷ த்ரவ்ய லாபாலாபங்களிலும் ஹர்ஷ சோகங்க ளற்று, உபாதாந காலத்தை லௌகிக த்ரவ்ய ஸம்பாதநத்தில் உபயோகிக்காமல், ஸ்ரீ பாஷ்யாதி காலக்ஷேபத்தின் மூலம் ஆந்தர குணோபாதாநத்தில் உபயோகித்துக்கொண்டும், ஸ்வாத்யாய காலத்தை முழுவதையும் யதாசாஸ்த்ரம் ஸ்ரீ ராமாயண ஸ்ரீ பாகவதாதி காலக்ஷேபங்களில் உபயோகித்தும் வந்தார். இப்படி பாஞ்சகாலிக தர்மாநுஷ்டாநம் செய்யும்போதும், மற்ற நித்ய நைமித்திக கர்மாநுஷ்டாநம் செய்யும்போதும், 'இது சாஸ்த்ர விஹிதம்' என்கிற ஆகாரத்தைத் தவிர்த்து, 'இது பகவத் ப்ரீணநம்' என்ற ஆகாரம் தோற்றும்படி, மிக்க ப்ரீதியுடன் செய்வது வழக்க மென்பது நேரில் அநுபவித்தவர்களுக்குத் தெரியவரும்.

ராமாயணாதி காலக்ஷேபங்கள்

ஸ்வாமியின் ஸ்ரீராமாயண பாகவதாதி காலக்ஷேபங்களில் ஸ்வாரஸ்யம், பதங்களின் சேர்க்கையால் உண்டாகும் ஸ்வாரஸ்யம், ஸம்ப்ரதாயார்த்தம், விசேஷார்த்தம், சாடூக்தி, என்றிவைபோன்ற பல விசேஷங்களுடன் ஒவ்வொரு ஸர்க்கத்திலும் ஒவ்வொரு அர்த்தவிசேஷம் ப்ரதாநமாக ரூபித்துக் காட்டப்படுகிறது என்று ஸாதித்து, அதற்கு முன் ஸர்க்கத்தின் அர்த்தத்துடன் பொருத்தத்தையும் காட்டி, அந்த அர்த்தத்திற்கு அநுகுணமாக அந்த ஸர்க்கம் முழுவதையும் யோஜனை செய்து காட்டுவது என்ற பாகம் ஸ்வாமியைத் தவிர மற்றெங்கும் காணக் கூடாத ஒரு விசேஷமாகும். இவ்வாறே ஸ்ரீ பாகவதத்திலும். இவ்விதமே ஸ்வாமியின் கதையைக் கேட்குமவர்களிடத்தும் ஒரு விசேஷமுண்டு. உலகத்தில் மிக ரஸமாகக் கதை சொல்லும்போது, 'இவர் ராமாயண கதை சொல்லுகிறார்; நாமதைக் கேட்கிறோம்' என்னும் இவ்வாறான உணர்ச்சி முற்றிலும் நிறைந்திருக்கும். ஸ்வாமியின் காலக்ஷேபத்திலோ நாம் பரோக்ஷமாகக் கதை கேட்பதாக இல்லாமல், ஸ்ரீ ராமக்ருஷ்ணாதிகளை நாம் நேரில் கலந்து அநுபவிப்பதாகவே தோன்றும்படி, அவ்வளவு ரஸத்தில் மூழ்கிக் கிடக்கும்படி

இருக்கும். கதை முடியும் ஸமயத்தில்தான், 'நாம் கதை கேட்டோமே யல்லது நேரில் காணவில்லை'யென்ற உணர்ச்சி யுண்டாகும். இது அவரவர் களின் அநுபவ ஸித்தம். ஸ்வாமிக்கு ஸ்ரீ பாஷ்யாதி ப்ரவசநத்தைவிட இதிஹாஸ புராணங்களை வெளியிடுவதில் ஆதரம் அதிகம். இவற்றில் மற்றவைகளைக்காட்டிலும் லேசாகப் பகவத் குணங்கள் அநுபவத்துக்கு வருவது இதற்கு ஒரு காரணம். இரண்டாவது: ஸாமாந்யர்களையும் பக வத் குணங்களில் ஈடுபடும்படி செய்வது. எல்லோரும் உஜ்ஜீவிக்க வேண்டு மென்றல்லவோ ஸ்வாமியின் குணங்களின் பெருமை இருந்த விதம்!

திவ்யதேச யாத்ரையும் வித்யாதாநமும்

இந்த ஸ்வாமி நம் தென்னாடு முழுவதும் அநேகம் தரம் ஸஞ்சாரம் செய்து, ஒவ்வொரு திவ்யதேசத்திலும் பல தினங்கள் பல மாதங்கள் வருஷங்கள் வஸித்து, அங்கங்கு நேர்ந்த வித்யார்த்திகளுக்கு ஶாஸ்த்ரங் களையோ காவ்யங்களையோ அவற்றில் ஒவ்வொரு பாகங்களையோ அபேக்ஷாநுஸாரம் சொல்லிக்கொண்டு, தம்முடன்கூட வருபவர்களுக்கும் க்ரமமாக நடக்கவேண்டியவைகளையும் நடத்திக்கொண்டு, அநுஷ்டாந காலம் நீங்கலாக ஒரு க்ஷணமேனும் வீணாகாமல் வித்யாதாநம் செய்து வந்தார். ஒரேநாளில் ராமாயண ஸங்க்ரஹம் முதல் சாஸ்த்ர க்ரந்தங்கள், ஸாமாந்ய நிருக்தி, ஸர்வார்த்த ஸித்தி, முதலானவையும் நடந்திருப்பதை நாம் அடிக்கடி நேரில் கண்டதுண்டு. ஆனால் ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம், திருவாறாயிரப்படி, இவைகள் காலைவேளை யிலேயே நடக்கும். மற்றவை யதா ஸௌகர்யம். ஸ்வாமி சோம்பல் என்பதை முற்றிலும் ஜயித்தவர். அந்தந்த ஸ்தலங்களில் வஸிக்கும் போது நடக்கும் உத்ஸவங்களில் ஒன்றிலாவது அவற்றின் ஒரு பாகத்தி லாவது ஸ்வாமி அந்வயிக்காமலிருந்த நாள் கிடையாது. அநுயாத்ரா காலத்திலும் அவகாசம் நேர்ந்தால் அந்த விடத்திலேயே ஏதாகிலும் பாட ப்ரவசநம் நடக்கும். யார் எங்கு அபேக்ஷித்தாலும் அங்குக் குடும் பத்துடன் சென்று வஸித்து, அபேக்ஷித்தபடி வித்யாதாநம் செய்வ துண்டு. ஸாதாரண க்ராமத்தில் வஸித்தபோதும், அங்கு நடக்கும் உத்ஸவாதிகளில் திவ்யதேசத்துக்கு ஸமமான ப்ரீதியுடன் கலந்து கொண்டு எல்லோரையும் ஸந்தோஷப்படுத்துவ துண்டு. இந்த ஸௌலப் யத்தையும் ஸௌசீல்யத்தையும் கண்டு, சக்ரவர்த்தித் திருமகனைப்போல் தங்களூருக்கு உத்ஸவங்களுக்கோ மற்ற விசேஷங்களுக்கோ ஸ்வாமியை எழுந்தருளப்பண்ணிப் பெருமை பெற்றிருக்கிறார்கள் அநேகர்.

உபந்யாஸங்களும் வாக்யார்த்தங்களும்

சிலருடைய உபந்யாஸம் பாமரர்களுக்குதான் ரஞ்ஜகமாகும். சில ரின் உபந்யாஸம் பண்டிதர்களுக்குத்தான் விளங்கும். ஸ்வாமியின் உபந் யாஸமோ, அவ்விரு தரத்தாருக்கும் பூர்ண த்ருப்தியை யளிக்கும். ஒரு

சிறிய ஶ்லோகத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, அதில் ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் அடக்கிக் காட்டிப் பண்டிதர்களுக்கும் அறிய வரிதான விஷயங்களை வெகு லளிதமாக எடுத்துக் காட்டும் அழகு சொல்லத் தரமன்று. ஸதஸ்ஸுகளில் வாதம் செய்யும் காலங்களிலும், வெகு துரூஹமென நினைக்கும் அர்த்தங்களையும் லேசாக மனத்தில் படும்படி எடுத்துரைத்து, வாதி ப்ரதிவாதிகள் ஒருவருக்கொருவர் அபிப்ராய மறியாமையால் ஏற்படும் கலஹங்களை ஒருதரம் அநுவதித்துக் காட்டி, அவர்களுள் ஸாமரஸ்யத்தை யுண்டாக்கி நடத்திப்போகும் ஸாமர்த்யம் மிக வியக்கத்தக்கது. இந்த அம்சம் இவ்வருஷம் பெருமாள் கோயிலில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் நடந்த மாலோல ஸபையில் நேராகக் கண்டது. இந்த ரீதி ஸ்வாமியிடம் வெகு நாளாய் ஸஹஜமாக உள்ளதே. சுமார் 40 வருஷ காலமாக இன்றளவும் நம் தேசத்தில் விசேஷமாக ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்யும் ஆசார்யர்கள் எல்லோரும், விஷயங்களில் ஸம்ஶயம் பிறந்தபோதும், பாடங்களில் ஸந்தேஹம் வந்தபோதும், அபத்த சோதநம் செய்யவேண்டியபோதும்,ஸ்வாமியின் நிர்ணயத்தையே ஆதார மாக்கிக்கொண்டதிலிருந்து ஸ்வாமியின் வேதாந்த பரிஶ்ரமம் இத்தகையதென்று வெளியாகும்.

லௌகிக ஸாமர்த்யமும் சாடு வார்த்தைகளும்

ஸ்வாமிக்கு லௌகிகத்திலும் ஸாமர்த்யம் அபாரமானது. ஒருவன் எவ்வளவு மூர்க்கனா யிருந்தாலும் ஸ்வாமியுடன் இரண்டு க்ஷணங்கள் ஸம்பாஷித்து ஸ்வாமியின் ரஸமான உக்திகளைக் கேட்கும்பக்ஷத்தில், அவன் ஸ்வாமியின் குணங்களுக்குத் தோற்று அடிமையாவதைத் தவிர வேறில்லை. ஸ்வாமியின் ஸம்பாஷணங்களிலும் உபந்யாஸங்களிலும் வாக்யார்த்தங்களிலுங்கூட இரண்டர்த்தம் த்வனித்து, அதனால் ஒரு ரஸவிசேஷம் தோன்றும்படி ஶ்லேஷையுடன்கூடிய சாடூக்திகளைக் கேட்டு எல்லோரும் அடிக்கடி குலுங்கக் குலுங்கச் சிரித்து ஆநந்திக்கும்படியாயிருக்கும். இந்த சாடூக்திகள், ஸ்வாமியின் திருத்தகப்பனாரிடம் விசேஷமாயிருந்ததாகக் கேள்வி. அவற்றில் ஏகதேசந்தான் ஸ்வாமியிட மிருந்ததென்று விஷய மறிந்தவர்கள் சொல்லுகின்றனர்.

நியமங்களும் அவற்றின் விலக்குகளும்

ஸ்வாமி எந்த ஊருக்கு யாத்ரையாக எழுந்தருளினாலும் வண்டியில் ஸாமான்களுடன் சுமார் 15 அல்லது 20 பேர்கள் பந்து வர்க்கத்துடனே ஆப்த வர்க்கத்துடனேதான் எழுந்தருளுவது வழக்கம். அங்கங்குத் திநம் ஔபாஸநம் செய்துவிட்டு, அக்நியை ஸமித்தில் ஸமாரோபணம் செய்துகொள்வது வழக்கம். சில ஊர்களில் அதிக காலந் தங்கியிருக்கும்படி நேர்ந்தபோது, அக்நியைத் தார்யமாகவே வைத்துக்கொள்வதும் வழக்கம். தம் பிதாமஹர்

காலத்திலிருந்து திருவாராதநமாயிருக்கும் ஸ்ரீ கண்ணனையும் கூடவே அநேகமாக யாத்ரையிலும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போவதுண்டு. ஏதோ சிற்சில ஸமயங்களில் மட்டும் கண்ணன் திருவாராதநத்திற்கு யாரையாவது நியமித்துவிட்டுத் தாம் யாத்ரை எழுந்தருளுவதுமுண்டு. இப்படியே திருமலைமுதல் தென்தேசம் முழுவதும், மலைநாட்டில் சில பாகமும், மேல்நாடும் ஸஞ்சாரம் செய்தாயிருக்கிறது. பால்யத்தில் ஏதோ இரண்டொரு ஸமயங்களில் மட்டுமே ரயில் ப்ரயாணம் செய்தாயிற்று. அந்த ஸமயத்தில் ஒரு ப்ரயாணத்தில் மதுராந்தகத்தை நோக்கி ரயில் மார்க்கமாய் ப்ரயாணம் செய்யும்போது, ரயிலில் தமக்கு நேர்ந்த சில அநுபவத்திகளைத் திருவுள்ளம்பற்றி, ரயில் சீட்டு மதுராந்தகத்திற்கு வாங்கியிருந்தபோதிலும், பாதி மார்க்கத்திலேயே ரயிலை விட்டு இறங்கி, நடந்தே மீதி மார்க்கம் முழுவதையும் எழுந்தருளியாயிற்று. அன்று வைத்துக்கொண்ட நியமம் கடைசிவரை நன்கே பரிபாலிதமாயிற்று. ஆனால் உத்தர தேச யாத்ரை செய்து ஸ்ரீ ராமக்ருஷ்ணாத்யவதார ஸ்தலங்களைக் கண்டு மகிழவேண்டுமென்ற அவாவினால், உத்தரதேச யாத்ரைக்கு மட்டும் பந்து வர்க்கத்துடன் ரயில் மார்க்கமாகவே எழுந்தருளத் திருவுள்ளம்பற்றி, அதற்கு வேண்டிய த்ரவ்ய ஸங்க்ரஹம் செய்துவைத்தா யிருந்தது. ஶரண்யனுக்கு இந்த நியம பங்கத்தில் திருவுள்ள மில்லையாதலால் அந்த மநோரதம் நிறைவேறாமல் போய்விட்டது.

ஆஸ்திக்யத்தின் பெருமை

சாஸ்த்ர விருத்தமான கார்யங்களுக்கு ஈஷத்தும் ஸ்வாமி இடங்கொடுப்பதில்லை. விதவா விவாஹ சட்டத்திற்கும் ருதுமதீ விவாஹ சட்டத்திற்கும் விரோதமாக ஸ்வாமி எத்தனையோ ஸபைகளில் வாதம் செய்ததுண்டு. தேவாலயத்தில் பஞ்சமர்களின் ப்ரவேச விஷயத்தில், மலையாளத்தில் குருவாயூர் க்ஷேத்ரத்தில் நடந்த ஸபைக்கு ஸ்வாமி எழுந்தருளி வாதங்கள் செய்து, தர்ம ஸ்தாபநம் செய்ய முயற்சித்திருக்கிறார். அந்த ஸமயம் பல லௌகிகர்கள் ஸ்வாமியை அணுகி, பல விதமாயும் வாதாடி மனத்தைக் கலைக்க முயன்றார்கள். அது பலிக்காததைக் கண்டு ஒரு லௌகிக ப்ரமுகர் ‘இந்தத்திருக்கோட்டியூர் ஸ்வாமி இருக்கும் வரையில் ஆலய ப்ரவேசம் நடக்கமாட்டாது; அவ்வளவு செல்வாக்கும் பிடிவாதமு முள்ளவர் இவர்’ என்று சொல்லிச் சென்றதை நாம் நேரில் கேட்டிருக்கிறோம். ஒரு ஸமயம் பூவிருந்தவல்லியில் ‘வைகாநஸர்களுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் அவஶ்யம்தானா?’ என்ற விசாரம் ஏற்பட்டு, அதற்காக நடந்த ஸபையில் ஸ்வாமி மத்யஸ்தராயிருந்து, ப்ரமாணங்களை நன்கு பராமர்சித்து, அவர்களுக்கென ஏற்பட்ட ப்ராமணங்களையும் ஆராய்ந்து, பெரும்பாலும் அங்குக் கூடின வித்வான்களின் அபிப்ராயத்திற்கு விரோதமா யிருந்தும், தம்முடைய மநஸ் ஸாக்ஷிப்படி வைகாநஸர்களுக்கு ஸ்வசாஸ்த்ரத்தில் சொன்ன திருவாராதநத்திற்குப்

பஞ்ச ஸம்ஸ்காரம் அவஶ்யமில்லையென்றே தீர்ப்பளித்தார். இந்தத் தீர்மானத்தை வைகானஸர்கள் வெகுவாகப் புகழ்ந்தார்கள். மற்ற ஸ்ரீ வைஷ்ணவர்கள் நிந்தித்தார்கள். ஸ்வாமியோ இரண்டிலும் பற்றற்றவராய் அதை உபேக்ஷித்திருந்துவிட்டார்.

ஸ்ரீ மதுராந்தக வாஸம்

இந்த ஸ்வாமி பால்யத்தில் திருக்கோட்டியூரில் அதிககாலம் வஸித்தபோதிலும், ஸ்ரீரங்காதி திவ்ய க்ஷேத்ரங்களில் பல வர்ஷங்கள் வஸித்தபோதிலும், தம்முடைய வாழ்நாளின் பின்பாகத்தை ஸ்ரீமதுராந்தகத்திலும், அதற்கடுத்த மாம்பாக்கம் என்ற க்ராமத்திலும் கழித்தவர். தம் தாதா ஸ்வாமியின் திருவடியான ஸ்ரீ. உப. ஆழ்வார் ராமாநுஜாசாரியர் என்ற ஒரு ஸ்வாமி, நம் ஸ்வாமிக்கு ஸ்ரீ கண்ணன் திருவாராதநத்திற்காக ஸ்ரீமதுராந்தகத்தில் சில பூமியும், மாம்பாக்கத்தில் ஒரு திருமாளிகையும், அங்கும் சில பூமியும் தாநம் செய்தார். ஸ்ரீமதுராந்தகத்தில் ஸ்ரீகோதண்டராமஸ்வாமியின் ஸேவையில் ஈடுபட்டு, இதையங்கீகரித்து ஸ்ரீமதுராந்தகத்திலும் மாம்பாக்கத்திலுமாக ஸ்வாமி எழுந்தருளியிருந்தாயிற்று. இந்த ஸ்வாமிக்கு இரண்டு குமாரர்களும், மூன்று பெண்களுமிருக்கிறார்கள். பெண்களை ஸமீசீந பாத்ரங்களில் தாநம் செய்து, மாப்பிள்ளைகளுக்கு யதோசிதமாக வ்ருத்தியும் கல்பித்து, அத்யாத்ம சாஸ்த்ரத்திலும் அவர்களை விசேஷ பரிசய முள்ளவர்களாகவும் செய்தாயிருக்கிறது. ஸ்வாமியின் இரண்டு குமாரர்களும் ஸாமாந்ய சாஸ்திரத்தில் நல்ல பயிற்சி யுள்ளவர்களாயும், அத்யாத்ம சாஸ்த்ரத்தை ஸ்வாமியிடமே கற்றும், அதில் ப்ரவசந சக்தியும் வாய்ந்து ஸதாசாரபரர்களாக இருந்து வருகிறார்கள்.

ஸ்வாமி பரமபதம் எழுந்தருளியது

ஸ்வாமி, தம்முடைய கடைசி காலத்திலும் ஒரு பாகவதோத்தமருடைய வேண்டுகோளுக்கு இணங்கி, தம்முடைய திருமேனி பல விதத்திலும் அசக்தமா யிருந்ததையும் பொருட்படுத்தாமல், தம் குடும்பத்துடன் தம் சரீர ந்யாஸத்திற்கென்று ஏற்படுத்தப்பட்ட ஸ்தலத்திற்குச் செல்வதுபோல், மேல் தேசத்தில் கரும்பட்டி என்ற க்ராமத்திற்குத் தேவாலயத்தில் ஒரு உத்ஸவ வ்யாஜமாக எழுந்தருள, ஸர்வேஶ்வரனும் தன் மநோரதப்படி இவருக்குத் தன்னுடைய நித்யாநுபவத்தைக் கொடுக்கத் திருவுள்ளம்பற்றித் தான் ஸங்கல்பித்த நாளில் தத்காலோபஸ்திதமான ஒரு ஹ்ருதய தௌர்ப்பல்யம் என்ற வ்யாஜத்தை ஸங்கல்பித்தது இதற்கே யாகவோவென்று சொல்லாம்படி, பூர்வமே சேர்த்து வைக்கப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ வித்வத் கோஷ்டியின் நடுவில் தேஹந்யாஸத்தைச் செய்துவைத்துப் பரமபத யௌவ ராஜ்ய பட்டாபிஷேகத்தைச் செய்துவைத்து உகந்தருளினன்.

---

(5)

[கீழச்சேரி வித்வான் ஸ்ரீ. உப. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, தில்லஸ்தாநம்]

நம் பாரத நாட்டில் தென்திசைக்குத் திலகமா யெழுந்தருளியிருந்த ஸ்ரீதேசிக தர்சநாசாரிய திருக்கோட்டியூர் ஸ்ரீஸுந்தரஸௌம்ய நாராயணார்ய மஹாதேசிகன், சென்ற மாசிமீ கஅவ (2-2-43)-ல் திருநாட்டை அலங்கரித்தா ரென்பது தென்னிந்தியா முழுவதும் அறிந்திருக்கும். இத்தகைய மஹான்களை இக்காலம், தொன்று தொட்டு விழுங்கிவருவதும் தெரிந்ததே. ஆனால் முற்காலத்தில் முன்னோர்கள், “அபிஜிகமிஷோர்நாஸ்யம் யாவத்திவ்யம் க்ரியாத்யைஃ ச்ருதவிவிதபரீக்ஷா சோதிதே பாத்ரவர்த்தௌ | அநவமகுணஸாராரோஹிதஸ்நேஹபூர்ணஃ ஸதிமிரவாயம் ஸம்ப்ரதாயப்ரதீபஃ ||” என்று ஆசார்ய ஸார்வபௌமன் ந்யாயபரிசுத்தியில் அருளியபடி, ஆதிமூர்த்தியின் ஆதிஸ்தாநத்தை அடைவதற்கு ஆவல்கொண்ட ஆசார்யர்கள், பல பரீக்ஷைகளில் தேறிய ஓர் பாத்ர (சிஷ்யனிட)த்தில் குற்றமற்ற குணமுள்ள தசையில் (அழுக்கற்ற நூல் திரியில்) ஸ்நேஹம் (எண்ணெய்) நிறைந்த அகண்டமான ஸம்ப்ரதாய விளக்கை ஏற்றிப் போந்தார்கள். இப்போது இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு இடையூறுகள் பல விருப்பதால் இடமில்லை. ஆயினும் நம் ஸ்வாமி இதற்குப் பட்ட பாடுகள் பலகோடி. ஸுமார் நாற்பது வர்ஷங்களாக ஸ்ரீ ஸ்வாமியின் அழகிய சரித்ரங்களை ‘வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது’ என்றபடி பிறர் சொல்லக் கேட்டும், நேரில் கண்டும், வழிகளில் வணங்கி வழிபட்டு இணங்கியிருந்த காலங்களிலும் அநுபவித்தவைகளைச் சிறிது கடலைக் கையிட்டுக் காட்டுமாப்போலே இங்கு எழுதத் துணிகின்றேன்.

நம் ஸ்வாமி ஜ்ஞாநாநுஷ்டாநங்களிற்போலவே குடும்ப ஸ்திதியிலும் அதிரிக்தரான (மேம்பட்டவர், மிக்க ஏழைகள்) பரமைகாந்திகள் குலத்தில் பிறந்தவர். ஸ்வாமியின் திருப்பாட்டனார், தாதா ஸ்வாமியென்று சொல்லப்படும் ஸ்ரீமத் ஸுந்தரார்ய மஹாதேசிகன். திருநாமத்திற் கேற்ப அழகிய தோற்றமும் ஜ்ஞாநாநுஷ்டாநங்களால் ஏற்றமும் பெற்றவர். இவர்தான் நம் ஸ்வாமியை ‘அறியாக் காலத்துள்ளே அடிமைக்க ணன்பு செய்வித்து’ என்றபடி உலக வ்யவஹாரம் உணராத காலத்திலேயே திருத்திப் பணிகொண்ட தீரர். “ஸா ஹி ஸ்ரீரம்ருதா ஸதாம்” என்ற ஜ்ஞாந ஸம்பத்தினாலேயே பேரனைக் குபேர னாக்கியவர். ஸ்வாமியின் திருத்தகப்பனார் ஸ்ரீஸுந்தர கோபாலாசாரியர் ஸ்வாமி. இவருடைய அந்யாத்ருசமான ஸாஹித்யமும் தர்ம சாஸ்த்ரங்களில் நிர்ணயங்களும் ப்ரஸித்தமானவை. இரண்டு விதமான ஆகிஞ்சந்யமும் (ப்ரபத்தி, தாரித்ரியம்) நிறைந்திருந்தும், “காசின்வாய்க் கரம்விற்கினும் கரவாது மாற்றிலி சோறிட்டு, தேசவார்த்தை படைக்கும் வண்கையினார்கள் வாழ் திருக்கோட்டியூர்” என்ற பெரியாழ்வாரின் மங்களாசாஸநப்

படி இவர் திருமாளிகையில் அதிதிகள் இல்லாத திதிகளே கிடையாது. எந்தத் துர்ப்பிக்ஷத்திலும் ஸந்யாஸிகளுக்கு ஸுபிக்ஷம். நிலையாகவே திருப்புல்லாணி ஸ்ரீ. உப. வித்வான் அநந்தாசாரியர் முதலானவர் வித்யார்த்திகளா யிருந்து விருந் துண்பவர்போல் இந்த ஸ்வாமி திருமாளிகையில் உபசரிக்கப்பெற்று வித்யையுடன் வளர்ந்தவர்கள். மேலும் விவாஹம் செய்துகொள்ள நிர்வாஹ மில்லாத முதல் ஆஸ்ரமத்தோருக்கு, இரண்டாவது ஆஸ்ரமத்தை இணைத்து வைப்பவர். ஶ்ராத்தங்களை நடத்த ஶக்தியின்றியும் இடம் பொருளின்றியும் ஏங்கும் யாத்ரிகளுக்கு நிர்ப்பரமான நிலையை நியமித்து, அவர்கள் கார்யம் அனைத்தும் நினைக்கும்படி நடத்திவைக்கும் வல்லமை வாய்ந்தவர். பரமோதாரர்; அதிதீரர்; எப்போதும் இனிமையும் சித்ரமும் இணைந்த சொற்களால் எவரையும் மகிழ்விக்கும் புகழுடையவர். இவர் ஸ்ரீரங்கத்திற்குப் பெரிய பெருமாளை மங்களாசாஸநம் செய்ய எழுந்தருளி யிருந்தபோது, "பழங் கிழத்தைப் பார்க்க, பழங் கிழம் வாங்கி வா" என்று நியமித்தாராம். அடியேனுடைய ஆசாரியரான நம்மாண்டவனென்னும் ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகன், பூர்வாஸ்ரமத்தில் இந்த ஸ்வாமியுடன், "அடியேன் ரிக்தன்" என்றதற்கு, இவர், "ஆம், அதி ரிக்தர்" என்றாராம். "இல்லை, அடியேன் வடம்" என்றதற்கு ஸ்வாமி "வடகர்" என்றாராம். இப்படிப் பரம ரஸிகரான இந்த ஸ்வாமி குமாரரான நம் ஸ்வாமிக்குக் குடும்ப பரம் சிறிதும் தெரியாதிருக்கும்படி குமாரருடைய படிப்பையும் அதன் பயனான படிவையுமே பெருமையாகக் கருதி யோக க்ஷேமத்தை நடத்தியவர். இவருடையவும், ஸ்ரீ தாதா ஸ்வாமியினுடையவும், இவர்களின் முன்னோர்களினுடையவும், ஞாநாநுஷ்டாநங்களும் ஆத்ம குணங்களும் ராஸிக்யமும் ஒருங்கே திரண்டு ஸௌம்ய மூர்த்தியாக வந்ததென்பது மிகையாகாது. "ஶாந்தம்ஶரச்சந்த்ரமஸம் ப்ரஸந்நம் | ஜநோ விஶேஷாதாந்தம் வஶீகரோதி நிஜஸ்வரூபேந" என்றபடி ஶாந்தமான தாந்தம் (ஆனைத் தந்தம்) போன்ற நம் ஸ்வாமியின் ரூபமே பண்டிதரோடு பாமரரையும் வாசியற வசீகரிக்கும் வல்லமைவாய்ந்தது. கருவிலே திருவுடையரான இவருக்குக் கர்ப்பாஷ்டமத்திலேயே உபநயநம் நடைபெற்று, ஆசார்யாதீநராய் அத்யயநம் பண்ணும்போது, ஐந்து ஸந்தையிலேயே அத்யயநம் ஸ்வாதீநமானதைக் கண்ட ஆசார்யன் ஆச்சரியப்பட்டு அனைவரிட மறிவிக்க, கண்ணெச்சில் பட்டு ஆறுமாத மாறாத ஜ்வரத்தோடிருந்து, ஸ்ரீதாம்ரபர்ணி ஆற்றின் கரையில் ஆரோக்ய மடைந்தார். பின்பு காவ்யாலங்கார ஜ்ஞாநாலங்க்ருதராய், "கந்யாம் கநகஸம்பந்நாம்" என்றபடி குணங்களாலும் ரூபத்தாலும் பூஷணங்களாலும் பூஷிதையான மனதிற் கிசைந்த மனைவியை மஹநீயர்களான பெரியோர் மணம் செய்விக்க, அவ்வாஸ்ரமத்திற்குரிய ஔபாஸநம் முதலிய நித்ய கர்மங்களை நித்யமாக நடத்திவந்து, திருநாட்டுக் கெழுந்

தருளுந் தினத்திலும் கா்லையில் ஔபா்ஸநத்தை நடத்தி, மாலையில் வநமாலை மார்பனை மகிழ்ந் தடைந்தா ரென்றால், இவருடைய நித்ய கர்மாநுஷ்டாந ஶ்ரத்தையை என்னென்று சொல்வது? இவருடைய் மாமனார் என்னும் பாக்யம் பெற்ற ஸ்வாமி “ஸம்ஸார விஷவ்ருக்ஷஸ்ய த்வே ஃபலே ஹ்யம்ருதோபமே |” [ஸம்ஸார மென்னும் எட்டி மரத்தில் இரண்டு பழங்கள் அம்ருதம் போன்றவை] என்றபடி அடியேனுக்கு ஸ்ரீமத் ஆண்டவன் திருவடி ஸம்பந்தமும் ஸ்ரீ ஸௌம்ய மூர்த்தியின் அநுபந்தமும் என்ப தோடு, ஸ்ரீமத் ஆண்டவன் மாதாவென்றும் ஸ்ரீ ஸௌம்ய மூர்த்தி ஜாமாதா வென்றும் ஸாதிப்பர். ஸ்ரீமத் ஆண்டவன் ஸந்நிதியில் கைங் கர்யம் செய்யும் பாக்யம் பெற்ற ஸ்ரீ வில்லிபுத்தூரில் அபிஜாத ரான நடாதூர் ஸ்ரீ உப. அம்மாளாசார்ய ஸ்வாமி நம் ஸ்வாமி யின் மாதாமஹர். நம் ஸ்வாமி திருமாளிகையில் ஸ்ரீமத் ஆண்டவன் திருவடி ஸம்பந்தம் பெற்ற ஓர் அத்தைக் கிழவி வ்யாஜமாக மாசிப் புஷ்ய திரு நக்ஷத்ர மஹோத்ஸவம் நடந்ததுண்டு என்று ஸ்வாமி ஸாதிப்ப துண்டு. இதனால் ஸம்ப்ரதாயங்களில் வைஷம்ய லேசமின்றிக் கலந்து பரிமாறும் பெருமை நம் ஸ்வாமியுடையதென்பது வெளிப்படை. மேலும் ஸ்ரீமத் ஆண்டவன் திருவடி பண்டித ப்ரபுவான வெள்ளக்குடி ஸ்ரீ ரங்காசார்ய ஸ்வாமியிடம் ந்யாய சாஸ்த்ரத்தை அதிகரித்தவர். பின்பு ஸ்ரீரங்கம் வித்வான் தீர்த்தகாரர் ஸ்ரீமத் எம்பார் க்ருஷ்ணமாசாரிய ஸ்வாமியெனும் தீர்த்தகாரரிடம் ந்யாயசாஸ்த்ரத்தை முற்றிலும் உணர்ந்த வர். திருக்கோட்டியூர் ஸ்ரீ உப. வித்வான் ஸ்வாமியாசார்ய ஸ்வாமியிடம் வ்யாகரணமும், ஸ்ரீகாஞ்சியில் மஹா வித்வான் பட்டப்பா ஸ்வாமியிடம் மீமாம்ஸையும் கற்றவர். “ஶ்ருதம் வாஸ்யே ததாஸ்யேன ஸ்வர்ணாராண்யகம் ஶ்ருதம்” என்றபடி ஸ்வாமி பால்யத்திலேயே ஸ்வக்ருத பரி பாகத்தாலே தாம் ஸ்வயம் பாகம் செய்துகொண்டே இடையூறின்றி அயலூர்களில் கல்வியைக் கற்றவர். இதற்கெல்லாம் முந்தியே ஸ்ரீ தாதா ஸ்வாமி ஸந்நிதியிலே அத்யாத்ம வித்யையை அதிகரித்து, அதற்கு வ்யாகரணம் முதலான சாஸ்த்ரங்களை யெல்லாம் உபகரண மாக்கி அதிகரித்தவர். ஸ்ரீ தாதா ஸ்வாமி ஸ்ரீ பேரன் ஸ்வாமியை சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதிக்கும்படி நியமித்து, அருளிச்செயல் முதலானவற்றை அருளிச்செய்துவரும் அழகைக் கேட்டுக் களிப்பதுண்டு என்றால், இவருடைய ஞான விகாஸத்தை என்னென்று எழுதுவது? பின்பு ஸ்ரீ மதுராந்தகம் பக்கம் மாம்பாக்கத்தில், ஸ்ரீமான் ஆழ்வார் ராமாநுஜாசாரியரால் அழைக்கப்பட்டு, ஆதரத்துடன் அளிக்கப்பெற்ற திருமாளிகையில் அச்யுதனை ஆராதித்துக்கொண்டு, அங்கு வந்தவருக்குக் காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு, பல வருஷங்கள் ஸ்ரீ ஆழ்வார் ராமாநுஜாசாரியரும் ஸ்ரீமான் குமாரரும் யோக க்ஷேமங்களை நிர்வஹிக்க நிர்ப்பரராய் எழுந்தருளியிருந்தார். பின்பு ஸ்ரீரங்கத்தில் ஐந்து வருஷ காலம் பெரிய பெருமாளை மங்களாசாஸநம் செய்து

கொண்டு தஞ்சையில் ஸமீபத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் ஐதராபாத் ராஜா பஹதூர் க்ருஷ்ணமாசாரியரால் அன்புடன் ஆராதிக்கப்பட்டார். இவர் ஸ்ரீ ஸ்வாமியையும் அழைத்துவந்து முன்போல் உங்கள் அருகில் போதுபோக்க வேணுமென்று சொன்னவர், ஸ்ரீஸ்வாமி திருநாட்டை அலங்கரித்ததைக் கேட்டுத் தாமும் அங்கே சென்றார் போலும். இவர் ஸ்ரீபாகவதம் ஸ்ரீமத் ராமாயணம் முழுவதும் ஸ்ரீஸ்வாமியிடம் கேட்டவர். நம் ஸ்வாமி "விம்ஶத்யப்தே விஶ்ராந்தாநாவித்ய:" என்றபடி ஸ்ரீதேசிகனைப் போல் இருபது வயதில் எல்லாக் கல்விகளையும் கற்று, இடைவிடாது புராண ப்ரவசநத்தையே ஸ்வ தர்மமாகக் கொண்டவர். தாம் மஹா பண்டிதராயிருக்கச் செய்தேயும், சிலர் ஸ்வாமியைப் பௌராணிகரென்று புல்லியதாகச் சொன்னதாகக் கேட்ட ஸ்வாமி, அது நமக்குப்பெருமையேயென்று ஸாதித்ததாகக்கேட்டதுண்டு. ஸ்ரீதாத்தா ஸ்வாமி முதலான பெரியோர்கள், சிறுவயதிலேயே ஸ்வாமி புராணம் அருளிச் செய்வதைக் கேட்டு உவந்ததுண்டு.

இனி, ஸ்ரீ ஸ்வாமியின் கல்யாண குணங்களைச் சிறியேன் சிறிது விண்ணப்பித்துகொள்கிறேன். 'ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்' என்றபடி அழகிய சாந்த ரூபத்துடன் யாரிடத்திலும் தாக்ஷிண்யமும் நிறைந்தவர். யார் எங்கே எழுந்தருள வேணுமென்று அபேக்ஷித்தாலும், பரம க்ருபையோடு அங்கீகரிக்கும் ஆற்றலுள்ளவர். "பாரதந்த்ர்யம் பரே பும்ஸி" என்றபடி பரமபுருஷனிடம் பாரதந்த்ரியம் போல் பிறரிடமும் வாத்ஸல்யத்தால் பாரதந்த்ரியம் பெற்று, அவர்களிட்ட வழக்காயிருப்பது வழக்கம். ஸ்ரீரங்கத்தில் புராணத்திற்குப் பலர் காத்திருக்கின்றனர். ஸ்வாமியிடம் தர்ம சாஸ்த்ர ஸந்தேஹம் தெளிந்து சிலர் சென்றனர். மணி ஒன்பது ஆயிற்று. உள்ளே சென்று திருவாராதநமான பின் ஸ்தல சுத்தியும் செய்தாயிற்று. அமுது செய்வதற்கு அதிதிகளுடன் எழுந்தருளியிருந்தபின், இலை இலை யென்று பெண்டுகள் சொல்வதைக் கண்டு சிறிதும் விசாரமின்றிப் புராணத்திற்கு எழுந்தருளியாயிற்றென்றால், ஸ்வாமியின் சாந்தியை வர்ணிக்க வேண்டுமோ? தம் ஸம்ப்ரதாயத்தில் நிஷ்டையிருந்தும் பிற ஸம்ப்ரதாயத்தை வாக்யார்த்தி லின்றிக் குறை சொல்வதைச் சிறிதும் தாங்காத் திருவுள்ளமுள்ளவர். இன்னும் பன்னி உரைக்குங்கால் பாரதமாம். இம் மஹானுடைய மன உறுதியை மாற்ற முடியாது. தமக்கு விசேஷ ஸஹாயங்க ளிருந்தும் தம் குமாரர்களைப் பாஷாந்தரத்தில் விடாதிருந்த பெருமை, பண்டித மண்டலத்தில் ஸ்வாமிக்குமட்டும் ஸொந்தமாகும். இவரால் உத்ஸவங்களில் அநுயாத்ரை அவஶ்ய மென்பதை ஸ்ரீரங்கத்தில் அனைவரும் உணர்ந்தார்கள். இனி இத்தகைய ஸௌம்ய மூர்த்தியை இங்குக் காண்பதற்கில்லை. இவர் குணங்களைப் பாடியும் ஆடியும் தரித்ரீ (பூமி)யில் தரித்திருப்போம்.

2/0112

(6)

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்யர், அட்வோகேட், திருச்சினுப்பள்ளி]

ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்ய ஸேவதியாய் எழுந்தருளியிருந்த இந்த ஸ்வாமியின் வியோகத்தால் ஸ்ரீ வைஷ்ணவ லோகம் ஸோக ஸாகர நிமக்நமா யுள்ளது. ஸ்வாமி பால்யம் முதற்கொண்டு சுமார் ஐம்பது வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாய்த் தாஸனுக்கு நெருங்கிய பரிசயம். ஸ்வாமியினுடைய மாதாமஹர் ஸ்ரீ உபய அம்மாளாசார்யர், ஸ்ரீரங்கத்தில் சின்ன ஆண்டவன் என்று ப்ரஸித்தமான ஸ்ரீ பாதுகா ஸ்வாமிக்கு ஸுஸ்ரூஷை செய்துகொண்டு எழுந்தருளியிருந்தபடியால், அங்கேயே நம் ஸ்வாமி இருந்து, ஸ்ரீ உபய எம்பார் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியிடம் ந்யாய வித்யா க்ரஹணம் செய்தார். வேதாந்த க்ரந்தங்களைத் தம் பிதாமஹரிடம் முழுவதும் அதிகரித்தார். அதிபால்யத்திலேயே ந்யாய வேதாந்தங்களில் பூர்ணுதிகாரியானுர். பால்யம் முதலிலேயே அநுஷ்டாந வைலக்ஷண்யமும் ஸ்வாமியினிடம் விளங்கிவந்தது. சுமார் 47-வருஷங்களுக்குமுன் ஸ்ரீரங்கத்தில் தேசிகன் க்ரந்தங்களில் பரீக்ஷித்து, தேசிகன் ஸ்ரீ ஸூக்தி கோஸங்களைப் பரிசு கொடுப்பதற்காகத் திருவெவ்வுளூரிலிருந்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி எனும் ஒருவர் எழுந்தருளி ஓர் பரீக்ஷா ஸபை நடத்தியதில், நம் ஸ்வாமியும் பரீக்ஷகராக இருந்தார். அந்த ஸபையில் அத்யக்ஷகராக இருந்த மேல்ப்பாளையம் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ ரங்காசார்ய ஸ்வாமி, இந்த ஸ்வாமியின் மேதையையும் ஜ்ஞாநத்தையும் அநுபவித்து ஆஸ்சர்ய ரஸத்துடன் புகழ்ந்தார். பெருமாள் கோயிலில் வித்யா ஸமுத்ரமாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ திருப்புட்குழி பட்டப்பா ஸ்வாமியினிடம் மீமாம்ஸா ஸாஸ்த்ரத்தை க்ரஹித்தார். கோஷ்டீபுரத்தில் அத்வைத வேதாந்தத்திலும் ஸாஸ்த்ரங்களிலும் பாரங்கதரான மஹாமஹோபாத்யாய ஸ்ரீ ஹரிஹர சாஸ்த்ரிகளுடன் வேதாந்த விஷயங்களில் அடிக்கடி சர்ச்சைகள் நேர்ந்ததில், அப்பெரியார் இவர் ஜ்ஞாநத்தில் மிக்க பஹுமாந முடையவராய்த் தம்முடைய குமாரரை இவரிடம் ந்யாய ஸாஸ்த்ரம் க்ரஹிக்கும்படி செய்தார். பால்யம் முதலிலேயே ஸ்ரீமத் ராமாயணம், மஹாபாரதம், ஸ்ரீ பாகவதம், ஸ்ரீ விஷ்ணு புராணம் இந்த க்ரந்தங்களைப் பிற்பகலிலாவது ராத்ரி காலத்திலாவது ப்ரதிதிநமும் ப்ரவசநம் செய்வது வழக்கம். இவ ராசிரியராகிய பிதாமஹ ஸ்வாமியும், ஸாஹித்ய ஸாஸ்த்ராதி படநத்தில் ப்ரஸித்தரான இவர் திருத்தகப்பனுரும், இந்த ப்ரவசநங்களில் ஸ்ரோதாக்களாக இருந்து, அத்புத ரஸத்துடன் ஆநந்த பரவசராக இருப்பர். திருமெய்யத்திலும் திருக்கோட்டியூரிலும் சில வருஷங்கள் க்ரந்த சதுஷ்டயங்களையும் காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டுவந்த பிறகு, ஸத்வோத்தரரான ஸ்ரீ உபய ஆழ்வார் ஸ்வாமி ஸமர்ப்பணம் செய்த ஸ்வாஸ்த்யத்தை அநுபவித்துக்கொண்டு, ப்ரதிதிநமும் மதுராந்தகம் மாம்பாக்கத்தில் காலக்ஷேப ப்ரவசநமும் புராண ப்ரவசநமும் ஸமாராதநமும்

செய்துவந்தார். 1912-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் ஸ்ரீ மதுராந்தகத்தில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸபையில் இந்த ஸ்வாமியின் உபந்யாஸங்களை விஸ்தாரமாகக் கேட்டதில், இவருடைய அத்புதமான ஜ்ஞாநமும், ப்ரவசந சக்தியும், அநர்க்கமான வைராக்யமும், சீலமும், உலகோர்க்கு ப்ரஸித்தமாக விளங்கின. மாம்பாக்கத்தில் இந்த ஸ்வாமியின் காலக்ஷேபங்களை அப்பொழுதே கேட்டிருக்கிறோம். பின்பு ஸ்ரீரங்கத்திலும் பலகால் ஶ்ரவணம் செய்துள்ளோம். காலக்ஷேப ப்ரவசநமே ஓர் வ்ரதமாகத் தாம் அநுஷ்டிப்பதாயும், தாம் 'ப்ரவசந நித்யர்' என்றும் மாம்பாக்கத்திலேயே ஸாதித்தார். யாவதாயுஷமும் காலக்ஷேப ப்ரவசநத்தையும் புராண ப்ரவசநத்தையும் நாள் தவறாமல் நடத்திவந்தார். சுமார் 23-வருஷங்களுக்குமுன் சென்னையில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸபையில், 'ராமாநுஜகூட'மென்று ஓர் விஷயம் இந்த ஸ்வாமியின் உபந்யாஸத்திற்காகக் குறிப்பிட்டிருந்தது. அந்த ஸபையில் அந்வயிக்க மனம் ஸமாதாநப்படாமல், தாம் அந்வயிக்க முடியாதென்று ஒரே உறுதியாக ஸாதித்துவிட்டதைக் கேட்டு, இந்த ஸ்வாமியின் வைராக்யத்தையும் மன உறுதியையும் கண்டு யாவரும் விஸ்மயப்பட்டு ஶ்லாகித்தார்கள். ஸபை முடிந்த பிறகு தனியாக ஒருநாள் அதே இடத்தில் அதே விஷயத்தை ஸாதிக்கும்படி எல்லோரும் ப்ரார்த்திக்க, அப்படியே அங்கே ஓர் தினம் 'ஃஷிஜஃ) வஃ)ஜநவா: ஸ-ஔெயஃ:' என்கிற ஸப்ததி ஶ்லோகத்தின் பொருளை விஸ்தாரமாக அத்புதமாக உபந்யஸித்தார். யதிவகு,வதிுவடிவஃவகுநமே ராமாநுஜீயர் எல்லோரும் சேர்ந்து கூடிவிளங்கும் ராமாநுஜகூடம் என்று ஸ்வாமி திருவுள்ளம். "ஃஂஹாஸ-ியாஜி-கூஂ ஜிதவிஷயமணஂ" இத்யாதி ஆசார்ய குணபூர்த்தி இவரிடம் குடிகொண்டிருந்ததை ப்ரத்யக்ஷமாய் உலகம் அறிந்துளது. 'ஸூத்ராநுகுண்யஸித்தி' என்கிற க்ரந்தத்திற்குப் பதில் க்ரந்தம் இந்த ஸ்வாமியின் பூர்ண சோதநத்துடன் எழுதி ப்ரசுரம் செய்யும்படி, அடியேனைத் திருக்குடந்தை ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸபையோரும் ஸ்ரீ கபிஸ்தலம் ஸ்வாமி முதலிய பெரியோரும் நியமித்திருந்ததில், அந்த க்ரந்த லேகந விஷயமாய் அநேக திநங்களில் ஸ்வாமியினிடம் அநேக விஷய சர்ச்சைகள் செய்யும் பாக்யம் கிடைத்தது. பூர்வபக்ஷ க்ரந்தம் க்ரந்த கர்த்தாவுக்கே ஸ-வொய மல்லவென்று அத்வைத வித்வத் கோஷ்டியில் ப்ரஸித்தமென்று எமக்குத் தெரியும். ஸ்வாமி ரொம்ப ஶ்ரமப்பட்டு அந்த க்ரந்தத்திற்கு அர்த்தத்தைக் கண்டுபிடித்து அடியேனுக்கு ஸாதிப்பார். சில இடங்களில் அந்தப் பதில் க்ரந்தத்தில் ஸ்வாமி ஸாதித்த பங்க்திகளே உள்ளன. ப்ரமிதாதிகரணம் வரையில் அந்த க்ரந்தத்திற்கு ஸ்வாமியின் சோதந பாக்யம் கிடைத்தது. ஊஹாதிகரணம் வரையில் இரண்டு ஸம்புடங்கள் திருக்குடந்தை ஸபையாரால் அச்சிடப்பட்டன. அந்த க்ரந்தங்கள் தம் க்ரந்தங்களென்றே ஸ்வாமிக்கு அபிமாநம். தத்வமும் அதுவே. ஸ்ரீமத் ராமாயணத்திற்கு ஓர் வ்யாக்யாநம்

ஸாதிக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்ததில் அடியேன் கூடவே இருந்து ஸஹகரித்தால் எழுதிவிடலாமென்று ஸாதித்ததை நிறைவேற்ற பாக்ய மில்லாமல் போய்விட்டது. ஸ்ரீமதுராந்தகத்தில் நம் அழகியசிங்கர் லோகோபகாரமாக ஸ்தாபநம் செய்திருக்கும் ஸம்ஸ்க்ருத வித்யாசாலையில் இந்த ஸ்வாமியை அத்யக்ஷராகத் திருவுள்ளம்பற்றி ஏற்படுத்தி இருந்ததில், இந்த ஸ்வாமியின் ஜ்ஞாநமும் சீலமும் அநேக வித்யார்த்திகளுக்கு உபயோகப்படும் என்பதைப்பற்றி நர்மெல்லாம் ஸந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தோம். எல்லோருடைய மநோரதமும் பக்நமாய் விட்டது. இந்த ஸ்வாமியின் அத்புதமான ஜ்ஞாந வைராக்யாநுஷ்டாநங்களையும் வேதாந்த ப்ரவசநங்களையும் ரஸபரிதமான அத்புதோபந்யாஸங்களையும் நினைந்து நினைந்து அந்த ஸ்வாமியிடம் நம் க்ருதஜ்ஞதையைப் பாராட்டுவது நமக்கு ப்ராப்தம். இந்த ஸ்வாமி விஷயமான அத்புதமான கதைகள் பல உள. அவற்றைத் தனி க்ரந்தமா யெழுதவேணும்.

---

(7)

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யர், அட்வோகேட், திருப்பாப்புலியூர்]

ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி திடீரென்று இந்த லோகத்தைவிட்டுத் திவ்ய லோகத்துக்கு எழுந்தருளிவிட்டதால், ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாயத்துக்கு ஸூர்யாஸ்தமய காலத்தில்போல் இருள் மூட்டம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்க ஸமஸ்த ஆஸ்திக ஜநங்களும் மஹா துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். '𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑍇𑌵 𑌸𑌾𑌧𑌵𑌃' என்றபடி அந்த ஸ்வாமியின் திருமேனியை ஸேவித்த மாத்ரத்தில் ஒருவனுக்குப் பாபம் நீங்கிப் பரிசுத்தி ஏற்படும் என்பது அதிஶயோக்தியாகாது. ப்ரஹ்மவர்ச்சஸ்ஸும், ஶாஸ்த்ரோக்தமான நியமமும், யதாக்ரம தர்மாநுஷ்டாநமும், அதிவிலக்ஷணமான வைஷ்ணவாசாரமும், ஸத்த்வைகதாநத்வமும், ஆர்ஜவமும், வைராக்யமும், நித்யப்ரகாஶமான ப்ரதிபா விசேஷமும், அஸங்குசித ஜ்ஞாந வைஶத்யமும், அதிவிபுலமான வித்யா வைஶாரத்யமும், அந்த ஸ்வாமியினிடம் "𑌗𑍁𑌣𑌾𑌗𑍁𑌣𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌪𑍍𑌰𑌸𑌵𑌾 𑌇𑌵" என்றபடி ஒன்றுக்கொன்று போஷித்துக்கொண்டு ஓர் அபூர்வமான ஸௌபாக்யத்தை உண்டுபண்ணு நின்றனவென்பது, அவரிடம் சிறிது பரிசயமுள்ளவர்கூட உணர்ந்த விஷயம். மநோ வாக் கர்மங்கள் ஏகரூபமாய் அவரிடம் ஸர்வதேச ஸர்வ கால ஸர்வாவஸ்தைகளிலும் அமைந்திருந்தனவென்பது ஸுப்ரஸித்தம். அவரது திருநாமத்துக்கு அநுகுணமாக அத்யந்த ஸௌம்யதை அவரிடம் குடிகொண்டிருந்தபோதிலும், தர்மவ்யதிக்ரமம் ஏதாவது தென்பட்டால் அக்காலத்தில், '𑌶𑌮𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑍇𑌷𑍁 𑌤𑌪𑍋𑌧𑌨𑍇𑌷𑍁 𑌗𑍂𑌢𑌂 𑌹𑌿 𑌦𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑌸𑍍𑌤𑌿 𑌤𑍇𑌜𑌃। 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌾 𑌇𑌵 𑌸𑍂𑌰𑍍𑌯𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑌦

தேஜோऽஸி ஸஹஸ்வாநஸி' என்று மஹாகவி கூறியபடி, அவர் சீறியருளும் ப்ரகாரத்தைப் பல ஸந்தர்ப்பங்களில் அடியேன் போல்வோர் ப்ரத்யக்ஷ மாகக்கண்டு ஆச்சர்யப்பட்டுஉகக்க நேர்ந்திருக்கிறது. அந்த ஸ்வாமியின் தார்ட்யமும், எவ்வித அநாவஶ்யமான ஸங்கேதத்துக்கும் உட்படாமல் தம் மநஸ்ஸுக்கு ஶாஸ்த்ர ஸம்மதமென்று நிச்சயமாய் ஏற்பட்ட மார்க் கத்தையே அநுஸரிக்கும் ஸ்வபாவமும், எல்லோரும் அறிந்த விஷயம். இவ்வகையான உத்தம குணநிதியாயிருந்த இந்த ஸ்வாமி திடீரென்று கலி யான இம்மண்ணுலகை விட்டுத் தம் ஸ்வபாவத்துக்கு அத்யந்த அநுரூப பஹுளமான விண்ணுலகுக்கு எழுந்தருளிவிட்டதால், ஸாது ஜநங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டமும் கஷ்டமும் அளவிடத்தக்கவை அல்ல. தயா நிதியான பகவான்தான் நமக்கு இப்போது நேர்ந்திருக்கும் சோகத்தை யும் மோஹத்தையும் போக்கி நம்மைத் தேற்றி அநுக்ரஹிக்கவேண்டும்.

---

(8)

பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உப.ரே. திருமலை அய்யங்கார், தமிழ் வித்வான், கார்யதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

மறையோன் மறைவு

"உலக முழுதுந் தெய்வத்தின் வயத்தது; அத்தெய்வம் மந்தி ரத்தின் வயத்தது; அம்மந்திரம் அந்தணர் வயத்தது; அவ்வந்தணர் எமக்குக் கடவுளாவர்" என்றனன் மறைவாழு மாயவன். அந்தணர், கரியமாலினும் கண்ணுதலானினும், உரிய தாமரைமேல் உறைவானினும், விரியும் பூதம் ஓர் ஐந்தினும், மெய்யினும் பெரியர் எனக் கண்டவன் கம்பநாடன். நல்லொழுக்கமுடைய அந்தணர், ஒருவனைப் பார்த்து 'இவ னுக்கு நன்மை பெருகவேண்டு'மென்று கூறினாலும், 'இவன் அழிந்திட வேண்டு'மென்று கூறினாலும், விதியும் அவர் ஏவலின்படி நிற்பதால், அவ்வந்தணரினும் சிறந்த பொருள் எதுவுமில்லை.

" நாவ காரியம் சொல்லி லாதவர் நாடொறும்விருந் தோம்புவார்
தேவ காரியம் செய்துவேதம் பயின்றுவாழ் திருக்கோட்டியூர் "
(பெரியாழ்வார் திருமொழி, 4. 4. 1.)

" குற்ற மின்றிக் குணம்பெருக்கிக் குருக்களுக் கநுகூலராய்ச்
செற்ற மொன்று மிலாத வண்கையி னார்கள்வாழ் திருக்கோட்டியூர் "
(ஷை 4. 4. 2.)

" பூத மைந்தொடு வேள்வியைந்து புலன்க ளைந்து பொறிகளால்
ஏத மொன்று மிலாத வண்கையி னார்கள்வாழ் திருக்கோட்டியூர் "
(ஷை 4. 4. 6.)

" குருந்த மொன்றொசித் தானொடும்சென்று கூடியாடி விழாச்செய்து
திருந்து நான்மறை யோரிராப்பக லேத்திவாழ் திருக்கோட்டியூர் "
(ஷை 4. 4. 7.)

"கோவையின் தமிழ்பாடுவார் குடமாடுவார் தடமாமலர்மிசை
மேவு நான்முகனில் விளங்கு புரிநூலர்
மேவு நான்மறைவாணர் ஐவகை வேள்வி ஆறங்கம் வல்லவர்தொழும்
தேவ தேவபிரான் திருக்கோட்டி யூரானே" (பெரிய திருமொழி, 9. 10. 9.)

என்ற ஆழ்வார்கள் அருளிச்செயல்கள் பொய்யில் பாடல்களே என்று பூவுலகி லுள்ளோர் போற்றுமாறு தம் வாழ்வை நடாத்தி, இரு மறை யிறுதியி னினிதிருந்து, தாமின்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுற்ற கண்ணியர் நம் செந்தமிழ் நாட்டுக்கு ஓர்தனித் தீபமாய் விளங்கிய திருக் கோட்டியூர் ஸ்ரீ. ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி, மாசி மாதம் திரு நாட்டை அலங்கரித்தார் என்பதைக் கேட்டு ஆற்றொணுத் துயரில் அழுந் திக் கிடக்கின்றது இவ்வையம். அறநெறி காத்து, அருமறைப் பொருள் விரித்து, அரியடிக்கே அருந்தொண்டாற்றும் திருத்தகவுடைய இப் பெரி யாரின் மறைவு, முற்றத் துறந்த முக்கோற் பகவரையும் சோகத் தாழ்த்து மெனின் அதனைப்பற்றி என் கூறுவது?

இருமாமறை முடிப்பொருளையும் கண்டு விண்ட இம்மாமறை யோன் மாதவத்தன். இவர் செந்நாவிடையே இருமாமறைகளும் ஒன்றிச் செழித்து வளரா நின்றன. வியாகரண வன்மையும், தருக்கச் செறிவும், மீமாஞ்சைத் தேர்ச்சியும், இருகலைப் புலமையும், அறநூல் தெளிவும், மறை முடித் திருவும், இவர் திருவுள்ளத்து ஒருங்கிக் குலாவா நின்றன. இவர் அமுதத் திருவாக்கின் வன்மையும் தூய்மையும் உவமை யற்றன. "அந்தணர் என்பர் அறவோர் மற்றெவ் வுயிர்க்குஞ், செந் தண்மை பூண்டொழுகலான்" (திருக்குறள்: அறத்துப்பால்: நீத்தார் பெருமை. 10) என்ற பொய்யாமொழிக்குப் பேரிலக்காய் நின்ற பெரி யார் இவர் எனின் அது மிகையாகாது. நல்லுணர்வும், நல்லறமும், நல்லன்பும், இவரிடத்து நன்கு வாழ்ந்து நலம் திகழ்ந்தன என்றதைக் கண்களாரக் கண்டு களித்துள்ளோம். எம்பெருமானுர் தரிசன வெற் றிக் கொடியை நிலைநாட்டிக்கொண்டே மேன்மேலும் வீறுபெருத்து வளர்த்து வந்த இப்பெருந்தகையாளரது ஆச்சரிய மறைவு, நினையுந் தொறும் மனக் கவலையை மிகுக்கின்றது. ஆனுல் ஞான முன்னிய நான் மறையாளராகிய இவ்வந்தணச் செல்வர், நாவளரும் பெரு நான்மறை யோதிய கீதமெல்லாம் பாவளருந் தமிழ்ப் பல்லாண் டிசையுடன் பூவள ருந் திருமாது புணர்ந்த நம் புண்ணியனுர் தாவளமான தனித்திவஞ் சேர்ந்து பாடிக் கொண்டிருக்கின்ருர். இம்மா பெருந்தகையார்க்குப் "பொலிக பொலிக" என்று சொற்பணி செய்வதல்லால் மற்று யாது யாம் செய்ய வல்லோம்?

பாரோர் பாக்கியப் பார்ப்பனச் சிட்டரான இப்பெரியாரைச் செவ்வனே போற்றல் சீரியர் கடன். இவரது ஞாபகார்த்தமாக வருடந் தோறும் குறைந்தது ஒரு வாரமாயினும் ஒரு வித்வத் ஸதஸ்ஸைக் கூட்டிப் பல பண்டிதர்களைக் கொண்டு விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரவசனம்

செய்வது சாத்தியமாகவும், அவரது ஆன்மாவுக்கு மிகவும் உகந்ததாகவு மிருக்கும். அத்துடன் ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீபகவத்விஷயம், இத்யாதிகளில் ஒரு பரீக்ஷை ஏற்பாடு செய்து, அதில் முதல்தரமாகத் தேறுமவர்கட்குத் தகுந்த பரிசு கொடுக்கவேண்டிய ஏற்பாடு செய்யின், அது அம்மாமறை யோனது திருவுள்ளத்தை நிறைவேற்றியதாக வாகும். இதனைத் தார் மிகர்கள் சற்றுக் கவனிப்பாராக.

நற்குணக் கடலான திருக்கோட்டியூர் நம்பியின் பிரிவாற்று மையை இவரது திருத்தம்பியார்க்கும், இவரது இரு தவப் புதல்வர்கட் கும் விண்ணப்பம் செய்துகொள்கிறேன்.

---

(9)

[ஸ்ரீ. உப. கே. ராம ஐயங்கார், அட்வோகேட், மதுரை]

க்ருஹஸ்த ஸந்யாஸியும், ஜ்ஞாநக் கடலும், விசேஷ பாண்டித்யம் அன்பின் வடிவு நிரந்தர ஈஸ்வராநுபவம் க்ருபாமூர்த்தி ஜீவகாருண்யம் ஆத்மஸாம்யம் இத்யாதி மஹா குணாதிசயங்களையும் இயற்கையில் அடைந்த ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸ்ரீ ஸௌந்தர ஸௌம்ய மூர்த்தி ஸ்வாமி, 18உ செவ்வாய்க்கிழமை பகவச் சரணாரவிந்தங்களை யடைந்தார். இந் நிகழ்ச்சி, பல விதத்திலும் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற இவ்வுல கத்திற்கு அபார நஷ்டமான விஷயம். உலகம் தத்தளிக்கையில், ஜாதி வர்ணாஸ்ரம மத ஆத்மாவலோகந சாஸ்த்ராநுபவ விஷயங்கள் அநேக மாக அழிந்திருக்கிற காலத்தில், உள்ளங்கை நெல்லிக்கனிபோல ஜாத்யாதி வைலக்ஷண்யம் - ஓர் உதாஹரணமாக ஈஸ்வராநுபவம் எப்படி மூர்த்தீகரிக்கும் என்பதைப் பார்க்கும்படியிருந்த இந்த ஸ்வாமி மறைந்தது, சிந்திக்கச் சிந்திக்க அதிக கவலையை உண்டுபண்ணுகிறது. அடியேனுக்குச் சுமார் 50 வருஷ காலமாக இந்த ஸ்வாமியின் வைபவங் கள் தெரிய அவகாசம் ஏற்பட்டது. இன்னும் ஒருமுறை ஸ்வாமியினுடைய பருத்த ஞான அநுபவம் கிடைக்குமோவென்று ஆவல் பட்டுக்கொண் டிருந்த அடியேனுக்கு, இதனால் ஏற்பட்டிருக்கும் க்லேசம் வர்ணிக்கத் தக்கதன்று. ஒரு விஷயத்தை எடுத்துப் போதிக்கும்போது, ஸ்வாமி யின் ஆத்மாநுபவம் பூர்ணமாக ப்ரகாசிக்கும். திருமேனியின் ஸௌந்தர் யமும் சாந்தமும் பகவத் விஷயத்தில் திருமேனியை ஈடுபண்ணிப் புளகாங்கிதப்படுவதையும் நினைத்தாலே போதுமானது. மஹாபாண் டித்யமுள்ள இந்த ஸ்வாமியின் பாட்டனர் ஸ்ரீ. உ. வே. ஸௌந்தரராஜா சார்ய ஸ்வாமி, திருத்தகப்பனர் ஸ்ரீ. உப. ஸௌந்தர கோபாலாசார்ய ஸ்வாமி, இவர்கள் அநுக்ரஹத்தால் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனைப் போல் 20-பிராயத்துக்குள் ஸகல சாஸ்த்ரங்களையும் அதிகரித்து, அவற்றை அநுஸரித்தே ஸ்வாமியின் ஜீவகாலம் நிறைவேறியது உபய வேதாந்த பூர்த்தியினால் ஏற்பட்ட ஒழுக்கம்.

---

(10)

[ஸ்ரீ உப. வி. ரே. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட், மதுரை]

மேல்நாட்டுக் கல்வியில் வைதிக வம்சோத்பவர்களும் வெகுவாக ஈடுபட்டுத் தத்தம் குலதர்மங்களாகிய ஞானாநுஷ்டாநங்களைக் கைவிட்டு நிற்கும் இப்போது, சுமார் ஒரு நூற்றூண்டு காலம் இந்தத் தேசத்துக்கு மற்றெல்லாக் காலங்களிலும் அதிகமான துக்க ஹேதுவான காலம். விசேஷமான பகவத் பாகவத கடாக்ஷங்களுக்குப் பாத்ரர்களான ஒவ்வொரு புண்யாத்மா, ஒரோவிடத்தில் காணக் கிடைப்பதும் அரிதாகிவிட்டது. திருகோஷ்டியூரில் பெரியாழ்வார் ஈடுபட்டது, சோலையில் மரக்கிளைகளில் நிறைந்திருக்கும் குயில்களும் கோவிந்தன் குணம் பாடும் சிறப்புடைத்து என்று. அங்குள்ளவர்கள் ஸாதுக்களாகவும் தர்மநிஷ்டர்களாகவு மிருப்பதை ஐந்து பாசுரங்களினுல் விளக்கினுர். இந்தத் திவ்ய தேசத்தில் கலி ப்ரவேசம் அதனுல் விலகி, ஸ்வாமி அங்கே அவதரித்தார் என்று சொல்லத் தட்டில்லை. ஞான வைராக்யங்களிலும் நித்ய கர்மாநுஷ்டாநங்களிலும் அந்வயிக்கப் பெற்றவர்கள் மிகப் பெரியவர்கள். அத்துடன் தம்மை அடுத்தவர்களுக்கும் அவை ஸித்திக்கும்படியாகத் தத்வ ஹிதங்களை உபதேசித்துப் பலரையும் தங்யர்களாக்கிய இந்த ஸ்வாமியின் சீரும் சிறப்பும் அஸாதாரணமாகும். பண்டித பாமரர் ஸமஸ்தர்களுக்கும் ஸ்வரூப ஜ்ஞாந முண்டாகும்படி ஸ்வாமி ஆற்றும் ப்ரவசந ஸௌஷ்டவம் அந்யாத்ருஸம். வேதமும் தர்மங்களும், தாம் படர்ந்து பூத்துக் காய்த்தற்கு ஹேதுவாயிருந்த கொள்கொம்பை இழந்து அழுது நிற்கையில், அடியோங்கள் வ்யஸநம், ஸ்வாமியை இழந்ததுடன் அவைகளின் ஆதரவில் அந்வயித்துத் தாயில்லாப் பிள்ளைகளாகிவிட்ட அவைகளைத் தேற்றிப் பரிபாலிப்பதில் பரிதலுடைத்து. ஸ்வாமி நித்யஸூரியாய் நம் அந்வயத்தைத் தலைக்கட்டித் தர லோகாந்தரத்திலும் த்வரை யுடையரா யிருப்பர். அவர் நினைவும் செயலும் அடியோங்களும் மறவாதிருப்போமாக.

'எப்பொழு தெப்பொழுது தர்மத்துக்குச் சோர்வு நேருமோ, ஒவ்வொரு யுகத்திலும் அவ்வப்பொழுது நான் உண்டாகிறேன்' என்ற ஸத்ய ஸங்கல்பம், ஸாதுக்களை ரக்ஷித்துத் தீயவை செய்பவர்களை நாசம் செய்தலைக் கார்யமாக உடையது.

பயிரில் களைபோல் அசுரரைக் காய்தல் இது. இந்த ரக்ஷணத்துக்கும் காய்தலுக்கும் ஸாதுக்களின் இருக்கை ப்ரதாந காரணம். அஃதின்றேல் அவன் பிறத்தலு மில்லை; அசுரரைக் களைதலும் அவசியமில்லை. இப்படியிலுள்ள ஸாதுக்கள், தர்மாநுஷ்டாநத்தை அபிவ்ருத்தி செய்துகொண்டிருத்தலில் மாத்ரம் தம் கடமையைச் செய்து வருவார்கள். இதன்மூலம் பாபமும் அதர்மச் செயல்களும் தாமாகவே அழியும். இதைத்தான் "நெற் செய்யப் புற்றேயு மாப்போல" என்று பெரியோர் சுருக்கிக் கூறினுர்கள். இவ்விதம் நெற் செய்த பெரியார்களில் நம் திருகோஷ்டியூர் ஸ்வாமி ஒரு முக்யஸ்தர் என்பது நிச்சயம்.

(11)

[ஸ்ரீ. உப வீ. வீ. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ்.]

ப்ரஸித்தி பெற்ற ஆங்கிலக் கவி யொருவர், 'மஹான்களுடைய வாழ்க்கையானது, அவர்கள் நடந்த வழியைப் பார்த்துக்கொண்டு அநுஸரித்தே அவருக்குப் பின் வருபவர்களும் அவ்வழியே நடந்து தாங்களும் மேன்மையடைய உபயோகமாக ஏற்பட்டுள்ள'தென்று எழுதியுள்ளார். வழி தெரியாமல் தவித்துத் திண்டாடுபவர்களுக்கு, அதற்குமுன் நடந்து சென்றவர்கள் காலடிகளைக் கண்டால் எவ்வளவுதான் ஸந்தோஷமுண்டாகாது!

* * *

இந்த ஸ்வாமி வைதிக தர்மத்திலேயே இருந்துவிட்டாராகையால், அவருடைய வாழ்க்கையின் உபதேசங்கள் அவ்வைதிக தர்மத்திலேயே நடக்க அபிலாஷை உள்ளவர்களுக்கு நிரம்பவும் உபயோகமுள்ளது. ஆயினும், ஆங்கிலபாஷை படித்து லௌகிக வ்ருத்திகளில் இருந்து வருபவர்களுக்குக்கூட, அவை பல விஷயங்களில் ப்ரயோஜநகரமாக ஏற்படக்கூடும்.

* * *

இந்த ஸ்வாமி ஆங்கில பாஷை படித்ததேஇல்லை. சிறு பிராயம் முதல் வடமொழியென்று சொல்லப்படும் ஸம்ஸ்க்ருத பாஷையிலும், தென்மொழியென்று வழங்கிவரும் தமிழ்ப் பாஷையிலும், ப்ராசீந ரீதியிலேயே கற்பவை கற்றுக் காலக்ஷேபங்கள் செய்து, உபய வேதாந்தாசாரியர் எனும் பிருது நாமாவை அந்வர்த்தமாகத் தமக்கு ஆக்கிக்கொண்ட மஹா வித்வான். ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் இவ்விதம் இரண்டு பாஷைகளிலும் கரைகண்ட ஞானம் பெற்றவர்கள் சிலரே.

* * *

இம்மஹானுடைய திருநாமத்தைச் சுருக்கி ஸௌம்ய மூர்த்தியென்று வழங்குவதைக் கேட்டுள்ளேன். அம்மஹானுடைய குணதிசயங்களுக்கு மிகவும் பொருத்தமானது அந்தத் திருநாமம். தெரிந்துதான், மாதா பிதாக்களோ அல்லது பிதாமகனோ பேர் வைத்தார்களோ? அப்படியின்றி அத்திருநாமமே குணப்வ்ருத்திக்குக் காரணமாயதோ? யார்தான் சொல்லக்கூடும்?

* * *

மூர்த்தி சிறியதா யிருந்தபோதிலும், ஒருவிதமான ஆடம்பரமில்லாம லிருந்தபோதிலும் ஸ்வாமி, கீர்த்தியால் தென்னிந்தியா முழுவதிலும் ப்ரஸித்தி பெற்றவர். காத்ரத்தாலாவது, வஸ்த்ரத்தாலாவது ஸ்ரீ ஸ்வாமி ஆகர்ஷகமாய் இராவிடினும், முகத்தில் ப்ரகாசித்த உபசாந்தியும் ப்ரம்ஹ தேஜஸ்ஸும், இவைகளை யெல்லாம்விட வாக்கின் மாதுர்யமும், கண்டவர் மநஸ்ஸை உடனே ஆகர்ஷித்தன வென்பது எல்லாரும் அறிந்த விஷயம்.

* * *

இம்மஹான் வைராக்ய தர்மத்தைத் தராசு நிறையில் அநுஷ்டித்துக் காட்டினவர். ஸொத்து, தநம், வரும்படி முதலானவைகளில் மனப்போக்காவது எவ்வித ஆசையாவது இல்லாதவர். ஆயினும், ஸத்துக்களிடமிருந்து தமக்குக் கிடைக்கும் ப்ரயோஜநங்களைப் பஹூ மதித்தவர். ஸத்பாத்ரங்க ளல்லாத விடங்களிலிருந்து கிடைக்கும் லாபம் பெரிதாயினும், அதை ப்ரதிக்ரஹிக்க எப்பொழுதும் ஒப்பாதவர்.

* * *

'நாளைய தினம் க்ருஹ க்ருத்யங்கள் எப்படி நடக்கும்? செலவுக்கு என்ன செய்வது?' என்று இவ்விதமான ஒரு சிந்தையையும் வெளிக் காட்டாதவர். 'பகவத் ஸங்கல்பத்தால் எவ்விதத்திலாவது எல்லாம் சரியாய் நிறைவேறிவிடும்' என்ற பூர்ணமான நம்பிக்கை அவருக்கு எப் பொழுதும் இருந்த தென்பதில் ஸந்தேகமில்லை. அவ்விதமான மஹா விச்வாஸத்துக் கேற்ப, எவ்விடத்திலேயும் எக்காலத்திலேயும் எவ்வித மாகவோ எல்லாம் சரிவர நடந்தேறியே வந்தன. மநுஷ்யர்கள் அவ்வக் காலத்தில் செய்யவேண்டிய ப்ரயத்நத்தில் நம்பிக்கை உள்ளவராயிருந்தும், அவ்விதமான ப்ரயத்நம் பகவதநுக்ரஹ மில்லாமல் பலிக்காது என்று நிச்சயித்தவராய், அது விஷயங்களில் மனத்தில் கஷ்டத்தையும் கவலையையும் அநேகமாய் நிவர்த்தித்தவர்.

* * *

அதிக வைராக்ய முடையவரா யிருந்தும், அம்மஹான் ஸந்யாஸ ஆச்ரமத்தை ஸ்வீகரித்துக்கொள்ள ஒப்புக்கொள்ளவில்லை. அதற்குக் காரணம் இரண்டாகக் கூறலாம். முதலாவது: இக்கலியுகத்தில் அவ் வாச்ரமத்தை சாஸ்த்ர ரீதியில் பரிக்க முடியாதென்பது. இரண்டாவது: நம் ஸ்வாமி ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயத்தில் ஸ்திர ப்ரதிஷ்டிதரா யிருந்தது பற்றி, வைராக்ய சிகாமணியாயிருந்த ஸ்ரீ தேசிகன் அநுஷ்டிக்காது விலக்கின துரீயாச்ரமமானது அச்சம்பிரதாயத்தில் சேர்ந்தவர் ஒருவருக்குமே அவச்யமில்லை யென்பது.

* * *

வேதாந்தியாய், வைதிகராய், வைராக்யரா யிருந்தபோதிலும், ஸ்வாமி, க்ரஹஸ்தாச்ரமத்துக்கு அவச்யமான அன்பு பாராட்டுதல் முதலான அம்சங்களில் ஒருவிதமான குறைவு மில்லாதவர்; பந்து ஜந பரிபாலநத்திலும் கூடியவரையில் ஊக்கமுடையவர்.

* * *

அதிதி ஆராதநமானது நம்முடைய தேசத்தில் விசேஷ தர்ம மாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த தர்மத்தைத் தாம் ஏழ்மையி லிருந்தும், யதாசக்தி தவறாது அநுஷ்டித்தவர் இம்மஹான். வந்த அதிதிகளுக்கு அளிக்கக்கூடியது விருந்தில்லாவிடினும், அக்குறை நீங்க மனப் பூர்ணமான அன்பினாலும் செய்யு முபசாரத்தாலும் பூர்த்திசெய்து வந்தவர். 'இத்தகைய மஹானான பாகவதருடைய அந்நம் தமக்கு

இன்றைக்குப் புசிக்கக் கிடைத்ததே பாக்ய'மென்று அதிதிகள் களித்துச் செல்லும்படி குணாதிசயத்தை ஆச்சர்யமாகப் பெற்றவர்.

* * *

தாம் ஸாதாரணமாக ஏழ்மை ஸ்திதியிலிருந்தும், இம்மஹானைத் தாந சீலரென்றே சொல்லவேண்டும். கையிலில்லாத தோஷமே யொழிய, கிடைத்ததைக் கொடுப்பதில் மிகுந்த உத்ஸாக முள்ளவர். தாநத்தின் தர்மத்தைத் தம்மா லானவரையில் அநுஷ்டித்துக் காட்டினவர்.

* * *

'ஶாஸ்த்ராத் ப்ரவ்ருத்தி: ஶாஸ்த்ராந்நிவ்ருத்தி:' என்கிற ரீதியில் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளில் தாம் கசடறக் கற்றறிந்த தர்ம சாஸ்த்ரங்களை வழுவாது தைர்யமாய் அநுஷ்டித்தவர். இதற்கு இரண்டு முக்யமான வ்ருத்தாந்தங்களைத் தெரிவித்தால், அந்த ஸ்வாமியினுடைய தீரத்வம் ஒருவாறு வெளியாகும். ஒரு மஹா ஸபையில் ப்ராம்ஹண ரல்லாத ஒருவர் வேதவாக்யம் சொன்னதைக் கேட்டு, அந்த ஸபையிலிருந்தால் மறுநாள் தமக்கு விசேஷமான ஸம்பாவனைகள் கிடைக்கக் கூடியதாயிருக்க, அது அதர்ம ஸபை யென்றும், தாம் அதில் அந்வயிக்கக்கூடாதென்றும் திரஸ்கரித்து வெளிச் சென்றார். அவ்விதமே மற்றொரு ஸமயத்தில் தம்மை வெகு காலமாய் ஆராதித்துவந்த ஒரு ப்ரபுவின் வீட்டில், ஒரு ப்ரஸ்துதத்துக்காகச் சென்றவர், மணையில் உட்கார்ந்திருந்த அந்த ப்ரபுவின் பிள்ளை சிகையில்லாமல் க்ராப் செய்துகொண்டிருந்ததைக் கண்டு, அங்கு தாம் இருப்பது கூடாதென்று வெளிச் சென்றார். இவ்விதம் இன்னும் இதர கதைகளும் அம்மஹானைக் குறித்து நான் கேட்டிருக்கிறேன். இக்காலத்திலும் சாஸ்த்ராநுஷ்டாந விஷயத்தில் இவ்வளவு தீரமான ஒழுக்கம் பதினாயிரத்தில் ஒருவராலாவது அநுஷ்டிக்கப் பெற்றதேயென்று நாம், நமக்கே நம்பிக்கையில்லாவிட்டாலும், கொண்டாட வேண்டியதல்லவா?

* * *

இம்மஹான் ரயில் ஏறுவதில்லை யென்பதை அநேக வருஷங்களாய் வ்ரதமாய் அநுஷ்டித்தவர். அவ்விதமான ஸங்கல்பத்தால் அநேக கஷ்ட நஷ்டங்கள் உண்டாயினும், அதினின்றும் வழுவாதவர். ரயில் மார்க்கத்தால் ப்ரயாணம் செய்யும்போது பொறுத்துக்கொள்ளவேண்டிய எச்சில், அழுக்கு, தீட்டு, தும்பு, புகை முதலானவைகளை யோசிக்கும் போது, வைதிக தர்மத்தை அநுஷ்டிப்பவர்க்கு அவ்வித வ்ரதம் சரியே யென்று நமக்கும் தோன்றும்.

* * *

இவ்வாசார்யர் ஔபாஸநம் வைஶ்வதேவம் முதலான வைதிக க்ரியைகளையும், ஆசார அநுஷ்டாநங்களையும், தவறாது எப்போதும் ஶ்ரத்தையாய்ச் செய்து வந்தவர். அதிகாலையில் எழுந்திருந்து உதயோபஸ்தாநம் முதலான கர்மங்களைக் குறைவில்லாமல் நடத்தினவர். இவ்வித ஆசார அநுஷ்டாநங்களில் காலதேசங்களைக்கூடக் கவனியாமல் தீவ்ரமாய்க் கடைசிவரையில் அவற்றை நடத்தினவர்.

* * *

தமது ப்ரீதியின் பரீவாஹமாக ஸ்வக்ருஹத்தில் பகவதாராதநமும், பாகவதாராதநமும் எக்காலத்திலும் ஒரு குறைவுமின்றி நடத்தி வந்தவர்.

* * *

ஸ்ரீ தேசிகனுடைய தர்சநத்தில் தீவ்ரமான பக்தியுள்ளவராயிருந்ததோடு, அம்மஹான் விசாலமான பெரும்புத்தி உள்ளவரென்பதை அநேக விஷயங்களில் கண்டிருக்கிறோம். உதாரணமாக: தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தை அநுஷ்டிக்கிறவர்கள் தங்களுக்குச் சொந்தமான ஆசார்யனுடைய தனியனை அவர்கள் சொல்லத்தான் வேண்டுமென்றும், அதற்கு இடையூறு செய்வது பிசகென்றும் பாபமென்றும், தமது கொள்கையை அடிக்கடி தெரிவித்துள்ளார். அவரவர்கள், தங்கள் தங்கள் ஸம்ப்ரதாய ரீதியில் அநுஷ்டாநங்களை அநுஸரிப்பதே தர்மமென்றும், அவ்விதம் அநுஷ்டிக்கும் இதரர்களுக்கு எவ்விதமான இடையூறும் செய்யக்கூடாதென்பதும் அந்த ஸ்வாமியின் உத்தமமான கொள்கை.

* * *

அம்மஹான் வேதத்தில் விதிக்கப்பட்ட ஸ்வாத்யாய ப்ரவசநங்களில் ஒரு நாளும் எள்ளளவும் தவறாதவர். ஒரு திநத்திலாவது தாம் க்ரந்தாவலோகநம் செய்யாமலும், சிஷ்யர்களுக்கு ப்ரவசநம் செய்யாமலும் இருந்ததே கிடையாது. படிப்பதே தம்முடைய பாத்யதையும் கடமையும் என்றும், அவ்விதமே ப்ரவசநம் செய்வதும் தம்முடைய கடமையும் பாத்யதையும் என்றும் நிச்சயித்தவராய்க் காலமுழுவதையும் கழித்தவர்.

* * *

சாஸ்த்ரங்களுளிம் ப்ரபந்தங்களிலும் மாத்ரமேயின்றி, எல்லாப் புராணங்களிலும் புருஷார்த்தங்களான தர்மார்த்த காம மோக்ஷங்களை அபிவ்ருத்தி செய்வதற்கு அநேக அம்சங்கள் ஏற்பட்டுள்ளனவென்று நிச்சயித்துப் புராண ப்ரவசநத்திலும் மிகவும் உத்ஸாஹமுள்ளவர்.

* * *

அந்த ஸ்வாமிக்கு வாக்கில் ஒரு விதமான அஸாதாரணமான மாதுர்யம் ஏற்பட்டிருந்தது. அதை ஆத்மீயம் என்றே சொல்லலாம். அதில் ஒரு ஆகர்ஷண சக்தியுமிருந்தது. விஷயங்களை விவரித்து ரஸமாய்ச் சொல்வதில் மஹா நைபுண்யம் உடையவர். எத்தனை நாழிகை கேட்டாலும் சலிக்காமல் திகட்டாமல் கேட்கலாம். மஹா வாக்மி. மஹா ரஸிகர். துரூஹமான வேதாந்த விஷயங்களையும் எல்லாரும் எளிதில் அறிந்து ரஸிக்கும்படி சொல்லக் கூடியவர். அவர் தம்முடைய புத்தி கூர்மையைக்கொண்டு ஒவ்வொரு பதத்திலும் அடங்கியிருக்கிற அநேக ஹாவங்களையும் ரஸங்களையும் நாம் அறிந்து அநுபவிக்குமாறு பரிமாறக் கூடியவர்.

* * *

இவையெல்லாம் தவிர: காலத்தை ஒரு விதத்திலும் வீணுக்கக் கூடாதென்கிற தீர்மாநம் கொண்டவர். அதாவது: ஒரு க்ஷணத்தை யாவது தமக்காவது இதரர்களுக்காவது ப்ரயோஜநமில்லாமல் கழிக்க உடன்படாதவர். எப்பொழுதும் ஏதாவது உபயோகமான காரியங் களையே செய்துவர வேண்டுமென்று வ்ரதம் கொண்டவர்போல் அநுஷ் டித்துக் காட்டினவர்.

* * *

இம்மஹான் அர்ச்சாவதார மூர்த்திகள் விஷயத்தில் ஆழ்வார் களைப் போலவே கரைகடந்த பக்தியுள்ளவரா யிருந்தார். ஒவ்வொரு பெரிய திவ்யதேசத்திலும் அநேக வருஷங்கள் வஸித்து, சென்ற விடத்தி லெல்லாம் ஆசார அநுஷ்டாநங்களினுலும், சாஸ்த்ர புராண ப்ரவ சநங்களினுலும் கணக்கில்லாமல் ஸ்ரீ வைஷ்ணவ தர்மத்தைத் தோன்றக் காட்டி உபதேசித்தவர். உத்ஸவ காலங்களில் அநுயாத்ரை யென்பது அத்யாவஶ்யகமாய் அநுஷ்டிக்கப்படவேண்டியதென்று தாமே செய்து காட்டி, அவ்வநுஷ்டாநத்தை அநேக விடங்களில் பரவச் செய்தவர்.

* * *

ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம், ப்ரபத்தியோகம், என்கிற சதுர்வித ஸ்ரீவைஷ்ணவ தத்வ ஹிதங்களையும் தாரதம்ய மின்றித் தாமே தம் வாழ்நாள் முழுவதும் அநுஷ்டித்துக் காட்டி, அவ்விதமே எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் அநுஷ்டிக்கக் கடமைப்பட்டவர் என்பதை உபதேசித்தருளினவர்.

* * *

இவ்வளவு ஆச்சர்யமான பாண்டித்யமும், ஞானமும், சக்தியும், வாக் விதேயத்வமும், ஆசார அநுஷ்டாநங்களும், ஆசார்யத்வமும் இருந்தும், இவைகளுக்கெல்லாம் அம்மஹானின் வாழ்க்கையில் மேலான தாகக் கருதக்கூடியது எதுவென்ருல்: அம்மஹானின் ஆத்ம குணங்களே. ஸத்யம், தயை, கோபமின்மை, விநயம், ஸௌலப்யம், க்ருதஜ்ஞதை, பஹுமாநத்வம், ப்ரீதி, சாந்தம், இவை முதலான எல்லா உத்க்ருஷ்ட ஆத்ம குணங்களும் அம்மஹானிடத்தில் குடிகொண்டிருந்தன. சாஸ்த்ர விஷயங்களில் நிர்த்தாக்ஷிண்யரா யிருந்தபோதிலும், ஒரு குழந்தையைப் போல் கபடமே இல்லாத ஸஹ்ருதய முடையவர்.

* * *

இந்த ஸ்வாமி விஷயத்தில் ஒரே ஒரு குறைதான் நாம் கண்டிருந் தோம். அதுவும் ஒரு குறையோ என்பதைப்பற்றி ஒரு ஸம்சயமும் உண்டாகக் கூடும். அது யாதெனில்: அவர் தமது தேஹத்தையும், தேஹ ஸௌக்யத்தையும் சிறிதும் பாராட்டாததுதான். அக்காரணத்தால் அவருக்கு அவ்வப்பொழுது அநேக அஸ்வாஸ்த்யம் நேரிட்டு, அசக்தியும் அதிகமாக நேரிட்டுவந்தது. அப்படி இருந்தும், அவர் ப்ராசீந ஸ்திதியில் ஸ்நாந அநுஷ்டாநங்களும் ஆஹார நியமமும் அநுஸரித்து வந்தால், அவர் திருமேனி அவ்வளவிலாவது அவர் ஆத்ம சக்திக்கு உபகாரமாயிருந்

தது. யோசிக்குங்கால், அந்த ஸ்வாமியின் ஸங்கல்ப பலத்தினாலேயே தம் தேகத்தைத் தரித்துவந்ததாக நாம் நிஸ்ஸந்தேஹமாய்க் கூறலாம்.

* * *

அம்மஹான், தாம் அநுஷ்டிக்கவேண்டிய கர்மாநுஷ்டாநங்களை யதா நியமம் செய்துவந்தும், தம்முடைய மநோபாவத்திற்கு அந்தக் கர்மாநுஷ்டாந ஹாவங்களும் முடிவில் ஆத்மகுணங்கள் ஸம்பூர்ண மாவதற்காகத்தான் என்பதே அவருடைய தாராளமான கொள்கை. ஒருக்கால் அவரே அருளிச்செய்திருக்கிறார்: பகவத் ஸங்கல்பத்தால் ஆத்மகுணங்கள் ஒருவருக்கும் பரிபூர்த்தியாய் எவ்விதத்திலாவது லபித்துவிடுமானால், கர்மாநுஷ்டாநங்கள்கூட அநாவஶ்யமாகக் கருதப்படலாமென்பது. இதுவிஷயம் மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது.

* * *

ஸ்ரீஸ்வாமி நமக்குத் தெரிந்தவரையில் க்ரஹஸ்தாஶ்ரமத்திலேயே எழுந்தருளியிருந்தபோதிலும், மற்ற மூன்று ஆஶ்ரமங்களாகிய ப்ரம்மசர்யம், வாநப்ரஸ்தம், ஸந்யாஸம் என்ற ஆஶ்ரம தர்மங்களையுங்கூட ஒவ்வோர் ரீதியில் அநுஷ்டித்து வந்தாரென்று எல்லாருக்கும் தெரியும்.

* * *

ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீராமபிரானுக்கு வால்மீகி கவியினால் எழுதப்பட்டுள்ள வர்ணனைகளில் ஸ்மிதபாஷி யென்றும் பூர்வ பாஷி யென்றும் ஸ்மித பூர்வபாஷி யென்றும், அவ்வவதார மூர்த்தியின் வார்த்தை. சொல்வதின் ரீதியைக் குறித்து அருளிச் செய்யப்பட்டவைகளெல்லாம் இம்மஹானுக்கே உரியவை. இம்மஹானைப்பற்றி எவ்வளவு எழுதினபோதிலும் குறையாகவே தோன்றும்.

* * *

இவ்வித மஹான் பரமபதித்ததால், நாம் அவரை நேரில் கண்டு கேட்டுக் களிக்கும் பாக்யத்தை இழந்தபோதிலும், அந்த ஸ்வாமி நமக்கு ஜீவதசையில் செய்த உபதேசங்கள் நிற்க, அம்மஹானின் வாழ்க்கையின் ஆஶ்சர்யத்தை ஒருவாறு சிந்தனை செய்வதால் கிடைக்கக்கூடிய உபதேசங்களே போதுமானவை தாரணியில் வாழும் நமக்கு.

---

(12)

[ஸ்ரீ. உப. டி. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட், மயிலாப்பூர்.]

"மனமாளு மோரைவர் வன்குறும்பர் தம்மைச்
சினமாள்வித் தோரிடத்தே சேர்த்து—புனமேய
தண்டுழாயா னடியைத் தான்காணு மஃதன்றே
வண்டுழாஞ் சீரார்க்கு மாண்பு. [பெரிய திருவந்தாதி 51.]

ஜகத் ரக்ஷணத்தில் ஜாகரூகனான ஸர்வேஶ்வரன் ஒவ்வொரு காலங்களில் உலகை வாழ்விப்பதற்கென்றே சில மஹாத்மாக்களைப் புவியில் தோன்றும்படி செய்கிறான். தேசிக தர்சநத்தைச் சார்ந்தோர் அனே

வரையும் துக்கக் கடலில் ஆழ்த்தி, சென்ற 2-3-43 செவ்வாய்க்கிழமை யன்று பரமபதித்த ஸ்ரீ. உ. வே. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயண ஸ்வாமி அப்படிப்பட்ட மஹாத்மாக்களுள் ஒருவர் என்பதில் அவரை அறிந்தவர் எவரும் அதிசங்கை செய்யார். ஆழ்ந்த வேதாந்த பரிசய மும், அருளிச் செயலி லுண்டான அத்புத ரஸிக்யமும், உபய வேதாந் தங்களிலும் துல்ய ருசியும், காலக்ஷேப உபந்யாஸாதிகள் அருளிச்செய் வதில் உண்டான லாகவமும் தேர்ச்சியும், அனைத்துக்கும் மேல் ஒரு வ்யக் தியினிடத்து ஒருங்கே காணக்கிடைக்காத பல ஆத்ம குணங்களால் ஏற் பட்ட பூர்த்தியும், நம் நாட்டில் பல்லாயிரவரை இந்த ஸ்வாமிக்கு அடிமை யாக்கின. அவர்களெல்லாம் அவர் பிரிவால் பரிதபிக்கும்படி திடீ ரென்று ஒரு பகவத் ஸங்கல்பம் ஏற்பட்டுவிட்டது. அது நமது விதி வகையே.

அப்பெரியவருடைய பொங்கு புகழைச் சாற்றி வளர்ப்பதற் கென்று நாற்றிசையிலிருந்தும் பல மஹான்கள் அன்பு மிகுத்துப் பேசு வர் என்றறிந்தபோதிலும், சிறியேனும் சிலவற்றை எழுதாதிருக்க முடிய வில்லை. மறைந்துபோன அம் முக மலர்ச்சியும், இனிக் கேட்க இயலாத ரஸம் ததும்பும் இனிய சொற்களும், எண்ணும் போதெல்லாம் அடியேனைப் பேசவொண்ணாப் பெருந் துயருக்காளாக்க, ஏதோ இரண் டொரு முக்யாம்சங்களை மட்டும் குறிக்க விரும்புகிறேன்.

“ஸிஜஂ ஸத்த்வஂஹுதாயெ” முதலிய இடங்களில் பேசப்பட்ட ஆசார்ய லக்ஷணங்களெல்லாம் ஸ்ரீ ஸ்வாமியிடத்தில் நிறைந்திருந்தன வென்பதை அடியேன் சொல்ல வேண்டியதில்லை. அவற்றுள், டம்பம் அஸூயை முதலியவற்றினின்றும் முற்றிலும் விடுபட்டிருந்தமை ஒரு பெரிய விசேஷம். “தாந்தம் பெருமை அறியார்” என்று எம்பெருமான் திறத்து ஒரு ஏச்சுண்டு. அம்மாதிரியே நம் ஸ்வாமியும் தம்மிடத்தில் பெருமையிருப்பதென்றே அறியார். உபநிஷத்து ஒன்று, “பாண்டித் யத்தை அடைந்து பாலனைப்போல் இரு” என்று விதித்துள்ளது. அம் மாதிரியான ஒரு பாலர் இவர். ஜ்ஞானத்தாலும் அநுஷ்டானத்தாலும் மேம்பட்ட இவரை, அதனால்தான் ஜ்ஞானமும் அநுஷ்டானமும் சிறிது மில்லாத பேர்களும் ஆச்ரயித்து மேன்மை பெறுவாராயினர். அவர் களைத் திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்கிய பெருமையைப் பல சிஷ்ய ரிடத்தில் இன்று காண்கிறோம். தம் விஷயமாக டம்பம் இல்லாதது போல், பிறர் விஷயமாக அஸூயை சிறிதும் கிடையாது. ஆசார்யர் களுக்கு ஷட்பதத்தை (வண்டை) உபமானமாகச் சொல்வதுண்டு. செடி கொடிகளில் எத்தனை முட்க ளிருந்தாலும் வண்டு அறியாது. அது நேராகப் புஷ்பத்தினுள் நுழைந்து அதன் மகரந்தங்களிலிருந்து தேனை மட்டும் க்ரஹிக்கும் இயல்புடையது. அதுபோல் ஸ்வாமி திருவுள்ளத்தில் பிறர் குற்றம் புகுவதே கிடையாது. அயலார் சொல்லச்செய்தேயும், அதில் ஸ்வாமி தம் மனத்தைச் செலுத்துவதில்லை. “அதனால் நமக்

கென்ன? சர்ண்யன் அதைத் திருத்தி விடுவான்; நீங்கள் ஏன் வீணில் கவலை கொள்கிறீர்கள்?'' என்று பணிப்பதுண்டு. ஆகவே தான் இந்த ஸ்வாமியிடத்தில் விரோதம் பாராட்டிய பேர்களே கிடையாது. ஸர்வஜந ஸுஹ்ருத் தென்றால் இவருக்கே தகும்.

ஸ்வாமியினிடத்தில் காலக்ஷேபம் கேட்டபேர் அநந்தம். வாசிக்க ஆசைப்பட்டு வாசிக்காது போனேமே என்று இப்போது பரிதபிக்கும் பேரும் அநந்தம். விஷயங்களைத் தெளிவாகப் போதிப்பதில் இந்த ஸ்வாமிக்கு இருந்த திறமையும் அதற்குமேல் அதிலுள்ள ஊக்கமும் அபாரம். அனைவரும் தம்மைப்போல் ஸம்சய விபர்யய மறக் கற்று விளங்கவேண்டும் என்ற கபடமற்ற ஹ்ருதயம். ஸ்வாமி திருவடிகளில் அந்வயித்துக் காலக்ஷேபம் கேட்டபேர்கள், ஜ்ஞாதாக்களாக எழுந்தருளி யிருக்கும் மற்றை ஸ்வாமிகளிடத்துப் போய் சிந்தனை செய்தால் இந்த ஸ்வாமிக்கு நிரம்ப த்ருப்தி. 'பல தடவை வாசிக்க வேண்டும்; பல பேரிடம் வாசிக்கவேண்டும்' என்று அடிக்கடி வற்புறுத்துவதுண்டு.

"அர்ச்சாவதார ஸேவையி லாசையாலும், நன்னினைவு வாய்ந்த நால்வர் இருவருக்கு நாராயண தாஸ்யத்தை அறிவிப்பிக்கைக்காகவும் தான் நல்லோர்கள் நம்முட னிவ்வுலகிற் கலந்து நிற்பது'' என்று ஸ்ரீ ஸ்வாமி அடியேனுடைய ஒரு சிறு புத்தகத்துக்குப் பரம க்ருபை யோடு அநுக்ரஹித்த ஒரு பூமிகையில் அருளிச் செய்தபடி. அதன் உண்மை முற்றிலும் ஸ்வாமி விஷயத்தில் காணலாம். ஒவ்வொரு திருப் பதியிலும் நெடுநாள் எழுந்தருளியிருந்து, அவ்வோ எம்பெருமான்க ளுடைய மஹோத்ஸவங்களில் ஈடுபட்டு அநுபவித்து நின்றதை அனை வரு மறிவர். எங்கெங்கே எழுந்தருளினாலும் அங்கங்கே ஸ்திர வாஸம் செய்பவர்களும், அவ்வூ ரெம்பெருமான் விஷயமாகப் புது ரஸங்களைக் காணவும், புதிய அநுபவங்களை யடையவும், ஸ்ரீ ஸ்வாமி பல படியாய் உபகரித்ததுண்டு. எல்லா உபந்யாஸங்களும் உச்சை ஸ்வரத்தில் வெகு உத்ஸாஹமாக அருளிச்செய்வது வழக்கம். அர்ச்சாவதார விஷயமாகச் செய்யு முபந்யாஸங்களோ, கட்டுக் கடங்கமாட்டாக் காதல் காரணமாகக் கேட்பவரை நீரா யுருகச் செய்வன. அவற்றின் பெருமை அநுபவைக வேத்யம். அதே ஆதராதிசயத்தைப் பகவத் தாஸ்யத்தில் ருசியைப் பிறருக்கு விளைவிப்பதில் காணலாம். தமது குறிப்பில் வருவோரை யெல்லாம், எப்படியாவது எம்பெருமானுக்கு ஆட்படுத்திவிட வேண்டு மென்ற ஆசை நிரவதிகம். காலக்ஷேபமோ நல்வார்த்தைகளோ கேட்க விரும்புவோரை, எப்பொழுதும் ஆவலோடு ஆஹ்வானம் செய்வது வழக் கம். அதற்கு இரவு பகலென்று நியமம் கிடையாது. எப்பொழுது பகவத் விஷயமாக எந்தக் கேள்வி கேட்டாலும், வெகு விரைவில் வெகு ரஸமான பதில் கிடைத்துவிடும். சோம்ப லென்பதே தெரியாது. 60-நாழிகையும் பகவத் விஷயத்திலேயே செலவிடும் ஸ்வாமிக்கு, மற்ற

லௌகிக காரியங்கள் எப்படி எப்போது நடக்கின்றனவென்று அடியேன் நெடுநாளாய் ஆச்சரியப்பட்டு நின்றதுண்டு. அடியேனுடைய நண்பர் ஒருவர் ஒருநாள் இவ்வண்ணம் சொன்னார். "தேவப்பெருமாளும் நம் ஸ்வாமியும் ஒன்று, இருவரும் ஊண் வேண்டார்; உறக்கமும் வேண்டார்" என்று. இதனுண்மை ஸ்ரீ தேவப்பெருமாள் மஹோத்ஸவங்களை அந்தரங்கமாக அநுபவித்தோருக்கும், ஸ்ரீ ஸ்வாமியுடன் நெருங்கிப் பழகிய பேருக்குமே நன்கு புலப்படும். "தொழிலெனக்குத் தொல்லைமால் தன் நாமமேத்த, பொழுதெனக்கு மற்றதுவே போதும்" என்பது ஸ்ரீ ஸ்வாமியின் அநுஷ்டாநத்தால் நாம் அறியத் தவிரமாட்டாததொரு அழகிய பொருள்.

அடியேன் மனத்தில் இன்னும் எத்தனையோ எண்ணங்கள் ஸ்ரீ ஸ்வாமியின் பெருமையைப் பற்றி நிகழ்கின்றன. பன்னியுரைக்குங்கால் பாரதமாம்.

ஆழியங்கைப் பேராயற் காளாய்ப் பிறந்த பிறவி யாதல்பற்றி, ஸ்ரீ ஸ்வாமிக்கு இரண்டு விபூதியும் துல்யம்தான். இங்கெழுந்தருளியிருந்தபோதும் "உண்ணாட்டுத் தேசன்றே" என்றே தான் அனைவரும் அவருடைய பெருமையைக் குறித்து வியந்தது. ஆனால் இப்படிப்பட்ட வ்யக்திகள் ஸம்ஸார மண்டலத்தில் சிரகாலம் நடையாடுவதில் எம்பெருமான் துன்பப்பட்டு, 'இனி அதிக நாள் வைத்திருந்தால் லீலா விபூதிக்கே மோசம் வந்து விடுமோ?' என்று பயந்து, 'எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லை' யென்ற ஏக்கத்தால் இவரைப் பரமபதமேற எழுந்தருள நியமித்துவிட்டானென்றே கொள்ளவேண்டும்போல் தோன்றுகிறது. எம்பெருமானை நோவதில் பயனில்லை. அப்படித் தவறி நொந்தோமாகில் ஸ்வாமி திருவுள்ளம் சீறும். எனினும்; ஸம்ஸார மண்டலத்திலுள்ள நாம் துன்பப்படாமல் எப்படியிருக்க முடியும்? ஸ்ரீஸ்வாமியைப்பற்றி நினையுந்தொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந் துகும். 'மறுபடி பரம ஸௌம்யமான அந்தத் திருமேனி எந்த லோகத்திலும் காணக் கிடைக்காதே!' என்று எண்ணும்போது துன்பத்திற் கெல்லைகாண முடியவில்லை. அன்பு ததும்பும் அக் கடாக்ஷமும், ரஸம் ததும்பும் அம்மொழியும், இனி எங்குக் காண்போம்? எங்குப் போய்க் கேட்போம்? இங்குமில்லை; அங்குமில்லை.

இப்படிப்பட்ட மஹான் திறத்து நமக்கு நேயம் மட்டும் என்றும் மாறுதிருக்கவேண்டும்.

"[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||"

---

(13)

[வித்வான் ஸ்ரீ. உப. ப. ஸ்ரீ. ல்க்ஷ்மீநரஸிம்ஹாசார்யர், தேவனூர்விளாகம்.]

அடியேனுக்குத் தகப்பனர் செய்த ஹிதப்ரவர்த்தநங்களில் முக்யமானது ஹோத்ருஹிஃ ஸவயோக்யதா நயநம். அதாவது: தாம் எந்தப் பெரியவர்கள் ஸந்நிதிக்குப் போனாலும் அடியேன் ஸந்நிஹிதனயிருந்தால், அடியேனையும் அழைத்துப்போய் அவர்களைத் தண்டன் ஸமர்ப்பிக்கச் செய்வது வழக்கம். அந்த ரீதியில் ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமியையும் தண்டன் ஸமர்ப்பித்தது முதல், இந்த ஸ்வாமியிடம் அடியேன் தகப்பனருக்கு ஏற்படும் மனமகிழ்ச்சியின் விசேஷத்தைக் கவனித்துவந்த அடியேன், பெரியவர்களுடைய அநுக்ரஹத்தால் தெளிந்த அறிவு கொஞ்சம் பெற்றதுமே, 'மூநௌ ஶரீராஷ்டுவாமதஃ' என்றபடி, "வணக்க மொடுக்கம்" என்கிற ரீதியில் தீதற்ற குணங்கள் அந்த ஸ்வாமியினிடமிருந்துதான் அந்த மனமகிழ்ச்சிக்குக் காரணம் என்பதை உணர்ந்தேன்.

அந்த ஸ்வாமிக்கு நம் ஸித்தாந்தம் தழைத்து ஓங்கவேண்டுமென்ற எண்ணம் கரை புரண்டோடிக்கொண் டிருந்தது. போய்த் தண்டன் ஸமர்ப்பித்தால் குஶல ப்ரஶ்நம் பண்ணிவிட்டு, ஏதாவது வேதாந்த விஷயம் சொல்லும்படி நியமிப்பது வழக்கம். வீணான வார்த்தை ஒருபொழுதும் அடியேன் கேட்டதில்லை. ஒரு வருஷம் ஸ்ரீ தேவப்பெருமாள் வஸந்தோத்ஸவத்தில் கண்ணாடிக்கு எதிராகப் பெருமாள் எழுந்தருளும்போது, "ஶ்ருணயிநஶிவ" என்ற ஶ்லோகத்தின் ஹாவத்தைச் சொல்லும்படி அடியேனை நியமித்தார். அந்த ஸ்வாமியின் பகவதநுபவ பரீவாஹத்தை அப்போது கண்டுகொண்டேன். "வாஸுதேவஃ ஸவமிதி" என்கிற ஶ்லோகத்தின் பாஷ்யத்தில் ஸாதித்தபடி, [வாஸுதேவஶேஷதைக ரஸோஹம், தஸ்ய தத்ஸ்ய வ ஸ்திதி ப்ரவ்ருத்திஷு, ஸ்வாஸஜேவ்ய கல்யாண குணகணஃ வாரதாஃ, இதி ஜ்ஞாநவாநு ஹஸ்கா, வாஸுதேவ ஏவ ஐ வாமப்ராப்யம் ப்ராவகஂவ கந்யதபி யத்நொரயவதிஷ் ஸமவ ஐ தஸ்வயஷ—இதி மாஂப்ர வத்யதெ ஸ மஹாமநாஃ] இருக்கும் நிலைமை ஆதிமுதல் அந்த ஸ்வாமியிடம் இருந்திருக்கிறது. அதனல்தான் தம் குமாரருக்கு "வாஸுதேவன்" என்று பெயர் வைத்தார் என்றுகூட அடியேன் எண்ணுவது. தமக்கிருக்கும் ஸித்தாந்த ப்ரவர்த்தநத்தில் ஆசைக்கேற்ப, மதுராந்தகம் கலாசாலையின் தலைமை ஆசிரியர் பதவியை ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனப்படி ஒத்துக்கொண்டு, ஸதாசாரத்தோடு கூடிய வித்யாபிவ்ருத்தியைச் செய்து வந்தார். "சுரக்கும் திருவு முணர்வும் சொலப்புகில் வாயமுதம் பரக்கும்" என்று அமுதனர் அருளிச் செய்தபடி அந்த ஸ்வாமியிட மிருந்தது. அடிக்கடி ராமாநுஜ னென்று சொல்வதற்காகவே தம் இரண்டாவது குமாரருக்கு அப்பெயரிட்டனர்

போலும். வாக்யார்த்தம் நடக்கும்போது அந்த ஸ்வாமி மத்யஸ்தராக இருந்து, வாதிகள் சொல்லும் விஷயத்தை உபபாதநம் பண்ணி அநுவதிப்பது ரொம்ப அழகாயும் எளிதில் யாவரும் புரிந்துகொள்ளும் படியாயும் இருக்கும். இதை ஸமீபத்தில் நடந்த 'மாலோல ஸபை'யில் எல்லாப் பண்டிதர்களும் அநுபவித்திருப்பார்கள். எம்பெருமானிட முள்ள தம்மையே யொக்க அருள் செய்யும் குணம் இந்த ஸ்வாமியி னிடமும் உண்டு.

இப்படிப்பட்ட மஹாத்மாக்கள் (ஜ்ஞாநவிஶேஷாதீந ஸௌஹார்த்யம் உடையவர்கள்) இவ்வுலகத்தில் துர்லபதரர்கள். இன்னும் கொஞ்சகாலம் இந்த உலகத்தில் இந்த ஸ்வாமி எழுந்தருளியிருந்தால், ஸம்ப்ரதாயம் இன்னும் அதிகமாக வ்ருத்திக்கு வரும். நெடுங்காலம் இந்த ஸ்வாமியுடன்கூட இருந்து பழகினவர்கள் எவ்வண்ணம் இவர் குணங்களைப் பேசுவார்களோ! அவரவர்கள் அநுபவித்தபடி இவர் குணங்களைப் போற்றி, இவர் நடந்த நல்வழிப்படி நடந்துவந்தால், அதுவே இந்த ஸ்வாமியின் திருவுள்ளத்துக்கு உகப்பாக நாம் செய்யும் காரியம். அந்தப்படியாவது நடக்க இறைவன் அருளவேணும்.

---

(14)

[ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி திருவடி பவுண்டரீகபுரம், நரஸிம்ஹ தாஸன்]

வேதங்களிலும், தது பப்ருஹ்மணங்களிலும், ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளிலும், ஸ்ரிய:பதியினுடைய பரத்வ ஸௌலப்யங்கள் பல விடங்களில் வெகுவாகப் பேசப்பட்டிருக்கின்றன. ஆனால் ப்ரத்யக்ஷத்தில் இவைகள் ஒன்றுகூடி ஓரிடத்தில் வர்த்திக்கக் காண்கிறிலோம். எனினும்; அதீந்த்ரிய விஷயங்களை ஶாஸ்த்ரங்கள் ப்ரதிபாதிக்கிறபடியால், எம்பெருமானிடம் பரத்வ ஸௌலப்யங்கள் ஒன்றுகூடும் என்று எண்ணியிருந்தோம். அப்படிக்கில்லாமல், நம் ஸ்வாமியிடத்தில் ப்ரத்யக்ஷத்திலேயே பரத்வ ஸௌலப்யங்கள் ஒன்றுகூடி ஓரிடத்தில் வர்த்தித்ததைக் கண்டு அநுபவிக்கப்பெற்றோம். நம் ஸ்வாமிக்கு இருந்த ஒரு அளவற்ற ஞாநத்தை விரித்துரைக்க முடியாது. எந்த ஸமயத்திலேயும், எப்படிப்பட்ட கடின மான விஷயத்தையும், பூர்வாவலோகந மில்லாமலே ஸாதித்தாகும். அத்துடன்கூட, குழந்தைகள்முதல் பண்டிதர்கள்வரை ஏகரீதியாகப் பழகும் படியான ஒரு ஸௌலப்யமும் கூடியிருந்தது. ஒருதரம் ஒரு க்ராமத்தில் யாரோ ஒரு சிறு பிள்ளை வந்து ஸ்ரீஸ்வாமியை ஹரி ஶப்தம் எழுதிக் கொடுக்கும்படி கேட்க, அப்போது அந்தப் பிள்ளைக்கு அந்த ஶப்தத்தைத் தாமே எழுதிக் கொடுத்தாயிற்றென்றால், ஸ்ரீஸ்வாமியின் ஸௌலப்யத்தை என்னென்று சொல்வது! இத்தால் ஶாஸ்த்ராதிகளே 'தாங்கள் ப்ரதிபாதிக்கிற பரத்வ ஸௌலப்யங்கள் ஒன்றுகூடி ஓரிடத்தில் வர்த்திக்கலாம்;

இதில் ஒன்றும் அஸம்பாவிதமில்லை' என்கிற அர்த்தத்தை ப்ரத்யக்ஷமாக லோகத்திற்குக் காட்டவேண்டும் என்று யோசித்து, ஸ்ரீஸ்வாமியாகத் திருவவதரித்தது போலும். இப்படிப்பட்ட ஸ்ரீஸ்வாமி திருவடிகளில் அடியோங்களுக்குக் கைங்கர்யமானது ஸுஸுகாவஹமாகத் தோன்றிப் புருஷார்த்தமாயிற்றென்பதில் ஸந்தேஹமில்லை. கேவலம் ஸ்வரூபத்திற்காகக் கைங்கர்யம் பண்ணுவதைக் காட்டிலும், குணத்திற்குத் தோற்றுப் பண்ணுமது ஹ்ருதயங்கமமாய்க் கொண்டு தன்னேற்றமாயிருக்குமிறே. இத்தால், 'கைங்கர்யம் ஏவல் தேவை செய்வதுதானே; அது எப்படிப் புருஷார்த்தமாகும்?' என்கிற சங்கையும் அடியற்று விட்டது.

ஸ்ரீஸ்வாமி தேசிகன் பெரிய ரஹஸ்யத்தில் 'ஆத்மகுணாதிகள் நிரம்பாதொழிகிறது அநுஸந்தாநத்தில் ஊற்றக் குறைவாலே' என்று அருளிச்செய்திருக்கிறார். நம் ஸ்வாமி ஆத்ம குணங்களாலே பரிபூர்ணராய் எழுந்தருளியிருந்தபடியால், ஸ்ரீஸ்வாமியின் மந்த்ர மந்த்ரார்த்தங்களுடைய அநுஸந்தாநத்திலுள்ள ஊற்றம் எப்படிப்பட்டது என்பது ந்யாய நிரபேக்ஷமாக ஸித்தம்.

ஸ்ரீஸ்வாமியே ஒருதரம் காலக்ஷேப கோஷ்டியில் திருவாய் மலர்ந்தருளினபடி :—"வைஷ்ணவர்களுக்கு 'நித்யாபிவாதநம் விதவத்பரஸ்பரநீசபாவை:' என்கிறபடி பரஸ்பர சேஷத்வம் சாஸ்த்ர ஸித்தம். நீங்கள் சிஷ்யர்களாக என்னிடம் வந்துவிட்டபடியாலே உங்களுக்கு ஒரு குறைவு என்றும், நான் ஆசார்யனாகி விட்டபடியாலே எனக்கு ஒரு மேன்மை என்றும், இருவரும் எண்ணக்கூடாது. இருவருக்கும் வைஷ்ணவத்வம் பொதுவாகையாலே, பரஸ்பரம் அபிவாதநம் பண்ண ப்ராப்தர்கள். அது செய்யும்போது சாஸ்த்ர மரியாதை தவறாமல் செய்யவேண்டியதாகையால், நான் மேல் ஆஸநத்திலும் நீங்கள் கீழும் இருக்க நேரிடுகிறதேயொழிய வேறில்லை. ஈஶ்வரன் இந்த ரீதியாக உங்களுக்கு அதிசயாதாநம்பண்ணும்படி என்னை நியமித்திருக்கிறான்" என்று. ஸ்ரீ ஸ்வாமி அடிக்கடி ஸாதிப்பதுண்டு. மேலும், "உங்களுக்குப் பாவ்யர்ளான பத்நி புத்ரர்கள் முதலியவர்களைக்கூட அநாவஶ்யமாகக் கோபித்துக்கொள்ளக்கூடாது. அவர்களும் வைஷ்ணவர்களாகையால் நீங்கள் இப்படிச் செய்தால் எம்பெருமான் திருவுள்ளம் சீறும்" என்று தம் சிஷ்யர்களை நியமித்தாகும். என்னே ஸ்ரீ ஸ்வாமியின் நெறி தவறாமை! மேலும் ஸ்ரீ ஸ்வாமி புராணம் ஸாதித்தாகும்போதோ, அல்லது உபந்யாஸ காலங்களிலோ, மறந்தும் ஸாமாந்ய பக்ஷங்களையிட்டு எம்பெருமானையோ பாகவதர்களையோ ஸாதித்தாகாது. எப்போதும் 'சக்ரவர்த்தித் திருமகன், பிராட்டி, திருவடி, மஹாராஜர், இளையபெருமாள், முதலிகள்' என்று இப்படியே திருவாய்மலர்ந்தருளியாகும். இத்தால்: ஸ்ரீ ஸ்வாமியின் க்ரந்தங்களிலுள்ள பிர பரிசயம் நன்கு புலப்படுகிறது.

ஸ்ரீஸ்வாமி முக்யமாக சில விஷயங்கள் தம் சிஷ்யர்களுக்கு நியமிப்பதுண்டு. என்னென்னில்: “கைங்கர்யங்களை உள்ளடக்கி, திவ்யதேசங்களிலுள்ள கலகங்களில் கலந்துகொள்ளாமல், ஆத்மகுணத்தை வ்ருத்தி பண்ணுங்கள் என்றும், இவைகளுக்கு திவ்யதேசங்களில் ஸௌகரியமில்லாவிடில் க்ராமாந்தரங்களுக்கு யோசிக்காமல் போய்விடுங்கள் என்றும், யாராவது அதிதிகள் வந்தால் அவர்களுக்கு ஸகலவிதமான ஸௌகரியங்களும் பண்ணிக் கொடுத்து அவர்களை உபசரியுங்கள் என்றும், அதற்கு ஸௌகரிய மில்லாவிடில் இன்னும் ஸௌகரியமுள்ள இடங்களையாவது காண்பிப்பது, அல்லது கடைசியாக அவர்கள்மேல் கடிந்துகொள்ளாமல் நல் வார்த்தைகளாவது சொல்லியனுப்புவது செய்யுங்கள்” என்று நியமித்தாகும். மேலும் க்ருஹஸ்தாச்ரமத்துக்குள்ள ஏற்றத்தைப் பல படியாக எடுத்துரைத்து அதையே கடைப்பற்றுங்கள் என்றும் நியமித்தாகும்.

ஸ்ரீ ஸ்வாமி 64 திருநக்ஷத்ரங்கள் எழுந்தருளியிருந்து மறைந்ததை நோக்கினல், 64 கலைகளும் ஒன்றுசேர்ந்து ஒரு ஸூர்யனைப் ஸ்ரீ ஸ்வாமியாகத் திருவவதரித்து, 64 திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்து ஸூர்யன் மேற்குத் திக்கில் அஸ்தமிப்பதுபோல் தாமும் மேற்கே எழுந்தருளி அஸ்தமித்தாகிவிட்டது என்று தோன்றுகிறது. அந்த ஸூர்யரின் அஸ்தமித்தால், ‘30 நாழிகை கழித்து உதயமாகிவிடுவான்; இருளெல்லாம் நீங்கிவிடும்’ என்று ஒரு அவதியை நினைத்துத் தேறலாம். இம்மாதிரி ஸூர்யன் மறுபடி எப்போது உதயமாகுமோ தெரியவில்லை. இப்போது என்கிற ஒரு அவதி தெரியாததால், அதுவரை ஸர்வேஶ்வரன் க்ருபையை சாதக பக்ஷிபோல் நோக்கவேண்டுவதுதான்.

இப்படி: ஸ்ரீ ஸ்வாமியைக் கொஞ்சகாலம் அனுபவிக்க ஓர் அவகாசம் ஏதோ கிஞ்சித் ஸுக்ருத விசேஷத்தால் கிடைத்தது. ‘த்வாவேவ த்ருஷ்டிஸுக்ஷமாவிக’ என்கிறபடி அடியேனுடைய தௌர்பாக்யம் தான் இவ்வளவு சீக்ரத்தில் ஸ்ரீ ஸ்வாமி பரமபதிக்கும்படி நேர்ந்தது. ஸ்ரீ ஸ்வாமியின் குணங்களை என்னென்று எழுதுவது? எது எழுதினலும் அங்கே யதார்த்தமாக அன்வயிக்குமேயொழிய துளிகூட அதிவாத மிராது. ‘ஐச்வர்யாணிவர்த்தந்தே ஜ்ஞானாதே ரக்ஷஷிதியாஸ| ச்ரிக்ஷயாணிவர்த்தந்தே’ என்கிறபடி நம் ஜட புத்திக்கு ஸ்ரீ ஸ்வாமியின் குணங்கள் நிலமல்லாமையாலே திரும்பவேண்டியதே தவிர அவ்விடத்தில் குணமில்லாமையாலே அன்று.

ஸ்ரீ ஸ்வாமி தம் வாழ்நாட்கள் முழுமையும் திவ்யதேசங்களிலேயே கழித்தாயிற்று. அங்கும் ‘வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது’, ‘சூழ்வினையி னாழ்துயரை என்னினைந்து போக்குவரிப்போது’ என்று இப்படி அன்வய வ்யதிரேகங்களால் ஆழ்வார்கள் அருளிச்செய்தவாறு காலங்களை போக்கினபடி. ஸ்ரீ ஸ்வாமியின்

நித்யாஹ்நிகம் எப்படி யிருந்ததென்றால்: ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் எழுந்து உஷஃகால ஸ்நாநம் செய்தருளி, பிறகு ஔபாஸநத்தை 3 நாழிகைக்குள் முடித்தருளி, காலக்ஷேபம் ஸாதிக்க எழுந்தருளியாகிவிடும். பிறகு 12 நாழிகைவரை காலக்ஷேபம் நடக்கும். அதற்குமேல் இஜ்யாராதநம் வைஶ்வதேவம் முதலியவைகளை 10 நாழிகைக்குள் முடித்துக் கொண்டு, உடனே யாராவது சில பேருக்கு ஸாஸ்த்ர வாக்கங்கள் ஸாதித்தாகும். அதற்குமேல் ஸாயங்காலம் அஸ்தமிக்கும்வரை மறுபடியும் காலக்ஷேபம் நடக்கும். உடனே அநுஷ்டாநத்தைப் பூர்த்திபண்ணிக் கொண்டு அங்கு எழுந்தருளியிருக்கும் திவ்யதேஶத்து எம்பெருமானை மங்களாஶாஸநம் பண்ண எழுந்தருளியாகும். பிறகு ஸாயம் ஔபாஸநத்தை முடித்து, உடனே புராண ஶ்ரவநத்திற்கு எழுந்தருளியாகும். இரவு 10 நாழிகைவரை ஶ்ரவநம் நடந்ததும், திரும்பி யோகத்திற்கு ஸங்கல்பித்துக்கொண்டு அநுஷ்டித்தாகும். இப்படி உத்தரோத்தரம் இடைவிடாமல் பகவத் கைங்கர்யங்களில் ஈடுபட்டுக் காலத்தைப் போக்கினபடி ஸ்ரீ ஸ்வாமி. இதன் மத்தியில் அவ்விடத்திய திவ்யதேஶத்து எம்பெருமான்கள் உத்ஸவாதிகள் கண்டருளினால் கூட அநுயாத்ரைகளை விடாமல் அநுஷ்டித்து, இரவு முழுமையும்கூட கோயிலிலேயே எழுந்தருளியிருந்து, உத்ஸவம் பூர்த்தியானவுடன் திரும்பி எழுந்தருளியாகும். சில ஸமயங்களில் நேரே அநுஷ்டாநத்திற்கே எழுந்தருளியிருக்கும்படியும் நேரிடும். அவ்வமயங்களில் நித்ரைக்குத் துளிகூட அவகாசம் ஏற்படாமல் போய்விடும். இப்படித் தம் திருமேனியைத் துளிகூடக் கவனிக்காமல், 'இது பரார்த்தமாகவே ஏற்பட்டது; இத்தால் பிறர்க்கு எவ்வளவு உபகாரம் ஏற்பட்டாலும் நமக்குப் பாக்யம்' என்று இப்படி திருவுள்ளம்பற்றிப் பகவத் பாகவத விஷயங்களில் தம் திருமேனியை உபயோகப்படுத்திக்கொண்டு எழுந்தருளும்படியாயிருந்தது.

அடியேனுடைய மஹத்தான ஒரு ஸுக்ருத விஶேஷத்தால் அவ்விடத்திய திருவடிகளில் ஆஶ்ரயிக்கும்படி நேர்ந்தது. அடியேனுக்கும் ஸ்ரீ ஸ்வாமி பூர்ணமாக இஹலோக பரலோகங்கள் இரண்டையும் அநுக்ரஹித்தானபடி. இதற்கு அடியேன் என்ன ப்ரத்யுபகாரம் செய்வது! உபய விபூதியையும் திருப்பிக் கொடுத்தாலும், அவர்கள் முன்செய்ததற்கு நாம் பிற்பாடு செய்யும் உபகாரம் எப்படிப் போதும்? 'போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும், பொங்குபுகழ்ச் சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே.'

---

(15)

(ராவ் பகதூர் R. நரஸிம்மய்யங்கார், 1-வது க்ரேட் வக்கீல்)

திருக்கோட்டியூர் ஸ்ரீ ஸௌம்யமூர்த்தி ஸ்வாமிகள், எம்பெருமான் திருவடியைச் சேர்ந்தாரென்று கேட்டவுடன், ஸ்ரீ வைஷ்ணவத்துக்கு

ஒரு விளக்கு அணைந்ததோ என்கிற துக்கம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் மனத்தில் குடிகொண்டிருக்கும். அக்காலத்தில் திருக்கோட்டியூர் நம்பி யிருந்தது கோஷ்டீபுரத்துக்கு எவ்வளவு ஏற்றமோ, அவ்வளவு ஸௌம்ய மூர்த்தி ஸ்வாமி எழுந்தருளியிருந்தது அந்த ஸ்தலத்துக்கு ஏற்றமா யிருந்த தென்பதை ஒருவரும் ஸந்தேகிக்க முடியாது. ஸ்வாமியின் பிரி வால் எல்லா வைஷ்ணவர்களும் படும் வருத்தம் அதிகமே.

ஸ்வாமியின் விரக்தி ஸ்வரூபத்தைக் கவனித்தால், ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வரூபம் ஸ்வாமியிடம் அபரிமிதமாக விளங்கிற்று என்பதில் ஐயமில்லை. ஸ்வாமியின் ஸ்வரூப ப்ரகாசமோ, வித்வத் ப்ரகாசமோ, நமது தர்சநத் துக்கு ஒரு பெரும் சான்றாக இருந்தன. ஸ்வாமியின் இருப்பிடமே வைகுந்தம் திவ்ய தேசம் என்னும்படி, ஸ்வாமி தங்கிய இடமெல்லாம் சோபித்தது என்று சொல்வதில் மிகை ஒன்றுமில்லை.

ஸ்வாமிகள் பரமபதம் நாடினதை நாம் அஜ்ஞானத்தால் துக்கிக்க வேண்டியதைத் தவிர, ஸ்வாமியின் திருவுள்ளமே வைகுந்தமாக இருந்த தால், இப்போது கழிந்த சரீரம் விலகவே, ஸ்வாமிகள் ஸ்ரீ வைகுந்தம் புகுந்தார் என்று கொள்ளுவது உசிதமாகும்.

நமது மனத்தைச் சீர்பண்ணிக்கொண்டு, பட்டருடைய தாயார் கற்பித்த வழியில் மோக்ஷம் ஸித்தித்தது என்று நினைத்து, இப்போது வைகுந்தத்தி லிருக்கும் ஸௌம்யமூர்த்தி ஸ்வாமியை மனத்தில் த்யா னித்து, நமது ஸ்வரூபத்தைப் பெருக்கிக் கொள்வோமாக. இப்படிக் கொள்ளும் நோக்கமே நமக்கு நிதி.

---

(16)

[மதுரை நகர அகில இந்திய வர்ணாஶ்ரம ஸ்வராஜ்ய சங்கம், 7—3—43-ல் கூடிய கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம்.]

நம் பாண்டிய நாட்டில் வித்வச் சிகாமணியாயும், அநுஷ்டாந பரராயும் ஞான ஸம்பந்நராயு மிருந்த திருக்கோட்டியூர் ஸ்வாமி என்று ப்ரஸித்திபெற்ற ஸ்ரீ உப. வே. ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி பரமபத மடைந்ததனால், நம் வைதிக ஸமுதாயத்துக்கு ஏற்பட்டிருக்கும் பெரிய நஷ்டத்துக்கு இந்த ஸபையார் ரொம்ப வ்யஸனிக்கிறார்கள். தங்கள் அநுதாபத்தை இதன் மூலம் அந்த ஸ்வாமியின் குமாரர்களுக்கும் அதி துக்கிதர்களான பந்து மித்ரர்களுக்கும் தெரிவிக்கிறார்கள். ஸபை யோர்களுக்கு வாசித்து எல்லோரும் நிஶ்ஶப்தமாக நின்று நிறைவேற்றப் பெற்றது.

நீ. ரே. கிருஷ்ணஸ்வாமி, ஸபைத் தலைவன்.

---

(17)

[ஸ்ரீ வேதாந்த தேசிக பக்த ஸபை, மதுரை]

இச்சபையின் சார்பாக 14-3-43உயில் கூடிய பொதுக் கூட்டத்தில் ஷெ ஸபையின் வித்வான் வேதாந்த கேஸரி, ஸ்ரீ. உப. வே. நெரூர் நாராயணய்யங்கார் ஸ்வாமியால் அடியிற் கண்ட விஷயங்கள் ஸமர்ப்பிக்கப்பட்டு, ஸபையோரால் அங்கீகரிக்கப்பட்டு, "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா" என்ற பத்ரிகையில் ப்ரசுரிக்க, அதன் ஆசிரியர்க்கு அனுப்புமாறு தீர்மானிக்கலாயிற்று.

திருக்கோஷ்டியூர் ஸ்ரீ தேசிக தர்சந விஜயத்வஜ மஹா வித்வான் ஸ்ரீ உப. வே. ஸௌம்ய நாராயணாசாரிய ஸ்வாமி திருநாட்டை யலங்கரித்ததைக் கேட்டு, மதுரை ஸ்ரீ வேதாந்த தேசிக பக்த ஸபை மிகவும் வருந்துகின்றது. ஸ்வாமியின் வியோகம் பொதுவில் பண்டித கோஷ்டிக்கும், விசேஷித்து ஸ்ரீ ராமாநுஜ தர்சந நிஷ்டர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத ஓர் பெருத்த நஷ்டமாகும். ஞாநாநுஷ்டாந சம தமாதி பரமைகாந்தி குணங்கள் அனைத்தும் பரஸ்பரம் போட்டியிட்டு ஸ்வாமியிடத்தில் நிலைபெற்று விளங்கின. உபய வேதாந்தங்களிலும் நிரதிசய நைபுண்யம் பெற்று ஸம்ப்ரதாய ப்ரவசநங்களில் ஈடுபட்டுப் பொழுது முழுவதையும் போக்கினர். ஸ்வாமியின் சரம நிஶ்வாஸம்கூடப் பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டபடியே கழிந்ததென்பது விஸ்மயாவஹம். ஸ்வாமியின் வாழ்நாட்களில் ஒருதடவையாவது தூம சகடத்தை ஸ்பர்சித்ததில்லையென்பதொன்றே ஸ்வாமியின் அநுஷ்டாநாதிகளுக்குப் போதிய சான்றாகும். ஸ்வாமியின் வியோக துக்கம் பந்து வர்க்கங்களுக்கும் சிஷ்ய வர்க்கங்களுக்கும்போல வாசியற மற்றவர்களுக்கும் அவிஸ்மரணீயங்களுள் முதன்மை பெற்றதாகும்.

---

(18)

[மதுரை, ஸ்ரீ தேஶிக பக்த ஸபை 14-3-43-ல் விசேஷக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மாநம்.]

இந்த மதுரை மாநகர் கூடலம்பதியில் குழுமியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹ ப்ரமுகர்கள் பண்டிதர்கள் ஆஸ்திகர்கள் சேர்ந்த இச்சபையில், தென்னாட்டு ஞான அனுஷ்டான வைராக்ய நிதியாயும் உலக ஸமூஹத்துக்கே ஹிந்து தர்மக் கோட்பாடுகளின் மேன்மையைத் தம்முடைய வாழ்நாளில் நடத்திக் காட்டிவந்த திருக்கோட்டியூர் மஹா வித்வான் ஸ்ரீ. உப. வே. ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி, திருநாட்டை அலங்கரித்த ஸம்பவம் மிகவும் மனத்தில் துக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இதனை ஸ்வாமியின் குமாரர்களுக்கும் திருத் தம்பியாருக்கும் தேவிகளுக்கும் தெரிவிக்கிறதாகவும் தீர்மானிக்கலாயிற்று.

---

(19)

[வித்வான் வீரவல்லி. V. N. ராமஸ்வாமி B. A., B.O.L., L. T.,
ஹெட்மாஸ்டர், போர்டு ஹைஸ்கூல், சோழவந்தான்]

ஸ்ரீ உப. திருக்கோட்டியூர் ஸ்வாமி என்று திருநாமம் படைத்து, அதனல் முன்னமேயே ஆழ்வாராதிகளால் ஏற்றமுடைத்தான திருக்கோட்டியூர் என்னும் திருப்பதி, பின்னும் இசையால் திசை போகுமாறு செய்து எழுந்தருளியிருந்த ஸௌம்ய நாராயண ஆசான் ஸ்வாமி, கலியும் கெடும் வண்ணம் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல் வந்த தொத்த சிறுமாமனிசர் சிற்சிலரில் உயர்ந்த ஒருவராவர்.

கலியின் அரசு அழிதற்குக் காரணமாயினேர், கண்ணன் கழலிணையை நண்ணும் கருத்துடையார் என்பர். நாரணன் திருநாமம் என்னுமிவர் தம் மிருப்பால் நரகும் புல்லெழுந் தழியு மென்பது மிகையன்று; எஞ்ஞான்றும் உண்மையே. அத்தகைய சீரிய பண்புடைக் கோட்டியூர் ஆசான் இன்று நம்மிடைப் பிரிந்தனர். ஐயகோ! கலியின் களிப்பும், சாது சனங்களின் எளிமையும் அளவிடற் பாலனவே?

இவ்வரும் பெறற் பெரியார், ஆசாரமும் அனுட்டானமும் உரு வெடுத்தவர்; அறிவு நிறைவும் அடக்கமுடைமையும் ஒருங் கமைந்தவர்; கல்விப் பெருக்கும், கேள்விப் பன்மையும் உடன் திகழ்பவர்; வாழ்வின் இலக்கும் வழுவி லுறுதியும் வயங்கு திருவினர். திவ்யசூரி யனையார்; மாபெரும் புலவர்; தாயன்ன தண்ணியர்; வைணவ குல விளக்கு; இருகலை யுவரி; அந்தோ! மண்ணிடை மறைந்தார்! விண்ணிடை யுறைந்தார்!

இவரது மறைவு மண்ணுலகினின்ரு? அன்று; பொன்ருப் புகழ் எய்தியமையின். மாந்தர் மனத்தினின்ரே? அன்று; மனத்தி னீங்கா உள்ளம் உரையுடன் செயலு முடைமையின். பின் எவ்விடை மறைந்தனர்? அறமெனும் அண்ணலின் அயல் நின்று; கல்வியாம் கடலின் கரை நின்று. கல்லார்க்கும் கற்றவர்க்கும் ஒக்கப் பொழியும் கைம் மாறு கருதாது நிலவிய கருமுகில் மறைந்தது; ஸௌலப்யம் எனும் அருங் குணக் குன்று சென்ருெளித்தது; வைதிக தரிசனமாகிய குளிர் நிழல் தரும் தெய்வத் தரு மறைந்தது; கல்விக் கடலைக் காலன் பிரித்தான். ஈண்டு ஒருவர் இருந்தார். இனி யாண்டு அவர்க் காண்போம்?

---

(20)

[பெடரல் கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. உப. எஸ். வரதாசார்யர், இந்த ஸ்வாமி பரமபதத்தை அடைந்துவிட்டார் என்னும் ஸமாசாரத்தைக் கேட்டு மிகவும் ஶோகித்ததாக நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. தென் இந்தியா ஸ்ரீ வைஷ்ணவர்களுள் ஶோகியாதவர் ஒருவரும் இல்லையென்றே நாம் நினைக்கிறோம். —ஸ்ரீ. ந்ரு. ஸம்பாதகர்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

புரிசையில் நடந்த ஸ்ரீபாஷ்ய பரீக்ஷை

ஸ்ரீ ஸந்நிதியில் வழக்கப்படி, ஸ்ரீ அழகியசிங்கரால் புரிசையில் நடத்தப்பட்ட த்ரைமாஸிக ஸ்ரீ பாஷ்ய பரீக்ஷையில் தேறிய ஒவ்வொரு வித்வான்களுக்கும் ரூ. 30 வீதம் ஸம்பாவனை செய்யப்பட்டது.

வித்வான்களின் பெயர் :—

1. பெருகாரணை மாடபூஷி ராஜகோபாலாசார்யர் (மீமாம்ஸா சிரோமணி, மீமாம்ஸா வித்வான், மீமாம்ஸா விசாரதர்)
2. பாப்பாங்குளம் தட்டை வரதாசாரியர் (வ்யாகரண சிரோமணி)
3. களத்தூர் கோயில் சப்தம் வங்கிபுரம் வீரராகவ தீக்ஷிதர் (வ்யாகரண சிரோமணி)
4. சொக்கனூர் மாடபூஷி நரஸிம்மாசாரியர் (வ்யாகரண சிரோமணி, வ்யாகரண வித்வான்)
5. திருப்பதி தட்டை வாஸுதேவாசாரியர் (ந்யாய சிரோமணி)

---

(2)

ஸ்ரீமத் உபய வே. புலிக்குன்றம் அத்தூர் வங்கீபுரம் தூப்புல் நகர் ஜடாப்ரம்ஹசாரி ஆராவமுதாசார்ய ஸ்வாமி

ஸ்ரீ தேசிகன் திருவவதார ஸ்தலத்தில் திருப்பணி கைங்கர்யங்களையே தமக்கு நிரூபமாக நடத்திக்கொண்டிருந்த இந்த ஸ்வாமி திருநாடலங்கரித்த விஷயம் தந்தி மூலம் தெரிந்தது. இதற்குமேல் நம் தேசிக தர்சநத்தில் ஶோசநீயாம்சம் வேறொன்றில்லை. தேசிகன் திருவடிவாரத்தில் தூப்புலடியார் ஸம்ருத்திக்காகவே ஒரு பாடசாலை அமைத்தும், அது என்றும் நிலைத்திருக்கவேண்டும் என்னும் திருவுள்ளத்தாலே மைஸூர் ப்ரம்ஹதந்த்ர மடத்து ஆஸ்தாநத்தில் தத்காலம் எழுந்தருளியிருக்கும் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ அபிநவ ரங்கநாத ப்ரம்ஹதந்த்ர பரகால மஹா தேசிகன் ஸ்வாதீநமாக ஆக்கி, தம் தேஹத்தையும் ஶ்ரமத்தையும் பாராதே த்ரவ்யார்ஜநம் பண்ணி மூலதநமும் சேர்த்தும், இன்னும் சேர்ப்பிக்கவும் வேணுமென்னும் பரிவாலே வடதேசத்திற்கு எழுந்தருளி டப்பா என்கிற இடத்தில் ஒரு மந்திரத்தில் திருநாடு அலங்கரித்தார்.

இவர் கட்டிவைத்த பரகால மடத்தில்தான் ராமாநுஜ தயாபாத்ரோத்ஸவமும் ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரோத்ஸவம் முதலானவைகளும் நடைபெற்றன வென்பதையும் ஞாபக மூட்டுகின்றோம்.

தி. நரஸிம்மதாத தாஸன்.

---

(5)

ஸ்ரீ தேசிக பக்த ஸபை, மதுரை

கோஷ்டீபுரம் ஸ்ரீ தேஶிக தர்ஶந விஜயத்வஜ மஹா வித்வாந் ஸ்ரீ உப. ஸௌம்ய நாராயணார்ய ஸ்வாமி திருநாடலங்கரித்துவிட்ட விஷயமாகச் சென்ற மார்ச்மீ 14வ காலை 9 மணிக்கு, மதுரை ஸ்ரீ ஹநுமான் ஸந்நிதியில் ஷை ஸபையின் கூட்டம் ஒன்று சேர்ந்தது. ஸ்ரீ உப. கே. ஆர். அண்ணாத்துரை ஐயங்கார் ஸ்வாமி அக்ராஸநம் வஹித்தார். ஸபா வித்வானாகிற நெரூர் ஸ்ரீ உப. நாராயண ஐயங்கார் ஸ்வாமி, ஸ்ரீமான்கள் கே. ராம ஐயங்கார், டி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ராவ் பஹதூர் ஆர். நரஸிம்ஹ ஐயங்கார், ஆர். ஸ்ரீநிவாஸ வரத ஐயங்கார் முதலிய ஆஸ்திகாக்ரேஸரர்கள் அக்காலத்தில் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தார்கள். ஸ்வாமி அப்ரதீக்ஷிதமாகத் திடீரென்று இந்த விபூதியிலிருந்து மறைந்துவிட்டதைப் பற்றி இந்த ப்ரதேஶத்திலுள்ள ஆஸ்திக ஜனங்களெல்லாரும் மிகவும் ஶோகிப்பதாகத் தீர்மானமொன்று அந்த ஸங்கத்தால் நிறைவேற்றப்பட்டது. ஸபா வித்வாந் நெரூர் ஸ்ரீ உப. நாராயண ஐயங்கார் ஸ்வாமியால், ஸ்வாமியின் ஜ்ஞாநாநுஷ்டாந மஹிமையைப்பற்றி எழுதப்பட்டிருந்த ப்ரஶம்ஸா லேகமொன்று படிக்கப்பட்டு ஸங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீமான்கள் நெரூர் நாராயண ஐயங்கார், கே. ராம ஐயங்கார், டி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் முதலான பெரியோர்கள் ஸ்வாமியின் ஆத்ம குணங்களின் ஏற்றத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசினார்கள். அதன் பிறகு, மதுரைத் தமிழ் ஸங்க வித்வான் ஸ்ரீ உப. டி. கே. ராமாநுஜ ஐயங்கார் ஸ்வாமியால் இயற்றப்பெற்ற ஸ்வாமி விஷயமான ஐந்து பாசுரங்கள் படிக்கப்பட்டன. அதனுடன் ஸங்கம் முடிவு பெற்றது.

ப ஞ் சா ங் க ஸ ங் க் ர ஹ ம்

ஸர்வபாநு ஸூ சித்திரை மீ

1வ புதன்கிழமை	—	மேஷ சுக்ல தசமி திதி : ஸ்ரீ ராமநவமி.
2வ வியாழக்கிழமை	—	அதிதி.
3வ வெள்ளிக்கிழமை	—	ஏகாதசி திதி : ஸர்வ ஏகாதசி.
7வ செவ்வாய்க்கிழமை	—	சித்ரா பூர்ணிமா : ஸ்ரீ மதுரகவிகள் திருநக்ஷத்ரம்.
9வ வியாழக்கிழமை	—	த்விதீயை - த்ருதீயை திதித்வயம்.
17வ வெள்ளிக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி.
21வ செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ அமாவாஸ்யை.
24வ வெள்ளிக்கிழமை	—	அக்ஷய த்ருதீயை.
25வ சனிக்கிழமை	—	எம்பெருமானார் திருநக்ஷத்ரம்.
30வ வியாழக்கிழமை	—	மேஷ சுக்ல நவமி திதி.
31வ வெள்ளிக்கிழமை	—	வ்ருஷபரவி : 33 - 46. சூந்யதிதி.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
त्यञ्जसीवयखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸ்வாமியின் நிர்யாணம்.

நம்முடைய வாழ்நாளில் நேரும் அநேக ஸம்பவங்கள் நம்முடைய ஆராய்ச்சிக்கு எட்டாத அளவு அதி துர்ஜ்ஞேயங்களாகவே இருக்கின்றன. யுத்தம், துர்ப்பிக்ஷம், ஸங்காத மரணம், வ்ருத்தர்களான மாதா பிதாக்கள் ஜீவித்திருக்கும் காலத்தில் யுவாக்களான புத்ராதிகளின் நிர்யாணம், ஜகத்திற்கு மஹோபகாரர்களாகவும் பரார்த்தைகபரர்களாகவும் இருப்பவர்களுக்கு நேரும் துர்த்தசை, ஜகத்தின் ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸுக்காக வென்றே அவதரிப்பிக்கப்பட்டுள்ள ஸத்வோத்தரர்களான ப்ரஹ்ம வித்துக்கள் தாம் அவதரித்த கார்யம் ஸமக்ரமாகப் பூர்த்தி பெறுவதற்கு முன்னமேயே இந்த விபூதியிலிருந்து மறைந்துவிடுவது, இத்யாதியான ஸம்பவங்கள் சிற்சில காலங்களில் நம்முடைய புத்தியைச் சலிப்பிக்கின்றன. ஜகத் முழுவதையும் தமது கிரணங்களால் ப்ரகாஶிப்பித்துக்கொண்டிருக்கும் ஸூர்யன் திடீரென்று நடுப் பகலில் காணாமற் போய்விட்டால் ப்ரஜைகளெல்லாம் எவ்விதம் தபிப்பார்களோ, அவ்விதமன்றோ நாம் இம்மாதிரியான ஸம்பவங்கள் நேரும் காலத்தில் தபிக்கின்றோம்? இந்தக் கார்யங்களெல்லாம் பகவானுடைய ஸங்கல்பத்தால் நேர்கின்றன வென்றால், 'கருணாநிதியாகவும் ஸர்வஜ்ஞனாகவும் இருக்கும் அந்தப் பகவான் இம்மாதிரியான கார்யங்களை ஸங்கல்பிப்பனோ' என்னும் ஶங்கை ஜனிக்கின்றது. தோட்டத்தில் புஷ்பச் செடிகளையும், பல வ்ருக்ஷங்களையும் மிக்க ஆசையுடன் வளர்த்து, அவைகள் புஷ்பங்களையும் பலங்களையும் கொடுப்பதற்கு உன்முகமாக இருக்கும் காலத்தில் அவைகளை வெட்டித்

தள்ளும் தோட்டக்காரனு முண்டோ? ஸகல ரூப லக்ஷணமும் பொதிந்து நிற்கும்படி ப்ரதிமை ஒன்றை நிர்மாணம் செய்து, அதை ரஸிகர்கள் அநுபவிக்கும் முன்னதாகவே சின்னா பின்னமாக உடைத்துத் தள்ளும் ஶில்பியும் இந்த லோகத்தில் இருக்கிறனே? வேதாந்தத்தில் உயர்ந்த நிரூபணம் செய்யுமவர்களும் இம்மாதிரி ஸம்பவங்கள் நேரும் காலத்தில் ஶோகம் தாங்கமாட்டாமல் 'இது என்ன விபரீதம்?' என்று பலமான ஶங்கையைச் செய்கிறுர்கள். ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸ்வாமி, ஜகதுபகாரத்திற்காகக் கருணாநிதியான பகவானுல் அவதரிப்பிக்கப்படும் ஆசார்யர்களுள் ஒருவரன்றே? அந்த ஸ்வாமியைத் திடீரென்று அந்தப் பகவான் தனது ஸமீபத்திற்கு அழைத்துக்கொண்டுவிட்டான் என்ருல், அது எவருக்கு ஸஹிக்கும்? 'அவருடைய கல்யாண குணங்களை அநுபவித்து அவருடைய கடாக்ஷத்தால் நாம் உஜ்ஜீவிக்கலாம்' என்று மநோரதித்து வந்த ஜநங்களெல்லாரும் ஶோக ஸாகரத்தில் மூழ்கி இருக்கிறுர்களே! பகவானுடைய ஸர்வஜ்ஞத்வத்தையும் அவனுடைய லீலையையும் நன்கு உணர்ந்துள்ள பெரியோர்களும் ஶோக வேகத்தால் 'இது என்ன ஆஶ்சர்யம்?' என்று சிறிது காலம் தடுமாறினுர்களே! அப்படிப்பட்ட அநர்க்கமான ரத்நம் அந்த வ்யக்தி என்பதற்கு அதுவே போதுமான அடையாளமன்றே?

ஸ்ரீ வைஷ்ணவ ப்ரஹ்மவித் பரம்பரையில் ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பந்நர்களான மஹான்கள் பலருண்டு. அவர்களுள் 'இன்னர் ப்ரஶம்ஸைக்கு அர்ஹர்' என்று ஒருவரை மாத்ரம் பொறுக்கிப் புகழ்வது துஸ்ஸாத்யம். இருந்தபோதிலும், அநுபவம் ஆர்த்ரமாக இருக்கும் தஶையில் வியோகம் அதிதுஸ்ஸஹமா யிருக்குமாகையால், இந்த ஸ்வாமியுடன் ஸாக்ஷாத் ஸமாகமம் பெற்று அவருடைய கோஷ்டீ ஸுகத்தை நேரில் ஸமீப காலத்தில் அநுபவித்தவர்களுட் பலர், ப்ரஶஸ்தவ்யரான அவரை ப்ரஶம்ஸித்துத் தமது ஶோகத்தின் பரீவாஹமாக அவரைப்பற்றி ப்ரஶம்ஸா பத்ரங்களை எழுதி அனுப்பி இருக்கிறுர்கள். நாமும் அந்தக் கைங்கர்யத்தில் கொஞ்சம் அந்வயிக்கலாமென் றெண்ணி அவரைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லத் துணிகின்ருேம்.

அந்த மஹானுடைய ஜ்ஞாநப் பெருமையைப்பற்றி, அதை நன்கு அறியக்கூடிய ஶக்தி உடையவர்கள் விஸ்தாரமாகப் புகழ்ந்திருக்கிறுர்கள். அதைப் புகழ்ந்து பேசுவதற்கு நமக்குத் தததநுரூபமான ஸாமர்த்யமில்லை யாதலால், அதில் நாம் ப்ரவர்த்திக்கவில்லை. சந்த்ரனிடத்தில் ஆஹ்லாதகரத்வம்போல அவரிடத்தில் இயற்

கையாக ப்ரகாஶித்துவந்த ஆத்மகுணங்கள் சிலவுண்டு. அவைகளைப்பற்றி மாத்ரம் ஸ்வல்பம் ப்ரஸ்தாவிக்கிறோம். ஶ்ருதியில் ப்ரஹ்ம வித்துக்கள், 'ப்ரஹ்மதத்வம் பரிஶுத்தமானது, அது பரிபூர்ணமான வஸ்து' என்பதை உணர்ந்து, "बाल्येन तिष्ठासेत्" [ஸ்வ மாஹாத்ம்யாநாவிஷ்கார ரூபமான பாலர்களின் கர்மாவை அங்கீகரித்து வர்த்திக்கவேண்டும்] என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—'நாம் ப்ரஹ்ம தத்வத்தை அறிந்துவிட்டோம்; அப்படிப்பட்ட மாஹாத்ம்யம் நம்மிடம் இருக்கின்றது' என்னும் ஜ்ஞானமே இராமலிருந்தால் எப்படி தமது மாஹாத்ம்யம் ஆவிஷ்கரிக்கப்படாமல் இருக்குமோ, அப்படி அவர்கள் பாலர்கள் போல வர்த்தித்தல் வேண்டும் என்பது தான். 'இப்படி இருப்பது ஸாத்யமா? இது ஒரு அத்யுக்தியே' என்று நாம் நினைத்திருந்தோம். 'இது அத்யுக்தி யன்று; மநுஷ்யர்களால் ஸாத்யமான அநுஷ்டானமே' என்பதை இந்த மஹாநுடைய சரித்ரம் நன்கு விளக்கிற்று. அந்த ஸ்வாமியைப் பார்த்தால் பாலர் போலத் தோன்றுமே தவிர்த்து, ப்ரஹ்ம ஜ்ஞாந முற்றவர் என்று வெளியில் தெரியமாட்டாது. வித்யா மதம் என்பது காம க்ரோதங்கள்போல் ப்ரக்ருதி ஸம்பந்தம் பெற்றுள்ள எல்லாரையும் ஆக்ரமித்தே நிற்கும். அதை ஜயித்தவர் இந்த மஹான். கர்வ மென்பது ஸ்வல்பம்கூட அவரிட மில்லை; எல்லாருக்கும் அத்யந்தம் ஸுலபர். இது அவரிடம் காணப்பட்ட ஒரு அபூர்வமான குணம்.

இரண்டாவது: பிறரால் பரிபவாதிகள் ஏற்பட்டால், அப்பொழுது எவ்வித சித்த விகாரத்தையும் அடையாமல் அவர்களிடம் கரைபுரண்ட க்ருபையையும், 'அப்படிப் பரிபவிப்பதால் நமக்கு அவர்கள் மஹத்தான உபகாரத்தைச் செய்கிறார்கள்' என்னும் உண்மையான உபகார ஸ்ம்ருதியையும் செய்கிறவர்களை நாம் இதுபர்யந்தம் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை. இந்த மஹானோவென்றால், கசக்கக் கசக்க வாஸநா விஶேஷங்களை வெளியிடும் புஷ்ப விசேஷங்கள்போல, பிறரிடமிருந்து க்லேஶங்களைப் பெறப்பெற அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு உபகாரம் செய்வதிலேயே த்ருஷ்டியுள்ளவராக வர்த்தித்தாரே ஒழிய, 'தன்னைக் கொல்லவந்த பசுவையும் கொல்லலாம்' என்னும் ந்யாயத்தை ஒரு பொழுதும் மநஸ்ஸால்கூட ஸ்மரித்தவரல்லர். कतरकोटिगतोऽयं गुणः?

மூன்றாவது: 'பகவானே நமது ரக்ஷகன்; அநிஷ்ட நிவ்ருத்தியும் இஷ்ட ப்ராப்தியும் அவன் அதீநம்' என்னும் தேற்றம் அவரிடம் த்ருடமாக இருந்தது. அல்ப பயத்திற்குக் காரண

மான ஸாமக்ரிகளைக் கண்ட மாத்ரத்தில் மிகுந்த பரபரப்புடன் தமது ரக்ஷணத்தைத் தேடிக்கொள்ள மஹத்தான ப்ரயத் நங்களை லோகத்தில் எல்லாரும் செய்கிறார்களன்றோ? புலி ஸிம்ஹம் முதலியவைகளைக் காண்கையிலும் ராகவனிடமிருந்த விஸ்வாஸ விசேஷத்தால் ஸீதாப்பிராட்டி எப்படி எவ்வித பயத்தையும் அடையாமல் இருந்தாரோ, அம்மாதிரியே இந்த மஹான் ஸ்ரீ ஶரண்யனுடைய க்ருபையில் இருந்த மஹா விஸ்வாஸத்தால், எவ்வித பய ஹேதுக்கள் நேரும்பொழுதும் நிர்விகார சித்தராகவே இருந்து வந்தார். இப்படிப்பட்ட ஆஸ்சர்யகரங்களான குண விசேஷங்கள் ப்ரமஹ்வித்துக்களிடம் உண்டு என்று க்ரந்தங்களில் நாம் படித்திருக்கிறோம். 'அவை க்ரந்த மாத்ர பர்யவஸாயிக ளல்ல; சிற்சில வ்யக்திகளிடமும் இந்த லோகத்திலும் தென்படக் கூடியவைகளே' என்பதை இந்த மஹானிடத்தில் நிதர்ஶநமாக நாம் கண்டோம்.

இவர் ஒரு பக்தோத்தமர். பகவானுடைய கல்யாண குண விசேஷங்களின் அநுபவத்தில் இந்த மஹானுக்கு இருந்த உத்ஸாஹம் அந்யாத்ருஶம். அது காரணமாகத் தெளியாத மறை நிலங்களைத் தெளிவிக்கும் ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளிலும், பராஶர வ்யாஸ வால்மீகி ப்ரப்ருதிகளுடைய முகத்திலிருந்து ப்ரவஹித்துள்ள அம்ருத த்ரவ ஸம்மிதங்களான இதிஹாஸ புராணங்களிலும் அதிமாத்ரமான அபிநிவேஶம் இந்தப் பக்தோத்தமரிடம் இருந்தது. இவைகளிலுள்ள அபிநிவேஶாதிக்யத்தைப் பார்த்த சில ஸாமாந்ய ஜநங்கள் 'இந்த ஸ்வாமி ஒரு பௌராணிகரே' என்று பேசினதை நாம் கேட்டிருக்கிறோம். கல்யாண குணாநுபவத்திலுள்ள ஆநந்த விசேஷத்தை அறியாத ஜநங்கள் வேறு என்ன சொல்வார்கள்? இந்தப் பௌராணிகரால் செய்யப்படும் ஸ்ரீமத் ராமாயண கதா ப்ரவசநங்களைப் பல ஸமயங்களில் நாம் கேட்டிருக்கிறோம். இவருடைய ப்ரவசநங்கள் மற்றவர்களிடம் போலக் கேவலம் முகத்திலிருந்து வரும் வார்த்தைக ளல்ல; நாம் ரஸாநுபவம் செய்வதுபோல ஸ்ரோதாக்களும் அந்த ரஸத்தை அநுபவிக்கவேண்டும் என்னும் உத்கடமான நோக்கத்துடன் ஹ்ருதய குஹையிலிருந்தும் அதற்கும் அந்தர்ப்பூதமான அந்த ராத்மாவிடமிருந்தும் ப்ரவஹித்து வரும் ப்ரவாஹங்கள். அம்மாதிரியான கதைகளின் முடிவில் அவருடைய திருமேனியில் தோன்றும் வாட்டத்தை அநுபவித்தவர்களே அதன் உத்வேகத்தை அறிவார்கள். இவ்விதமான ஆயாஸம் நேரும் பொழுதெல்லாம் அந்த

ஸ்வாமி ஒரு விவிக்த ஸ்தலத்தைத் தேடி ஐகாக்ர்யத்துடன் ஸ்ரீ ஶரண்யனுடைய கமலத் திருவடிகளை த்யானிப்பார். அதுவே அவருடைய வாட்டத்தை மாற்றும். மற்றவர்களுக்கு க்ஷீராதி ஸேவனம் போல இவருக்கு இந்த அம்ருதஸேவனம்.

நிற்க, இந்த மஹான் ஒரு பெரிய் வைராக்ய நிதி. இதை இவருடன் நெருங்கிப் பழகினவர்கள் மாத்ரம் அறிவார்கள். புத்ர மித்ராதிகளுடன் ஸம்பாஷித்து வ்யவஹரிக்கும்பொழுது அவர்களுடைய ஸுகத்தில் தாமும் ஸுகிதராகவும் அவர்களுடைய துக்கத்தில் துக்கிதராகவும் இருந்தாலும் இவருடைய அந்தராத்மா எப்பொழுதும் ஸ்ரீ ஶரண்யனுடைய பாதாரவிந்தத்திலேயே ரமித்துக்கொண்டிருக்கும். பரஸ்பரம் விருத்தங்கள்போல இருக்கும் இம்மாதிரியான இருவகை அநுபவத்தை அநுபவிக்கும் மஹான்கள் இந்த லோகத்திலும் உண்டு. இதை ஒரு ஆங்கில கவி மிகவும் ரஸவத்தாக வர்ணித்திருக்கிறார்.

“There are in this loud stunning tide
Of human care and crimes,
With whom the melodies abide
Of the everlasting chimes;
Who carry music in their heart
Through dusky lane and wrangling mart
Plying the task with busier feet,
Because their souls a holy strain repeat.”

இப்படிப்பட்ட ஜ்யோதிஸ் அஸ்தமயத்தை அடைந்துவிட்டது. பகவானுடைய ஸங்கல்பம்.

विना त्वत्सङ्कल्पादणुरपि वृषाद्रीश न चलेत् ॥

*　　　*　　　*

இந்த ஸஞ்சிகையில் ப்ரகாஶிக்கப்பட்டிருக்கும் வ்யாஸங்களைத் தவிர்த்து வேறு அநேக வ்யாஸங்களையும் நாம் வரப்பெற்றிருக்கிறோம். அவைகள், காலம் க்ரமித்துக் கிடைத்தபடியால், இந்த ஸஞ்சிகையில் ப்ரகாஶிப்பிக்கப்படாமல் நின்றுவிட்டன. அடுத்த ஸஞ்சிகையில் அவை பிரகாஶிப்பிக்கப்படும்.

2/10/12

ஸ்ரீ:

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—3—'43 to 31—3—'43

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

	For 1942.	Rs.	A.
1.	Sri E. Ramanujachariar, Trivellore ...	1	0
2.	,, K. Rajagopala Iyengar, Tirupullani, Ramnad District ...	3	0
3.	,, V. Ramaswami Iyengar, Pugaloor Sugar Factory Post ...	3	0
4.	,, K. Rajagopalachariar, Loco Stores, S.I.R.y., Villupuram ...	3	0
5.	,, K. Gopalaswami Iyengar, T.A. High School, Tiruvadamaruthur ...	3	0
	For 1943.		
1.	Sri M. Satagopachariar, Oragadam Village, via Thirukkalikunram ...	3	0
2.	,, S. Varadachariar, Sankarambadi Village ...	3	0
3.	,, T. L. Subbiar, B.A., B.L., Tirukkarugavoor ...	3	0
4.	,, V. Krishnaswami Iyengar, Visveswarapuram, Bangalore ...	3	0
5.	,, V. Ramaswami Iyengar, Pugaloor Sugar Factory Post, Karur Taluk ...	3	0
6.	,, V. Rajagopalachariar, Little Conjeevaram ...	3	0
7.	,, D. Ramaswami Iyengar, Advocate, Mylapore ...	3	0
8.	,, V. Aravamuda Iyengar, Srirangam ...	3	0
9.	,, A. V. Narasimha Iyengar, Kalahastri ...	1	0
10.	,, Ayanam Krishnaswami Iyengar, Madurantakam ...	3	0
11.	,, R. Santanam Iyengar, Tyagarayanagar	3	0
12.	,, I. Srinivasachariar, Teacher, Saidapet ...	1	0
13.	,, P. N. Krishnaswami Iyengar, Coimbatore ...	3	0
14.	,, K. V. Venkatachary, Vakil, Namakal	3	0
15	,, G. Gopalasrinivasachariar, B.A., B.L., Shermadevi. Tinnevelly District...	3	0
16.	,, T. Doraiswami Iyengar, Kizkovanavedu ...	3	0
17.	,, M R. A. Iyengar, Central Recording Office, New Custom House, Bombay	3	0
18.	,, Srinivasasundaram Iyengar, Agent, Sri Ahobila Mutt, Veeraraghavapuram	3	0
19.	,, V. K Veeraraghava Iyengar, Vangal ...	3	0
20.	,, N. V. Chary, New India, Assurance Co., Bombay ...	3	0
21.	,, K. R. Krishnaswami Iyengar, Bangalore ...	3	0
22.	,, M. C. Durairajan, Advocate, G. T. Madras ...	3	0
23	,, B. K. Kuppuswami Iyengar, Poona ...	3	0
24.	,, A N. Krishna Iyengar, Srivilliputhur ...	3	0
25.	,, T. S. Nambi Iyengar, Vakil, Trivandrum ...	3	0
26	,, T. Manikka Naicker, Sevvapet, Salem ...	3	0
27.	,, C. Alavandar Naidu, Thiruchitrambalam ...	3	0
28	,, Paranji Krishnaswami Iyengar, G.T., Madras ...	3	0
29.	,, P. K. Doraiswami Iyengar, Advocate, Park Town, Madras ...	3	0
30.	,, S. Krishnaswami, Motilal Street, Town Extension, Kumbakonam ...	3	0
31	,, N K. Srinivasa Iyengar, Nerur Village, Karur ...	3	0
32	,, S. Ramaswami Iyengar, Pallavaram ...	3	0
33.	,, N. Krishnaswami Iyengar, Pleader, Karur ...	3	0
34.	,, R. Veeraraghava Iyengar, Bhavani ...	3	0
35.	,, M. S Achariar, Mukkur Village	3	0
36.	,, S. A. Rajagopala Iyengar Masulipatam ...	3	0
37.	,, P S. Raghavachari, Inspector of Police, Namakal ...	3	0
38	,, A. Narasimha Iyengar, Srirangam ...	3	0
39.	,, R. R Chari, Advocate, Saidapet	3	0
40.	,, A. S. Soumyanarayanachariar, 179, North Chittra Street, Srirangam ..	3	0

(இந்த ஸஞ்சிகையுடன் பதினாறு ஸஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. 1942-வது வருஷத்திய சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்பட மாட்டாது)

Regd. No. M. ***4437***

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

இது ஸ்ரீ அஹோபில மடத்தால் ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும் பத்ரிகை. இதன் நோக்கங்களாவன :—

1. ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஆஸ்திக்யத்தை வ்ருத்தி செய்வது.

2. ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதத்தின் விசேஷ தத்வங்களைப் பற்றி தத்வ வித்துக்களின் ஸஹாயத்தைக்கொண்டு வ்யாஸங்களை வெளிப்படுத்துவது.

3. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் நடைபெறும் நித்யோத்ஸவாதிகளைப்பற்றியும் மற்றும் ஸ்ரீ ஸந்நிதி ஸம்பந்தங்களாக அப்பொழுதுக் கப்பொழுது நடைபெறும் வ்ருத்தாந்தங்களைப் பற்றியும் குறிப்புக்களை ஸங்க்ரஹிப்பது.

4. வைதிகாசாரம் வேதோக்த மதம் இவைகளைக் காப்பாற்றுவதற்கு வேறு உபாயங்களைத் தேடுவது.

5. இவைபோன்ற மற்றை கார்யங்களைச் செய்வது.

விளம்பரம்:— இந்தப் பத்ரிகையில் விளம்பரங்களுக்குப் பின் கூறப்பட்டுள்ள வீதம் சார்ஜு வஸூல் செய்யப்படும்.

(1)	முழுப்பக்கம் ஒருதடவைக்கு		ரூ.	4—0—0
(2)	ஷை	3 மாஸங்களுக்கு	,,	10—0—0
(3)	ஷை	6 ,,	,,	18—0—0
(4)	ஷை	12 ,,	,,	34—0—0

பாதிப் பக்கத்திற்குப் பாதி சார்ஜும், கால் பக்கத்திற்கும் அதற்குக் குறைந்த பாகத்திற்கும் கால் சார்ஜும் செய்யப்படும். சார்ஜு முழுவதையும் முன்பணமாகவே செலுத்த வேண்டும்.

இந்தப் பத்ரிகைக்குச் சந்தாதாரர்கள் ஆயிரம் பெயர்கள் இருக்கிறார்கள்.

: ஆபீஸ் விலாஸம் :

5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், மதராஸ்.

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.